


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | டிசம்பர் 2, 2010 | புரட்சி 9 | முழக்கம் 47 | விலை: ரூ.2.50


# "குடிஅரசு" வழக்கு: உச்சநீதிமன்றத்திலும் வீரமணி கரி பூசிக் கொண்டார்

## *வழக்கை விசாரணை நிலையிலேயே நீதிமன்றம் தள்ளுபடி செய்தது*

'குடிஅரசு' வெளியீட்டு வழக்கை உச்சநீதிமன்றம் கொண்டு சென்ற வீரமணி, அங்கும் மூக்குடைபட்டார். கி. வீரமணி தொடர்ந்த வழக்கை விசாரணைக்கு ஏற்பதற்கே உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது. 'குடிஅரசில்' பெரியாரின் பேச்சு-எழுத்துக்களை மக்கள் மன்றத்துக்குக் கொண்டு செல்லும் பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தும் தீவிர முயற்சிகளில் தொடர்ந்து கி.வீரமணி ஈடுபட்டு கடும் தோல்விகளையே தொடர்ந்து சந்தித்து வருகிறார்.

பெரியார் நூல்களை வெளியிடும் உரிமை தமது அறக்கட்டளைக்கு மட்டுமே உண்டு; பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டது, தமக்கான காப்பீட்டு உரிமையில் குறுக்கிடுவதாகும் என்று கூறி, ரூ. 15 லட்சம் இழப்பீடு கேட்டு உயர்நீதிமன்றம் வந்தார் கி. வீரமணி. கி.வீரமணிக்கு பெரியார் காப்பீட்டு உரிமை ஏதும் வழங்கவில்லை. அதற்கான ஆவணமும் அவரிடம் கிடையாது என்று உயர்நீதிமன்ற நீதிபதி கே. சந்துரு திட்டவட்டமாக தீர்ப்பளித்தார். (27.7.2009) வீரமணி விடவில்லை. அடுத்த இரண்டு நாட்களிலேயே உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை வாங்கினார் (29.7.2009). வழக்கு இரண்டு நீதிபதிகளடங்கிய மேல் அமர்வுக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் எஃ.எம். இப்ராகிம் கலிஃபுல்லா, என். கிருபாகரன் ஆகியோர் நீதிபதி கே. சந்துரு வழங்கிய தீர்ப்பையே உறுதி செய்து கி.வீரமணியின் மனுவை தள்ளுபடி செய்தனர். (9.6.2010)

தீர்ப்பு வெளிவந்த உடனேயே பெரியார் திராவிடர் கழகம் அடுத்த இரு நாட்களில் 'குடிஅரசு' 27 தொகுதிகளையும் வெளியிட்டுவிட்டது. அதற்குப் பிறகும் வீரமணி விடவில்லை; 5 மாத இடைவெளிக்குப் பிறகு (இதற்காகவே உயர்நீதிமன்றத் தீர்ப்பை அதிகாரப்பூர்வமாக பெற்றுக் கொள்ளாமல், காலம் கடத்தினார்) உச்சநீதிமன்றம் போனார். நவம்பர் 26 ஆம் தேதி சிறப்பு விடுவிப்பு மனு ஒன்றை தாக்கல் செய்து, உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு இடைக்காலத் தடையை கோரினார். தனது சார்பில் வாதாட பிரபலமான வழக்கறிஞரான கே.கே.வேணுகோபாலை நியமித்தார். (கே.கே.வேணுகோபால் உச்சநீதிமன்றத்தில், இடஒதுக்கீட்டுக்கு எதிராக வழக்காடியவர். தற்போது பரபரப்பாக பேசப்படும் '2ஜி ஸ்பெக்ட்ரடம்' பிரச்சினையில் சி.பி.அய். தரப்பு வழக்கறிஞர்)

வழக்கு விசாரணை நவம்பர் 27 ஆம் தேதி நடுப்பகல் நீதிபதிகள் தல்வீர்பண்டாரி, தீபக் வர்மா ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரணைக்கு எடுத்த உடனேயே நீதிபதி தல்வீர் பண்டாரி, கி. வீரமணியின் வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால் அவர்களைப் பார்த்து, "இது மேல்முறையீட்டுக்கு உரிய வழக்குதானா ? ஒரு நூலின் ஆசிரியர் இறந்து 25 ஆண்டுகள் முடிந்துவிட்டால், பதிப்புரிமை கோர முடியாது என்று சட்டம் தெளிவாகக் கூறும்போது, இப்படி ஒரு வழக்கை நீங்களே எடுத்துக் கொண்டு வரலாமா ?" என்று கேட்டார். கே.கே.வேணுகோபால், தொடர்ந்து ஏதோ பேச முற்பட்டபோது, "இந்த வழக்கிற்கு தொடர்பில்லாதவைபற்றி எங்களுக்கு அக்கறை இல்லை; சாரி மிஸ்டர் வேணுகோபால்" என்று கூறி மனுவை விசாரணைக்கு ஏற்காமலே தள்ளுபடி செய்து விட்டனர். உயர் நீதிமன்றம் ஏற்கனவே அளித்த தீர்ப்பில், தலையிடத் தயாராக இல்லை என்று நீதிபதிகள் தெரிவித்தனர். உச்சநீதிமன்றத்தில் கழக சார்பில் மூத்த வழக்கறிஞர் பசவ பிரபு எஸ்.பட்டீல் ஆஜரானார். அவருடன், வழக்கறிஞர்கள் சபரீஷ் சுப்ரமணியம், மயில்சாமி, தேபாசிங் மிஸ்ரா ஆகியோரும் ஆஜரானார்கள்.

# இதோ, மற்றொரு தொலைபேசி உரையாடல்

***மேல் மட்டத்தில் உள்ளவர்கள் தொலைபேசியில் பேசிய உரையாடல்கள் வருமான வரித் துறையால் பதிவு செய்யப்பட்டு, பக்கம் பக்கமாக பத்திரிகைகளில் பரபரப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது. நாமும் இது பற்றி சிந்தித்தோம். தந்தை பெரியார் 'தமிழர் தலைவர்' வீரமணியிடம் தொலைபேசியில் பேசியிருந்தால்....***

***பெரியார்*** : *ஹலோ, யாரது வீரமணியா?*

***வீரமணி*** : *ஆமாம்; நான் தான். தமிழர் தலைவர் மானமிகு அய்யா வீரமணி பேசுகிறேன். நீங்கள் யார் பேசுவது?*

***பெரியார்*** : *என் குரல் உனக்கு புரியவில்லையா? நான் தான் ஈ.வெ.ரா. பேசுகிறேன். என்னை நினைவிருக்கிறதா?*

***வீரமணி*** : *அய்யோ, அய்யாவா! எப்படி அய்யா இருக்கிறீர்கள்; கடுமையான அரசியல் வேலைகளில் மூழ்கியிருப்பதால், உடனே உங்கள் குரல் நினைவுக்கு வரவில்லை. மன்னித்து விடுங்கள். இப்போதுதான், உங்கள் பிரச்னைக்காகத்தான், விமானத்தில் டெல்லிக்குப் போய் விட்டு திரும்பினேன்.*

***பெரியார்*** : *என்னது? என்னுடைய பிரச்னைக்காகவா? அதுவும், டெல்லியிலா? அப்படி என்ன தலைபோகிற அவசர பிரச்னையப்பா?*

***வீரமணி*** : *அய்யா, நீங்கள் 'குடிஅரசு' என்று ஒரு வாரப் பத்திரிகை நடத்தினீர்கள் அலலவா? அதில் நீங்கள் பேசியதை, எழுதியதை எல்லாம், இங்கே பெரியார் தி.க. என்று ஒரு 'துரோகிகள்' அமைப்பு தொகுத்து நூலாக வெளியிட்டு விட்டார்கள். அவையெல்லாம் வெளியே யாரிடமும் போய்விடக் கூடாது என்று பத்திரமாக, ரகசியமாக இத்தனை ஆண்டுகாலம் பொத்தி பொத்தி பாதுகாத்தேன். இந்தப் "பாவி"கள் எப்படியோ எவர் எவரிடமிருந்தோ தேடிப் பிடித்து, வெளியே கொண்டு வந்து விட்டார்கள்! எவ்வளவு பெரிய துரோகம் பார்த்தீர்களா? இவர்களை எப்படி சும்மா விடுவது? சென்னையிலே வழக்குப் போட்டேன்; நீதி கிடைக்கவில்லை. அதற்காக விட்டு விடலாமா? டெல்லியிலே உச்சநீதி மன்றத்துக்கும் போனேன். 'பாவி'கள்; அங்கேயும் தள்ளுபடி செய்து துரோகிகளுக்கு ஆதரவாக உத்தரவிட்டு விட்டார்கள் அய்யா!*

***பெரியார்*** : *என்னுடைய கருத்துகளை வெளியிட்டு பரப்புவது எப்படியப்பா, துரோகமாகும்? என்னுடைய கொள்கைகளைப் பரவ வேண்டும் என்பதற்குத்தானே, அறக்கட்டளை சொத்துகள் எல்லாம் விட்டுவிட்டு வந்தேன்?*

***வீரமணி*** : *நீங்கள் விட்டுவிட்டுப் போன அறக்கட்டளையையும், சொத்துகளையும் பாதுகாக்க வேண்டாமா, அய்யா? அது தானே முக்கியம். இப்போது உங்கள் நூலுக்கு உரிமை கொண்டாடுகிறவர்கள் நாளைக்கு, உங்கள் சொத்துகளுக்கும் உரிமை கொண்டாடினால், என்னாவது? தமிழர் சமுதாயமே அழிந்து பாழாகிப் போய்விடாதா? இனத்துக்கு வந்துள்ள இந்த ஆபத்தைப் பற்றி எவருமே கவலைப்படுவதே இல்லையே! நான் ஒருவன்தானே இந்த வயதிலும், ஓடி ஓடி உழைக்க வேண்டியிருக்கிறது!*

***பெரியார்*** : *என்னப்பா, நீ பேசுகிறாய்? நான் அறக்கட்டளைகளையும், சொத்துகளையும் விட்டுச் சென்றதே, எனது அறிவுச் சொத்துகளை மக்களிடம் கொண்டு போவதற்குத்தானே! இது உனக்குத் தெரியதா? எனக்குப் பிறகு, எனது வாரிசுகள், எனது நூல்களும், கருத்துகளும் தான் என்று வெளிப்படையாக கூறிவிட்டுத்தானே, மரணத்தை எதிர்க் கொண்டேன்!*

***வீரமணி*** : *அதெல்லாம் எனக்குத் தெரியாதா, அய்யா! நன்றாகவே தெரியும். நீங்கள் கூறிய அறிவுச் சொத்து, வாரிசு பற்றியெல்லாம் ஆழமாக, பல நாள் உறக்கமில்லாமலே சிந்தித்தப் பிறகுதான், ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தேன். அறிவுச் சொத்து என்பதும், ஒரு சொத்து தானே! வாரிசு என்பதும் மிக மிக முக்கியமல்லவா? எனவேதான், வாரிசு, அறிவுச் சொத்து, இரண்டையுமே நானே எனது பொறுப்பில் எனது குடும்பத்துக்குள் பத்திரப்படுத்திக் கொண்டு விட்டேன். எதையும் பகுத்தறிவு கொண்டு ஆராய வேண்டுமல்லவா? அதுதானே முக்கியம்!*

***பெரியார்*** : *எனது கருத்துகளைப் பரவாமல் தடுப்பதும், உனது மகனை இயக்கத்தின் வாரிசாக்குவதும் தான் நான் சொன்ன பகுத்தறிவா? சரி; வழக்குக்கு எவ்வளவு பணம் செலவு செய்தாய்?*

***வீரமணி*** : *ஒன்றும் அதிகமில்லை, வெறும் ரூபாய் 5 லட்சம் தான் அய்யா. நீங்கள் தந்த பணம் தானே, எல்லாவற்றுக்கும் சரியாக கணக்கு இருக்கு அய்யா! ஆடிட்டர் வைத்து சரி பார்க்கிறோம், தெரியுமா?*

***பெரியார்*** : *அய்யோ, இது என்ன கொடுமை! நான் விட்டுச் சென்ற சொத்தையும் பணத்தையும் எனது கருத்துகள் பரவாமல் இருப்பதற்கு பயன்படுத்துகிறாயா? இதைச் சொல்வதற்கு உனக்கு வெட்கமாக இல்லை?*

***வீரமணி*** : *பொது வாழ்க்கை என்று வந்துவிட்டால், மான அவமானம் எல்லாம் பார்க்கக் கூடாது என்று நீங்கள் தானே அய்யா, கூறினீர்கள்? அதை அப்படியே பின்பற்றுவதற்கு நீங்கள் பாராட்ட வேண்டாமா?*

***பெரியார்*** : *அது கொள்கையைப் பரப்புகிற பொது வாழ்க்கைக்கு. கொள்ளையடிக்கிற வாழ்க்கைக்கு அல்ல! அது சரி; கொள்கையைப் பரப்புவதற்காக பல ஊர்களில் என் மீது பற்றுக் கொண்ட ஏழை எளிய தொண்டர்கள் என்னிடம் வழங்கிய கட்டிடங்கள், கடைகள், மனைகளையெல்லாம் வேக வேகமாக விற்றுக் கொண்டிருக்கிறாயாமே!*

***வீரமணி*** : *ஆமாம் அய்யா! அதற்காக, ஒரு தனிக் குழுவே போட்டு*


*(2 ஆம் பக்கம்)*

# போராளிகள் பயிற்சிக் களத்தில் மாவீரர் நாள்!





கொளத்தூர் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்பு குழு சார்பில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரமரணமடைந்த மாவீரர்களுக்கு வீரவணக்க நிகழ்வு 27.11.2010 அன்று மாலை 6 மணிக்கு கொளத்தூர் புலியூர் பிரிவில் அமைந்துள்ள தளபதி பொன்னம்மான் நினைவு நிழற் கூடத்தில் நிகழ்ந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஈகைச்சுடர் ஏற்றி வீரவணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து பல்வேறு கட்சிகள், இயக்கங்களைச் சார்ந்த தோழர்கள், தோழியர்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள், பொது மக்கள், கழகத் தோழர்கள், குழந்தைகள் என அனைவரும் வரிசையில் நின்று கையில் தீபம் ஏந்தி மலர் தூவி மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினர். வீரவணக்க நிகழ்வுக்குப் பின் கழகத் தலைவர் உரையில் விடுதலைப் போராளிகள் முதலில் ஆயுதம் தாங்கி போராடத் தொடங்கிய போது இதே பகுதியில்தான் ஆயிரக்கணக்கான போராளிகள் ஆயுதப் பயிற்சி எடுத்தனர். தளபதி பொன்னம்மான் தலைமையேற்று பயிற்சி அளித்து வந்தார். அவர் இப்பகுதி மக்களோடு எவ்வளவு நெருக்கமாக பழகி வந்தார் என்பதற்கு அடையாளம் தான் இந்த நிகழ்வு. அவர் ஈழத்தில் தற்கொலைப் படைப் பிரிவுக்கு பயிற்சி அளித்த போது எதிர்பாராதவிதமாக இறந்து போன செய்தியை கேட்டு இப்பகுதி மக்கள் தாங்களே நிதி திரட்டி கட்டியதுதான் இந்த நிழற்கூடம்.

தற்போது தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு பெரும் பின்னடைவை பெற்றிருந்தாலும் அதற்கு பெரும் காரணமான இந்த இந்திய அரசோடுதான் நாமும் பின்னிப் பிணைந்திருக்கிறோம், பிணைக்கப்பட்டிருக்கிறோம் என்ற கேவலமான உணர்வோடுதான் இந்த நிகழ்வில் நாம் கலந்து கொண்டுள்ளோம். ஒன்று அந்த அரசை அழுத்தம் கொடுத்து நம் பக்கம் திருப்பும் அளவுக்கு உணர்வுடன் எழுந்தாக வேண்டும் அல்லது இது எங்கள் அரசல்ல என்று பிரிந்தாக வேண்டும் என்ற உணர்வு எல்லோர் உள்ளத்திலும் வரும் அளவுக்கு இந்திய அரசு பெரும் துரோகம் இழைத்துள்ளது என்று குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்த முழு ஏற்பாடு செய்த கழக நகர செயலாளர் பெ. இளஞ்செழியன் இன்று நம்மோடு இல்லை. எதிர்பாராத விபத்தில் நாம் அவரை இழந்து விட்டோம். நம்முடைய இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினார். போராளிகளின் பயிற்சிக்களமாக திகழ்ந்த மண்ணில் உணர்வலைகளோடு இந்த வீரவணக்கம் நிகழ்ந்தது.

---

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

*விட்டேன். அவர்கள் பம்பரமாக சுழன்று, வேகம் வேகமாக விற்பனை செய்து வருகிறார்கள். தாங்கள் விட்டுச் சென்ற சொத்துகளையெல்லாம் மக்களிடம் கொண்டு போய் சேர்த்து வருகிறேன். அது தானே இனமானக் கடமை!*

***பெரியார் :*** *நான் விட்டுச் சென்ற அறிவுச் சொத்துகளை உன்னிடம் பாதுகாத்துக் கொள்வாய்; பொருள் சொத்துகளை மட்டும் விற்று பணமாக்கிக் கொள்வாய்; அப்படித் தானே! பார்ப்பானே உன்னிடம் தோற்றுப் போவான் போலிருக்கே! சரி; வேறு ஒரு சேதியும் கேள்விப்பட்டேன். என்னுடைய சமுதாயக் கொள்கைகளைப் பரப்புவதை விட்டுவிட்டு, எப்போதும், ஆளும் கட்சி அரசியல்வாதிகளுடன் ஒட்டிக் கொண்டு, அவர்களின் பிரச்சார பீரங்கியாக மாறி விட்டாயாமே!*

***வீரமணி :*** *அப்படியெல்லாம் சொல்ல முடியாது அய்யா! எப்போதாவது எங்கேயாவது வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் உங்கள் கொள்கைகளையும் பேசிக் கொண்டுதான் இருக்கிறேன்! டெல்லியில் எல்லாம்கூட, உங்கள் பெயரில் மாளிகை எழுப்பியிருக்கிறேன், அய்யா?*

***பெரியார் :*** *மாளிகை எழுப்பி என்ன செய்கிறாய்? கொள்கைகளை பரப்புகிறாயா? அல்லது அங்கேயும் வாடகை தானா?*

***வீரமணி :*** *விடுவேனா? அங்கேயும் வாடகைதான் அய்யா. டெல்லி எல்லாம் இப்போது உங்கள் காலத்தில் இருந்ததுபோல் இல்லை. நீங்கள் டெல்லி வடநாட்டான் என்று எதிர்த்ததைப்போல் இப்போது எதிர்க்க வேண்டிய அவசியமே இல்லை. டெல்லியில் ஆட்சி செய்கிறவர்கள் எல்லாம், இப்போது எனக்கு நண்பர்கள்! கடந்த நாடாளுமன்ற தேர்தலிலேகூட காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஓடி ஓடி பிரச்சாரம் செய்து வெற்றி பெற உழைத்திருக்கிறேன் அய்யா! உங்கள் கொள்கைகளுக்கு எப்படி எல்லாம் பெருமை சேர்த்து வருகிறேன்; பார்த்தீர்களா?*

***பெரியார் :*** *இது எனக்குப் பெருமையா? சிறுமையா? இனத்தையே அழித்து நாசப்படுத்திய கூட்டத்துக்கு தேர்தல் பிரச்சாரம் செய்ததைப் பெருமையாக என்னிடமே பேசுகிறாயே!*

***வீரமணி :*** *என்னைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறீர்களே! கலைஞர், காங்கிரசை ஆதரிக்கும் போது நான் என்னய்யா செய்வது? அவர் ஆதரிப்பவர்களைத் தானே நானும் ஆதரிக்க வேண்டியிருக்கிறது! எவரையாவது அவர் எதிர்க்க விரும்புகிறார் என்றால், அதைப் புரிந்து கொண்டு அவரை முந்திக் கொண்டு, நான் எதிர்த்து அறிக்கைவிட வேண்டியிருக்கிறதே! கலைஞருக்காக இதைச் செய்ய பல பேர் தயாராக இருக்கிறார்கள். அந்தப் போட்டியிலே நான் முதலிடத்தைப் பெறுவதற்கு, ஒவ்வொரு நாளும் எவ்வளவு பாடுபடுகிறேன் தெரியுமா? என்ன செய்வது அய்யா! நீங்கள் விட்டுச் சென்ற இனமான சமுதாயக் கடமை செய்ய வேண்டாமா? இப்படி என்னையே அழித்துக் கொண்டு உழைக்கிறேன். ஆனால், இந்தத் துரோகிகள்தான் எனது முதுகில் குத்துகிறார்கள்!*

***பெரியார் :*** *யாரைத் துரோகி என்கிறாய்? நீ வெளியிட மறுத்த என்னுடைய நூல்களை வெளியிட்டவர்களையா? நீ பேச மறுக்கும் எனது கொள்கைகளை பரப்புகிறவர்களையா? உன்னைப் போல் அரசியலே கதி என்று கிடக்காதவர் களையா? எந்தச் சொத்து வசதியும் இல்லாமல், கொள்கைகளைப் பரப்பிட எதிர் நீச்சல் போடுகிறவர்களையா? என்னுடைய சிலையை உடைத்த போது, வெகுண்டெழுந்து, பார்ப்பனர்களுக்கு பதிலடி தந்தவர்களையா? அதற்காக அடக்குமுறை சட்டத்துக்கு உள்ளாகி, சிறைக்குப் போகிறவர்களையா? நீ மறந்து போன சாதி – தீண்டாமை ஒழிப்புக் கொள்கைக்காக களமிறங்கி போராடு கிறவர்களையா? இதோ கேள்; நான் அவர்களிடம் சொத்துகளை விட்டுச் செல்லவில்லை. ஆனால் அவர்களோ என்னுடைய கொள்கைகளை எடுத்துக் கொண்டார்கள். நான் உன்னிடம் கொள்கை களையும், சொத்துகளையும் விட்டுச் சென்றேன். நீயோ, சொத்துகளை மட்டும் எடுத்துக் கொண்டாய். இப்போது என்னுடைய சொத்து மட்டும் உன்னிடம். கொள்கைகள் அவர்களிடம். யார் துரோகி என்பதை வரலாறு முடிவு செய்யும். சரிதானா வீரமணி; மன்னிக்கவும் தமிழர் தலைவரே!*

(தொலைபேசியை பெரியார் துண்டிக்கிறார். வீரமணி உடனே ‘விடுதலை’க்கு அவசரமாக அறிக்கை தயார் செய்கிறார். “பெரியார் தொலைபேசியில் பேசியது என்னிடம் தான். துரோகிகளிடம் பேசவில்லை. எனவே பெரியாரின் ஒரே வாரிசு நான் தான் என்பது மீண்டும் உறுதியாகிவிட்டது”.)

**– கோடங்குடி மாரிமுத்து**

---

## தார்காடு பகுதியில் கழக சார்பில் வரவேற்பு பலகை திறப்பு விழா

27.11.2010 அன்று மாலை 5 மணிக்கு கொளத்தூர் அருகே உள்ள தார்க்காடு பகுதி கழக சார்பில் “பெரியார் திராவிடர் கழகம் தங்களை அன்போடு வரவேற்கிறது” என எழுதப்பட்ட பெயர் பலகையை சேலம் மாவட்ட கழகத் தலைவர் செ. மார்ட்டின் திறந்து வைத்தார். இதற்கான ஏற்பாட்டை தர்மலிங்கம், சேகர், இராசேந்திரன் ஆகியோர் முன்னின்று செய்தனர்.

## லோகு அய்யப்பன் கைதைக் கண்டித்து திருச்சியில் ஆர்ப்பாட்டம்

திருச்சி பெரியார் திராவிடர் கழகம் சார்பாக புதுச்சேரி மாநில தலைவர் லோகு அய்யப்பன் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ததைக் கண்டித்து திருச்சி காதி கிராப்ட் முன்பாக 26.11.2010 அன்று காலை 10 மணிக்கு மாவட்டத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் குமார், இணைச் செயலாளர் புதியவன், பொருளாளர் மனோகரன், அமைப்பாளர் ஆரோக்கியசாமி மற்றும் தோழர்கள் இளந்தாடி துரைராசன், செ.த. இராசேந்திரன், ஆறுமுகம், பழனி, பொன்னுச்சாமி, குணா, தோழியர் விஜி, திருவரங்கம் நகரச் செயலாளர் அசோக் மற்றும் பெரியார் பாசறை சீனி விடுதலையரசு, அன்பழகன், பிரபாகரன் ஆகிய தோழர்கள் பங்கேற்றனர். ஜெகநாதன் நன்றி கூறினார்.

## காவலாண்டியூரில் பெரியார் பிறந்த நாள் விழா

தந்தை பெரியார் 132 ஆவது பிறந்த நாள் விழா 17.9.2010 அன்று காவலாண்டியூர் கிளை கழக சார்பாக சிறப்பாக நடந்தது. கண்ணாமூச்சு கிராமம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்கு பெரியார் படம் வழங்கியதோடு, பள்ளி மாணவ மாணவியருக்கு, பொது மக்களுக்கு இனிப்பு பொங்கல் வழங்கப்பட்டு, கழகக் கொடிகள் ஏற்றப்பட்டு, வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. கிளை கழகத் தலைவர் கே. இராசேந்திரன் தலைமை தாங்கினார். பள்ளி மாணவ மாணவியர், பொது மக்கள் என 1200 பேர் பங்கேற்றனர். கழகம் நடத்தவிருக்கும் அக்டோபர் 2 போராட்ட விளக்க துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. காலை 9 மணிக்கு காவலாண்டியூரில் கொடியேற்றத்துடன் துவங்கிய நிகழ்வு மாலை 3 மணிக்கு முடிவுற்றது. தோழர்கள் காவை பொன்னுசாமி, வீ. ஈசுவரன் ஆகியோர் தோழர்களுக்கு இறைச்சி உணவு வழங்கினர்.

கொடியேற்றிய பகுதிகளும், கொடி ஏற்றிய தோழர்களும்: காவலாண்டியூர் - இரா. இராணி; மூலக்கடை - வீ. ஈசுவரன்; காந்தி நகர் - அபிமன்யு; செ.செ. காட்டுவளைவு - சின்ராசு; கண்ணாமூச்சு - சவுந்தரராசு.

அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளுக்கு பெரியார் படங்களை வழங்கிய தோழர்கள் தங்கராசு, சரவணன், தம்பி அவினாசி, இராசேந்திரன், ஈசுவரன், க. பழனிச்சாமி, சென்னப்பன், காவை சசிக்குமார், காவை விசயகுமார், காவை இளவரசன், பொன்னுசாமி, சவுந்தரராசு ஆகியோர்.

## ✦ அருந்ததிராய் பதிலடி ✦ கிரிமினல் ஜெயேந்திரன் அவதாரமாம்

# தனியார் துறை ஒதுக்கீடு கதி என்ன?

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த தில்லை என்ற வரலாற்று உண்மையை பிரபல எழுத்தாளர் அருந்ததிராய் வெளியிட்டதற்காக இந்துத்துவ ஆர்.எஸ்.எஸ். கும்பல், அவரை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. டெல்லி பெருநகர நீதிமன்ற நீதிபதி அருந்ததி ராய் மீது வழக்கு தொடர வேண்டும் என்று டெல்லி மாநகர காவல் துறைக்கு உத்தரவிட்டுள்ளார். வழக்கும் பதிவாகிவிட்டது. இதைத் தொடர்ந்து இதற்காக தன் மீது வழக்கு தொடர வேண்டுமென்றால், மறைந்த பிரதமர் ஜவகர்லால் நேரு மீதும் வழக்கு தொடர வேண்டும் என்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் அருந்ததிராய்! ஜம்மு காஷ்மீரை இந்தியாவுடன் இணைப்பது இந்தியாவின் திட்டமல்ல, ஜம்மு காஷ்மீர் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்திய பிறகு, அவர்கள் விருப்பப்படி முடிவு எடுக்கப்படும் என்று நேரு கூறியவற்றை எல்லாம் பட்டியலிட்டுள்ளார். பாகிஸ்தான் பிரதமருக்கு மூன்று முறை அனுப்பிய தந்தியிலும், அகில இந்திய வானொலி வழியாக நாட்டு மக்களுக்கு இரண்டு முறை ஆற்றிய உரைகளிலும், இரண்டு முறை இந்திய அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்த அறிக்கையிலும், ஒரு முறை லண்டனில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பிலும், ஒரு முறை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் சமர்ப்பித்த அறிக்கையிலும், ஒருமுறை அய்.நா. பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்திலும், ஒரு முறை இந்திய நாடாளுமன்றத்தில் ஜனசங்க உறுப்பினர் டாக்டர் முன்ஷி கேள்விக்கு அளித்த பதிலிலும் மீண்டும் 2 முறை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கைகளிலும் நேரு, காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் நோக்கமில்லை என்பதையும், காஷ்மீர் அய்.நா. மேற்பார்வையில் மக்கள் வாக்கெடுப்பு நடத்தியே இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் திட்டவட்டமாக வலியுறுத்தியிருக்கிறார். அய்.நா. வின் பாதுகாப்புக் கவுன்சிலில் காஷ்மீர் பிரச்சினை விவாதத்துக்கு வந்தபோது, இந்தியாவின் பிரதிநிதி கிருஷ்ண மேனனும், இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார். அருந்ததிராய் தேச விரோதி என்றால் நேருவும் தேச விரோதி தானே! பதில் சொல்வார்களா?

### புட்டபர்த்தியில் ஸ்டாலின்

துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், புட்டபர்த்தியில் நடந்த சாய்பாபாவின் 85வது பிறந்த நாள் விழாவில் நவம்பர் 22 ஆம் தேதி தனது துணைவியாருடன் தனி விமானத்தில் பறந்து சென்று ஆசி பெற்றுள்ளார். ஸ்டாலிடன் துணைவியார் புட்டபர்த்தியின் தீவிர பக்தர் என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. ஊழல் புகாருக்கு உள்ளாகிய கருநாடக முதல்வர் எடியூரப்பாவும், தொழிலதிபர் ரத்தன் டாட்டாவும், பாபாவை தரிசிக்க வந்தவர்களில் அடங்குவர். சென்னைக்கு கிருஷ்ணா நீர் வருவதற்கான கால்வாய் அமைப்பதற்கு, சாய்பாபா அறக்கட்டளை நிதி வழங்கியது. 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழக முதல்வர் வீட்டுக்கு புட்டபர்த்தி சாய்பாபா வந்தபோது, அவரது குடும்பத்தினர், சாய்பாபாவிடம் ஆசி பெற்றனர். அதே நாளில் நேரு விளையாட்டு அரங்கில் நடந்த விழாவில், சாய்பாபாவுடன் ஒரே மேடையில் பேசிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, சாய்பாபா ஏழைகளின் இன்னல் நீங்க உழைப்பவர் என்றும், கடவுளுக்கு நிகரானவர் என்றும் புகழாரம் சூட்டியது நினைவுகூரத்தக்கது.

### தனியார் துறை இடஒதுக்கீடு

டாக்டர் உதித்ராஜ் தலைமையில் இயங்கும் அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான கூட்டமைப்பு தனியார் துறையில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தி தொடர்ந்து போராடி வருகிறது. கடந்த 29 ஆம் தேதி டெல்லி ராம் லீலா மைதானத்திலிருந்து இதே கோரிக்கையை வலியுறுத்தி ஜந்தர்மந்தர் வரை ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பேரணியையும் நடத்தியுள்ளது. அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி முதன்முறையாக பதவிக்கு வந்தபோது குறைந்தபட்ச பொது செயல் திட்டங்களில் ஒன்றாக இதை அறிவித்தது. இதை நிறைவேற்றுவதற்கு அமைச்சர்கள் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டில் இதற்காக பிரதமர் அலுவலகத்தில் ஒருங்கிணைப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. தொழில் மேம்பாடு மற்றும் கொள்கை வகுப்புத் துறையில், அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. தனியார் நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பங்கேற்கச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதே, இந்தக் குழுவின் நோக்கமாகும். இந்திய தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு, இந்திய தொழில் மற்றும் வணிக சபை, இந்திய வர்த்தக சபைகளின் ஆணையம் ஆகிய தொழில் அமைப்புகள் வழியாக தொழில் நிறுவனங்களுடன் இதற்காக பேச்சு வார்த்தைகள் நடந்தன. ஆனால், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், வர்த்தகத் துறை அமைச்சர், தலித் மக்களுக்கு 5 சதவீத இடங்களையாவது ஒதுக்குமாறு தொழில் நிறுவனங்களுக்கு கடிதம் எழுதினார். ஆனால், தொழில் நிறுவனங்கள் மறுத்து விட்டன. தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்குவதற்கான மசோதா ஒன்று 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அது சட்டமாக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

## நமது பார்வையில்....

அரசுப் பணிகளில் வேலை வாய்ப்புகள் குறைந்து கொண்டே வருகின்றன. 2000-த்தில் மத்திய மாநில அரசு ஊழியர்களின் எண்ணிக்கை 40 லட்சமாக இருந்தது. இப்போது 27 லட்சமாகக் குறைந்துவிட்டது. ஒரு உதாரணத்தைக் கூறினால் தெளிவாகப் புரியும். 1997 இல் வருமான வரித் துறையில் பணியாற்றிய மொத்த ஊழியர்கள் எண்ணிக்கை 62000. அப்போது வருமான வரி செலுத்துவோர் எண்ணிக்கை ஒரு கோடி பேர் மட்டுமே. இப்போது வருமானவரி செலுத்துவோர் 3.25 கோடிப் பேர். ஆனால், வருமான வரித்துறை ஊழியர்கள் எண்ணிக்கை 47000 ஆக குறைந்துவிட்டது. நியாயமாக, வேலைக்கான ஊழியர் விகிதாச்சாரப்படி, 2 லட்சம் பேர் இருக்க வேண்டும். குறைந்ததற்குக் காரணம், வருமான வரித் துறையின் வேலைகள் - ஒப்பந்தப் பணிகளாக (out source) தொழிலதிபர்களுக்கு தரப்பட்டுவிட்டதுதான்! இதிலும் தொழிலதிபர்களே பயனடைகிறார்கள்.

நாடாளுமன்றத்தில் தலித் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 131. மாநில சட்டமன்றங்களில் தலித் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 927. தற்போது மத்திய அரசு பணிகளில் 6.54 லட்சம் இடங்கள் நிரப்பப்படாமலே உள்ளன. 2008 ஆம் ஆண்டில் தொழில் துறை அமைப்புகளோடு கலந்து பேசி, தலித் மக்களுக்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்படி, 100 தலித் தொழில்முனைவோரை உரிய பயிற்சி தந்து தயாரிப்பது என்றும், 10 பல்கலைக்கழகங்களிலிருந்து 10000 தலித் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சித் தருவது என்றும், 500 தலித் மாணவர்களை நுழைவுத் தேர்வுக்கு தயார் செய்வது என்றும் அய்.அய்.டி. மற்றும் அய்.அய்.எம். உயர்கல்வி நிறுவனங்களில் 50 தலித் மாணவர்களுக்கு, உதவித் தொகை வழங்குவது என்றும் அதில் 5 மாணவர் களுக்கு வெளிநாடு சென்று படிக்க உதவித் தொகை வழங்குவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் முடிவுகள் எதுவும்செயலாக்கம் பெறவில்லை.

### 'ஜெயேந்திரன்' அவதாரமாம்!

கொலைக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு, பிணையில் வெளிவந்துள்ள காஞ்சிபுரம் ஜெயேந்திரனை 'அவதார'மாக்கி விழாக்களை பார்ப்பனர்கள் எடுத்து வருகிறார்கள். சென்னை மயிலை சமஸ்கிருத கல்லூரியில் 3 நாட்கள் நடக்கும் விழாவில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர். இலட்சுமணன், சிறப்பு விருந்தினராக பங்கேற்றுள்ளார். பார்ப்பான் கொலை செய்தால் அவனுக்கு முடியை வெட்டினாலே போதும். ஆனால், சூத்திரன் கொலை செய்தால் தலையையே வெட்ட வேண்டும் என்று 'மனு தர்மம்' கூறுகிறது. கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜெயேந்திரன், இப்போது மனு சட்டப்படிதான் நடத்தப்படுகிறாரே தவிர, இந்திய தண்டனைச் சட்டப்படி அல்ல. கலைஞர் கருணாநிதியின் கட்டுப்பாட்டிலுள்ள காவல்துறையின் சாட்சிகள் ஜெயேந்திரனுக்கு ஆதரவாக பிறழ் சாட்சிகளாகிவிட்டன.

### கேதான் தேசாய் நினைவிருக்கிறதா?


இந்திய மருத்துவ கவுன்சில் தலைவராக இருந்த கேதான் தேசாய் என்ற பார்ப்பனர் லஞ்ச சூழலில் பிடிபட்டு கைது செய்யப்பட்டதை, அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. இந்தியா முழுதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் சீட் ஒன்றுக்கு ரூ.50 லட்சத்திலிருந்து கோடிகோடியாக லஞ்சம் வாங்கிய யோக்கியர். அவரது வீட்டில் நடந்த சோதனையில் தங்கம் கிலோ கிலோவாக வும், ரொக்கப் பணம் ஆயிரக்கணக்கான கோடிகளாக வும் கைப்பற்றப்பட்டதைக் கண்டு நாடே அதிர்ச்சியில் உறைந்தது. கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட பார்ப்பனர் ஓசையின்றி பிணையில் வெளிவந்து விட்டார். அது மட்டுமா? குஜராத் பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினர் பதவிக்கும் போட்டியிட்டுள்ளார். மருத்துவப் பட்டதாரிகளுக்கான தொகுதியில் போட்டியிட்டு, தன்னை எதிர்த்த வேட்பாளரின் மனுவை கடைசி நேரத்தில் திரும்பப் பெற வைத்து எதிர்ப்பின்றி ஒரு மனதாக தேர்வு செய்யப்படும் நிலைக்கு வந்துவிட்டார் இதற்கான ஏற்பாடுகளை செய்து தந்தவர் குஜராத் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான பரிமாள் திருவேதி என்ற மற்றொரு பார்ப்பனர்.

உலக மகா ஊழலை அரங்கேற்றிய இந்த பார்ப்பனர், மருத்துவத் தொழில் செய்வதற்கே மருத்துவக் கவுன்சில் தடைவிதித்துள்ளது. மருத்துவர் என்ற முறையில் எந்த மருத்துவர் மாநாட்டிலும் அவர் பங்கேற்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு தடைகளையும் புறந்தள்ளிவிட்டு, விதிகளுக்கு மாறாக, மருத்துவ பட்டதாரிகள் தொகுதியிலிருந்து செனட் உறுப்பினராகும் நிலைக்கு வந்துவிட்டார். செய்தி அறிந்து கொதித்துப் போன பல்கலைக்கழக மாணவர்களும் பெற்றோர்களும் கடந்த 24 ஆம் தேதி பல்கலைக்கழகத்தின் முன்பு கேதான் தேசாய்க்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர். 48 மணி நேரத்தில் இந்தப் பார்ப்பனரின் செனட் தேர்வை ரத்து செய்ய கெடுவிதித்துள்ளனர். மருத்துவக் கவுன்சிலும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஆனால், பல்கலைக்கழக துணைவேந்தராக உள்ள பார்ப்பனரோ, கேதான் தேசாயை நீக்க முடியாது என்று அடம்பிடிக்கிறாராம்!

இதுதான் இந்தியாவில் பார்ப்பனர்களுக்கு உள்ள வலிமை!

– இரா

## கொளத்தூர் கழகச் செயல்வீரர் பெ. இளஞ்செழியன் முடிவெய்தினார்



கொளத்தூர் நகரச் செயலாளர் பெ. இளஞ்செழியன் (32) கடந்த 24 ஆம் தேதி மாலை 7 மணிக்கு கொளத்தூரில் வாகன விபத்தில் முடிவெய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். செய்தியறிந்த உடனே, கழகத் தோழர்கள் விரைந்தனர். 25.11.2010 காலை 10 மணி அளவில் எவ்வித சடங்குகளும் இன்றி இறுதி ஊர்வலம் நடைபெற்றது. ஆத்மா மறுப்பு உறுதிமொழிக்குப் பின் கழகத் தோழர்களின் வீரவணக்கம் முழக்கத்திற்கிடையே உடல் எரியூட்டப்பட்டது. மதியம் 1 மணிக்கு மறைந்த தோழரின் படத்தை அவரது அத்தை ஈசுவரி திறந்து வைத்தார். தோழர் இளஞ்செழியன் கழக செயல்பாடுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். கழகம் இதுவரை நடத்திய ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். ஒவ்வொரு விழா காலங்களிலும், மூடப் பழக்க வழக்க நாட்களிலும் அவற்றிற்கு எதிராக தகுந்த துண்டறிக்கைகள் விநியோகித்து பெரியாரியலை மக்களிடையே பரப்பி வந்தார். கொளத்தூரில் குடிஅரசு தொகுப்புப் பணிகள் நடைபெற்றபோது தனது பெரும்பாலான வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்து வீட்டு பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். கொளத்தூர் பகுதியில் முழு நேர இயக்க பணியாளராகவே செயல்பட்டு வந்தார். சிங்கள இராணுவத்தால் ஈழத் தமிழர்கள் மீது தாக்குதல் அதிகரித்த காலங்களில் தமிழக, இந்திய அரசுகளை கண்டித்து கழக சார்பில் பல ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தியதோடு அதில் பள்ளி மாணவ மாணவியர்களையும் பங்கேற்க வைத்து செயல்பட்டவர் ஆவார். ஒரு உண்மை பெரியார் தொண்டரின் மறைவு - அவரது குடும்பத்துக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கே இழப்பாகும். இளஞ்செழியனுக்கு கழகத்தின் வீரவணக்கம்!

# தூத்துக்குடி மாவட்டத்தில் எழுச்சியோடு நடைபெற்ற சாதி – தீண்டாமை இழிவு ஒழிப்புப் பரப்புரைப் பயணம்

*தூத்துக்குடி மாவட்டத்தில் நவம்பர் 20, 2010 அன்று தூத்துக்குடி மாவட்ட கழகம் சார்பில் தூத்துக்குடி முதல் செய்துங்கநல்லூர் வரை சாதி – தீண்டாமை இழிவு ஒழிப்புப் பரப்புரை பயணம் நடைபெற்றது. இரண்டு சிற்றுந்துகளில்(வேன்) 40 தோழர்கள் பரப்புரைப் பயணத்தில் கலந்து கொண்டனர். எழுச்சியோடு நடைபெற்ற சாதி – தீண்டாமை இழிவு ஒழிப்புப் பரப்புரைப் பயணத்திற்கு தூத்துக்குடி மாவட்ட கழகத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமை வகித்தார். பறை முழக்கம் சாதி ஒழிப்புப் பாடல்களுடன் காலை 9 மணிக்கு தூத்துக்குடி நீதிமன்றம் முன்புள்ள பெரியார் சிலை முன்பிருந்து புறப்பட்டது இந்நிகழ்வில் ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் ரா.வே. மனோகரன் வாழ்த்துரை வழங்கி பேசினார். இந்திய பொதுவுடமை கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் அ. மோகன்ராசு பயணத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார். கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் சாதி – தீண்டாமை குறித்து விளக்கவுரையாற்றினார். பெரியார் – அம்பேத்கர் சிலைக்கு மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு மாலை அணிவித்து பரப்புரைப் பயணம் தொடங்கியது.*

***வ.உ.சி. சந்தை** – தூத்துக்குடி : தூத்துக்குடி வ.உ.சி. சந்தையில் பரப்புரைப் பயணம் வந்ததும் கழகத் தோழர்களின் பறை முழக்கம் திருப்பூர் தோழர் தியாகுவின் சாதி ஒழிப்புப் பாடல்களுக்கு பின் ஆட்சிக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் விளக்கவுரையாற்றினார்.*

***முத்தையாபுரம் – பல்க் :** சாதி ஒழிப்புப் பரப்புரைப் பயணம் தொழிலாளர்கள் நிரம்பிய முத்தையாபுரம் பகுதியில் வந்ததும் பறை முழக்கம், சாதி ஒழிப்புப் பாடல்கள் என தொடர் நிகழ்வுக்கு பின் பொறிஞர் சி. அம்புரோசு உரையாற்றினார். இறுதியில் பால், பிரபாகரன் விளக்கவுரையாற்றினார். சாலையின் இருபுறமும் திரண்டிருந்த பொது மக்கள் தங்களுக்குள் இது தேவையான பிரச்சாரம் தான், பெரியார் கட்சிக்காரர்கள் தான் இதனை செய்ய முடியும் என பேசிக் கொண்டனர். (வசூல்) உண்டியல் ஏந்திய தோழர்கள் துண்டறிக்கை கொடுத்துக் கொண்டிருந்த தோழர்களிடமும் தங்களின் ஆதரவை தெரிவித்தனர், ஊக்கப்படுத்தினர்.*

***ஸ்பிக் நகர் :** தூத்துக்குடி ஸ்பிக் நகரில் பரப்புரைப் பயணம் சென்றதும், ஆதித் தமிழர் பேரவை தோழர்கள் திரண்டு வந்து வரவேற்பு கொடுத்தனர். அவர்களுடன் தமிழ்நாடு வணிகர் சங்க மாநில துணைத் தலைவர் பொன். தனகரனும் வரவேற்பளித்தார். ஸ்பிக் நகரில் நடைபெற்ற பரப்புரையில் ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் ரா.வே. மனோகர், தமிழ்நாடு வணிகர் சங்க துணைத் தலைவர் பொன். தனகரன் ஆகியோர் பரப்புரை பயணம் வெற்றியடைய வாழ்த்துரையாற்றினர். இறுதியில் பால். பிரபாகரன் விளக்கவுரையாற்றினார். பொன். தனகரன் தோழர்களுக்கு தேனீர் விருந்து கொடுத்து வழியனுப்பி வைத்தார்.*

***தெற்கு ஆத்தூர் :** தெற்கு ஆத்தூர் பகுதியில் பறை இசையுடன் திருப்பூர் தியாகுவின் சாதி ஒழிப்புப் பாடலுக்கு பின் மதுரை மாவட்டத் தோழர் தமிழ்ப் பித்தன் உரையாற்றினார். பொறிஞர் சி. அம்புரோசு உரைக்குப் பின் உரையாற்றிய பால். பிரபாகரன், தனது உரையில் எவ்வளவு பணம் வந்தாலும் சாதியை ஒழிக்க முடியாது. இசைஞானி இளையராசா திருவரங்கம் கோவிலுக்கு நன்கொடை அளித்தாலும், தினத்தந்தி அதிபர் சிவந்தி ஆதித்தனார் தென்காசியில் இராஜகோபுரம் கட்டிக் கொடுத்தாலும், சாதியின் காரணமாக இரண்டு பேரும் கோவில் கருவறைக்குள் செல்ல முடியாது. ராஜகோபுரத்தில் சிவந்தி ஆதித்தன் குடமுழுக்கு செய்ய முடியாது என குறிப்பிட்டார். பிற்படுத்தப்பட்டவர்கள் நிரம்பிய அந்தப் பகுதியில் பரப்புரை பயணத்திற்கு நல்ல ஆதரவு கிடைத்தது.*

***வடக்கு ஆத்தூர் :** பரப்புரைப் பயணம் வடக்கு ஆத்தூர் பகுதியை வந்தடைந்ததும் ஆழ்வை ஒன்றிய ஆதித் தமிழர் பேரவையின் சார்பில் ஒன்றிய செயலாளர் அருந்ததியரசு தலைமையில் பட்டாசு வெடித்து பரப்புரைக் குழுவினரை வரவேற்றனர். கழகத் தோழர்களுக்கு தேனீர் விருந்து கொடுத்தனர். பரப்புரையின்போது திரளான பொது மக்கள் திரண்டு இருந்தனர். பேருந்து நிலையம் எதிரே என்பதால் பேருந்துகள் வந்து செல்வதால் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. பறை முழக்கம் – பாடல்களுக்கு பின் ரா.வே. மனோகரின் உரைக்குப் பின் பால். பிரபாகரன் விளக்க உரையாற்றினார். சாதியின் பேரால் இழந்த பொருள் இழப்பும் உயிர் இழப்பும் போதும் இனி நமது இரத்தங்கள் மனிதனை காப்பாற்ற பயன்படட்டும். பூமியில் இனி இரத்தம் சிந்த வேண்டாம் என கேட்டுக் கொண்டார். ஆத்தூர் தேர்வு நிலை பேரூராட்சியில் மைய வண்டி (சவ வண்டி) ஆறுமுகநேரியிலுள்ள டி.சி.டபிள்யூ. நிறுவனத்தால் இலவசமாக வாங்கி தரப்பட்டுள்ளது. இதனை அருந்ததிய மக்களுக்கு மட்டும் கொடுப்பதில்லை. இதனைக் கண்டித்தும், இந்நிலை தொடர்ந்தால் கழகம் போராட்டத்தை நடத்தும் என எச்சரிக்கை விடுத்தார். இப்பரப்புரையின்போது தோழர்கள் பேருந்துகளிலும் துண்டறிக்கை கொடுத்தனர். நமது பரப்புரை பயணத்தை பேருந்திலிருந்து கவனித்த சாத்தான்குளம் நாச்சியப்பன் என்பவர் துண்டறிக்கையில் உள்ள தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்ததோடு கழகத்திற்கு ஆதரவாக என்றும் இருப்போம் என தெரிவித்தார். நிகழ்வில் பேரவை சண்முகவேல் உட்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.*

***ஏரல் :** மதியம் 2 மணிக்கு பரப்புரைக் குழு இப்பகுதிக்கு வந்தது. பறை முழக்கம் மக்களை திரட்டியதும் பாடல், எழுச்சியுரை என மக்களை நமது பக்கம் நிறுத்தியது. பால். பிரபாகரனின் உரையில் பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் பார்ப்பானுக்கு அடிமை. அந்த அடிமைக்கு ஒரு அடிமையாக தாழ்த்தப்பட்ட மக்களை பார்ப்பது நியாயமா ? எந்த சாதிக்கும் தனி இரத்தவகை இல்லையே. தாழ்த்தப்பட்டவன் இரத்தம் மற்ற சாதிகாரனை பிழைக்க வைக்கிறதே. 3 விழுக்காடு பார்ப்பான் நம் மீது சுமத்திய இழிவை இன்னும் நாம் சுமப்பது அறிவீனமல்லவா ? என மக்களுக்கு கேள்வியோடு பெரியார் இயக்கம் மட்டுமே சாதி ஒழிப்பு பணியாற்றுகிறது. பெரியார் தொடங்கிய சாதி ஒழிப்பை கழகம் செய்து முடிக்க பொது மக்கள் ஒத்துழைப்பு அளிக்க கேட்டுக் கொண்டார். பெரியசாமி, அருந்ததி முத்து இருவரும் பரப்புரைக் குழுவிற்கு வரவேற்பளித்து குளிர்பானம் வழங்கி உபசரித்தனர்.*

*மதிய உணவிற்காக ஆழ்வார்தோப்பில் ஆழ்வை ஒன்றிய கழகத் தலைவர் நாத்திகம் முருகேசனார் பிரியாணி ஏற்பாடு செய்து இருந்தார்.*

***ஆழ்வார் திருநகரி :** ஆழ்வார் திருநகரியில் மாலை 4.30 மணிக்கு பரப்புரையை தொடங்கியதும் ஆதித் தமிழர் பேரவை கௌதமன், தமிழ் வேந்தன், தொல்காப்பியன் ஆகியோர் சிறப்பான வரவேற்பளித்தனர். பறை முழக்கம் தியாகுவின் பாடலுக்குப் பின் பால்.*



*பிரபாகரன் விளக்க உரையாற்றினார். இறுதியில் மறைந்த தூத்துக்குடி மாவட்ட முன்னாள் தலைவர் செம்பூர் இ. சேதுராமசாமி நினைவு கொடிக் கம்பத்தில் பால். பிரபாகரன் கொடி யேற்றி வைத்தார். திரளான மக்கள் திரண்டிருந்து பரப்புரைப் பயணத்தின் செய்திகளை கேட்டனர்.*

***திருவைகுண்டம் :** திருவைகுண்டம் பகுதியில் பறைமுழக்கம் தொடங்கியதும் திரளான மக்கள் கூட்டம் கூடியது. பால்பிரபாகரன் விளக்கவுரையாற்றினார். இப்பகுதியில் பொதுவுடமை கட்சியனர் திரளாக கலந்து கொண்டு உரையை கேட்டனர்.*

***செய்துங்கநல்லூர் :** செய்துங்கநல்லூரில் பரப்புரைக் குழு வந்ததும் மழை கொட்டத் துவங்கியது. பயணக் குழுவில் இடையில் இணைந்த தோழர்களும் செய்தங்கநல்லூரில் நெல்லையிலிருந்து வந்த கழகத் தோழர்கள் ஆதித் தமிழர் பேரவை தோழர்கள் என செய்துங்கநல்லூரில் கருப்புச் சட்டைகளும், நீலநிற சட்டைகளும் காட்சியளித்து, தொடர்ந்து மழை கொட்டியதால் நிகழ்ச்சியை நடத்த இயலவில்லை. ஒரு நாள் பரப்புரைப் பயணம் என்றாலும் தூத்துக்குடி மாவட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பரப்புரைப் பயணம் சிறப்பாக நடைபெற தூத்துக்குடி மாவட்ட துணைச் செயலாளர் க. மதன், மாநகர செயலாளர் பால். அறிவழகன், மாவட்டத் துணைத் தலைவர் வே. பால்ராசு மற்றும் கழகப் பொறுப் பாளர்கள் களப் பணியாற்றினர்.*

***பயணத்தில் பங்கு பெற்ற தோழர்கள் :** பால். பிரபாகரன், பொறிஞர் சி. அம்புரோசு, வே. பால்ராசு, க. மதன், பால். அறிவழகன், சா.த. பிரபாகரன், மு. கனகராசு, இரவிசங்கர், வ. அகரன், அ. அறிவு பித்தன், ச. சோசப், செ. செல்லத்துரை, சி.ஆ. காசிராசன், கலையழகன், ஆறுமுகம், தமிழ் பித்தன், பெரியசாமி, சுந்தர், வெற்றிவேல், ரா.வே. மனோகர் (ஆதித் தமிழர் பேரவை), தமிழ்ச் செல்வன், சண்முகவேல், அருந்ததி அரசு (ஆதித் தமிழர் பேரவை), சுந்தர், பெரியசாமி, அருந்ததிமுத்து, கௌதமன், கார்த்திக், கதிரவன், தமிழ்மாறன், செங்குட்டுவன், தமிழ் வளவன், இளஞ்செழியன், மதிமாறன், பாலகிருட்டிணன் மற்றும் கழகத் தோழர்கள், ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.*

**– நமது செய்தியாளர்**

**லோகு. அய்யப்பன் கைதைக் கண்டித்து கோவையில் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டம் (நவ. 20)**




"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
தொடர்புக்கு புதிய எண்: ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 2nd December 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | டிசம்பர் 9, 2010 | புரட்சி 9 | முழக்கம் 48 | விலை: ரூ.2.50

### போர்க் குற்றவாளி ராஜபக்சே லண்டனில் அவமானப்பட்டு வெளியேறினார்

# சென்னை இங்கிலாந்து தூதரகம் முன்பும் போராட்டம்

ஈழத்தில் தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாத ராஜபக்சே நடத்திய போர்க் குற்றங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன. ‘சேனல் 4’ என்ற சர்வதேச தொலைக்காட்சி தமிழின இளைஞர்களை சிங்கள ராணுவம் சித்திரவதை செய்து படுகொலை செய்யும் கொடூர காட்சிகளை தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறது. சில மாதங்களுக்கு முன் ஈழத் தமிழ் இளைஞர்களை நிர்வாணமாக்கி, அவர்கள் கைகளைக் கட்டி, துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற காட்சியை ஒளிபரப்பியது. இது உலகம் முழுதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அய்.நா.வின் மனித உரிமைக் குழு, இந்தக் காட்சிப் பதிவுகளை விஞ்ஞான ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்தி, உண்மையிலே நிகழ்ந்த சம்பவம்தான் படமாக்கப்பட்டுள்ளது என்று அறிவித்தது. அயர்லாந்து நாட்டில் டப்ளின் நகரில் நடந்த மக்கள் நிரந்தர தீர்ப்பாயம் - இந்தப் படுகொலைப் படங்களை ஆவணமாக அங்கீகரித்து, ராஜபக்சே போர்க் குற்றம் புரிந்தவர் என்று அறிவித்தது.



அதே ‘சேனல்-4’ தொலைக்காட்சி அண்மையில் தமிழ் ஈழத்தின் நிதர்சனம் தொலைக்காட்சியில் செய்தி அறிவிப்பாளரான இசைப்பிரியா என்ற பெண் போராளியை வஞ்சக வலை விரித்து ராணுவத்தின் பிடிக்குள் கொண்டு வந்து, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி, சுட்டுக்கொலை செய்த கொடூர காட்சியை ஒளிபரப்பியது. சர்வதேச சமூகம், இந்தக் காட்சிகளைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது. மீண்டும் அய்.நா.வின் மனித உரிமைக் குழு, தனது கண்டனத்தைத் தெரிவித்தது. இதற்கிடையே பிரிட்டிஷ் நாடாளுமன்றதில் மூன்று வாரங்களுக்கு முன் தொழிலாளர் கட்சி உறுப்பினர், ராஜபக்சே போர்க் குற்றவாளியாக விசாரிக்கப்படுவாரா ? என்று நாடாளு மன்றத்தில் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த பிரிட்டிஷ் பிரதமர், இது தொடர்பாக உரிய ஆதாரங்கள் திரட்டப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். இதனைத் தொடர்ந்து பிரிட்டனில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துக்கு ராஜபக்சே உரையாற்ற அழைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டது. மீண்டும் ராஜபக்சே கடந்த டிசம்பர் 2 ஆம் தேதி பல்கலைக்கழகத்துக்கு உரையாற்ற வந்திருந்தார்.

அதே நேரத்தில் ‘சேனல் 4’ தொலைக் காட்சியும் பெண் போராளியின் படுகொலைக் காட்சிகளை ஒளிபரப்பியதால் தமிழர்கள் கொதிப்படைந்தனர். அய்ரோப்பா முழுதும் வாழும் தமிழர்கள் ராஜபக்சேவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க லண்டனில் ஆயிரக்கணக்கில் திரண்டனர். ராஜ பக்சேவைக் கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். திணறிப் போன ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக நிர்வாகம் வேறு வழியின்றி ராஜபக்சேயின் நிகழ்ச்சியை ரத்து செய்தது. பாதுகாப்பாக ஓட்டல் ஒன்றில் ராஜபக்சே தங்க வைக்கப்பட்டார். ஓட்டலிலிருந்து அவரை வெளியே கொண்டு வந்து ரகசியமாக விமானத்தில் ஏற்றி கொழும்பு அனுப்ப போலீசார் திட்டம் தீட்டினார்கள். ஒரு கட்டத்தில் ஓட்டலிலிருந்தே ஹெலிகாப்டரில் ஏற்றி அனுப்பும் திட்டமும் பரிசீலிக்கப்பட்து. பின்னர் இரவோடு இரவாக சிறிய சந்து வழியாக ரகசியமாக பலத்த பாதுகாப்போடு அழைத்து வரப்பட்டு, ராஜபக்சே விமானத்தில் ஏற்றி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

### சென்னையில்

பிரிட்டனில் - உலகத் தமிழர்கள் ஒன்றுகூடி ராஜ பக்சேவுக்கு நெருக்கடி தந்த செய்தி கிடைத்தவுடன் தமிழ் நாட்டிலும் தோழர்கள் களமிறங்கினர். தமிழ்நாடு மாணவர் கழகம் என்று செயல்படும் பெரியார் திராவிடர் கழகத்தின் மாணவர் பிரிவைச் சார்ந்தவர்கள், ‘இங்கிலாந்து அரசே; ராஜபக்சேவைக் கைது செய்’ என்ற முழக்கத்துடன் சென்னையில் இங்கிலாந்து தூதரகம் முன் திரண்டனர் தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் கோவை பன்னீர்செல்வம் தலைமையில் கோவையிலிருந்து 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் சென்னை வந்தனர். சென்னையில் தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சார்ந்த மாணவர்களுடன் பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும், நாம் தமிழர், சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி தோழர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர். மாவட்ட தலைவர் தபசி. குமரன், செயலாளர் உமாபதி, பொருளாளர் அண்ணாமலை மற்றும் கழகத் தோழர்கள், நாம் தமிழர் அமைப்பு சார்பில் அதன் பொறுப்பாளர்கள் செந்தில், அன்பு தென்னரசு மற்றும் தோழர்கள், சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி சார்பில் வழக்கறிஞர் ரஜினிகாந்த் மற்றும் தோழர்கள் 200 பேர் மத்திய அரசு தகவல் தொடர்பு அலுவலகத்திலிருந்து (சாஸ்திரி பவன்) பகல் 11 மணிக்கு ஊர்வலமாக பிரிட்டிஷ் தூதரகம் நோக்கி புறப்பட்டபோது காவல்துறை அனைவரை யும் கைது செய்தது. ஆயிரம் விளக்கு சமூக நலக் கூடத்தில் அனைவரும் வைக்கப்பட்டு, அன்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

# கோவை வந்த இலங்கை எம்.பி. ஓட்டம்

கோவை நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த இலங்கையின் ஆளும் கட்சி நாடாளு மன்ற உறுப்பினரை எதிர்த்து முற்றுகை போராட்டம் நடந்தது. இதனால் நிகழ்ச்சி யில் பங்கேற்காமல் திரும்பிச் சென்றார். கோவை பீளமேட்டில் உள்ள கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகத்தில், விசைத் தறி அபிவிருத்தி கழக வளர்ச்சி கழகம் சார்பில் ஜவுளி தொழில்நுட்ப கண்காட்சி நடைபெறுகிறது. இதில் இலங்கை வர்த்தக தொழில் துறை அமைச்சர் அப்துல் ரசீத் கலந்து கொள்வதாக இருந்தது.



அவர் கலந்து கொள்வதற்கு பெரியார் திராவிடர் கழகம், விடுதலை சிறுத்தை கட்சி, இந்து மக்கள் கட்சி மற்றும் பல்வேறு அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தன. இதனால் இந்த நிகழ்ச்சியில் இலங்கை அமைச்சர் அப்துல் ரசீத் கலந்து கொள்ளவில்லை. அவருக்கு பதிலாக இலங்கை அதிபர் ராஜபக்சே கட்சியில் எம்.பி.யாக இருக்கும் காசிம் பைசல் கலந்து கொள்வதற்காக விமானம் மூலம் கோவை வந்தார். அவர் அவினாசி சாலையிலுள்ள பிரபல நட்சத்திர ஓட்டலில் தங்கியிருந்தார்.

இது பற்றி தகவல் அறிந்ததும் அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கழகத்தின் பொதுச் செயலாளர் கு. இராம கிருட்டிணன் தலைமையில் கொடிசியா அருகில் கறுப்புக் கொடிகளுடன் தோழர்கள் திரண்டனர். பிறகு எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பியபடி கண்காட்சி நடைபெறும் மைதானத்தை நோக்கி அவர்கள் விரைந்தனர். இதனால் அங்கு திடீர் பதற்றம் ஏற்பட்டது. நுழைவு வாயில் பகுதியில் போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள். உடனே கழகத்தினர் இன்னொரு பகுதிக்கு ஓடிச் சென்று 2-வது கேட்டை தாண்டி குதித்து உள்ளே நுழைய முயன்றனர். போலீசாரும் அரண் போல நின்று அவர்களை தடுத்தனர். இதனால் போலீசாருக்கும், முற்றுகையிட்ட தோழர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

போலீசாருக்கும், போராட்ட குழு வினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் மூண்டது. நிலைமை மோசம் அடைந்ததால் பொதுச்செயலாளர் இராமகிருட்டிணனை யும், போராட்டம் செய்தவர்களையும் போலீசார் குண்டுகட்டாக தூக்கி வேனுக்கு கொண்டுச் சென்றனர்.

இந்த பரபரப்பான சூழ்நிலைக்கு இடையே இலங்கை எம்.பி. காசிம் பைசலை கார் மூலம் பின்பக்கம் உள்ள பாதை

(4 ஆம் பக்கம்)

# இது, பார்ப்பன–பன்னாட்டு நிறுவனங்கள் நடத்தும் விளையாட்டு

*இந்தியாவின் அரசியலை இப்போது யார் தீர்மானிக்கிறார்கள்? இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளையும், பொருளாதாரத்தையும் தீர்மானிப்பது யார்? இந்தியாவின் பெரும் தொழில் நிறுவனங்கள் உலகம் முழுதும் தங்களது வர்த்தகத்தை விரிவாக்கி வரும் பன்னாட்டு நிறுவனங்கள் – இவர்களுக்கு ‘மூளையாக’ செயல்பட்டு அவர்களினூடாக தங்களது அதிகாரத்தை வலிமைப்படுத்தி வரும் பார்ப்பன ஆளும் வர்க்கங்கள்! இவர்களே தீர்மானிக்கும் சக்திதள்.*

*மாநிலங்களில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்புகள் வந்த பிறகும், மத்தியில் இந்திய ஆட்சி பார்ப்பன பனியா ஆதிக்கத்தில்தான் இருந்தது. வி.பி.சிங் முதன்முதலாக இந்திய அதிகார அமைப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு கதவு திறந்து விட்டதைத் தொடர்ந்து இந்திய ஆட்சியமைப்பில் பெரும் மாற்றங்கள் வரத் தொடங்கின. ‘மண்டலாக்கம்’ எனும் புயல் வட மாநிலங்களில் பார்ப்பனர்களை ஆட்சி அதிகாரத் தலைமையிலிருந்து விரட்டி அடித்தது.*

*மத்திய அதிகார மண்டலத்திலும் – பிற்படுத்தப்பட்டோர் வந்து விடுவார்களோ என்று பதறிப் போன பார்ப்பன ஆதிக்க சக்திகள் அப்போது தாராளமயமாக்கல், உலக மயமாக்கல் எனும் கொள்கையை வலிமையாகப் பிடித்துக் கொண்டார்கள். பார்ப்பனப் பிரதமர் நரசிம்மராவ் காலத்தில் இந்தக் கொள்கை தீவிரமடையத் தொடங்கியது. பா.ஜ.க. ஆட்சியானாலும், காங்கிரஸ் ஆட்சியானாலும் இந்தக் கொள்கைதான் தொடருகிறது. பயனடைகிற பெரும் தொழில் நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்கள் வேண்டுமானால் மாறுபடலாம். ஆனால், பயனடைகிற சுரண்டுகிற ஆதிக்கம் செலுத்துகிற சக்திகள் அவர்கள் தான்.*

*மன்மோகன் சிங் அமைச்சரவையில் மத்திய அமைச்சர்களாக இடம் பிடிக்கவும் விரும்புகிற துறைகளைப் பெறவும் டாட்டா – அம்பானி நிர்வாகத் தரகர்களிடம் தான் பேரம் பேச வேண்டியிருக்கிறது என்பதை ‘தொலைபேசி உரையாடல்’ செய்திகள் அம்பலப்படுத்தி வருகின்றன.*

*இப்போது 2-ஜி, 3-ஜி, ‘சி.ஏ.ஜி’, ‘ஸ்பெக்ட்ரம்’, யுனிடெக் ஷிப்பிங் ஸ்டாப் டாட்காம், அலியான்ஸ் இன்ஃபிராடெக், சுவாம் டெலிகாம், டேட்டா காம் சொல்யூஷன்ஸ், நீராராடியா, பி.ஜே.தாமஸ் என்றெல்லாம் வெகு மக்களுக்கு புரியாத கேள்விப்படாத பெயர்கள் எல்லாம் பத்திரிகைகளில் அடிபடுகின்றன. இதில் மத்திய அமைச்சர் அ. ராசா பெயரும் இணைந்தே வருகிறது. இதில் நமக்குத் தெரிந்த ஒரே பெயர் அ. இராசா மட்டுமே! அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளினால் அவர் பதவி விலகி விட்டார்.*

*இப்போது நாட்டில் என்ன நடக்கிறது? நாட்டின் அரசியல் பொருளாதாரத்தை தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டுள்ள தொழில் நிறுவனங்கள் தங்களுக்குள் வர்த்தகப் போட்டியில் அணி பிரிந்து மோதிக் கொள்கின்றன. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வாழும் தனித்தனி இனங்களான மக்கள் இந்த வர்த்தக சூதாடிகளால் சந்தைப் பொருள்களாக்கப்பட்டுவிட்டனர்.*

*இந்த பார்ப்பன-பனியா பன்னாட்டு நிறுவனங்கள் தங்களின் விளையாட்டு மைதானங்களாக ‘இந்தியா’வை மாற்றிவிட்டன. இந்த விளையாட்டு மைதானத்தில் மோதிக் கொள்ளும் இரண்டு அணிகளுமே பார்ப்பன-பனியா பன்னாட்டு நிறுவனங்களின் அணிகள் தான். விளையாட்டுக்கான விதிகளையும் அவர்களே நிர்ணயித்துக் கொண்டு, விளையாட்டுப் போட்டிகளையும் அவர்களே நடத்துகிறார்கள். மன்மோகன் சிங் அணியினாலும், அத்வானி சுஷ்மா அணியானாலும் வெற்றியைப் பறிப்பது எந்த அணியானாலும் இறுதி ‘கோல்’ விழப் போவது பார்ப்பன-பனியா பன்னாட்டு நிறுவனங்களின் பக்கம் தான். களத்தில் விளையாடும் ஆட்டக்காரர்களும் அவர்களுக்கான ஆட்டத்தையே விளையாடுகிறார்கள்.*

*மைதானத்துக்கு வெளியே வெறும் பார்வையாளர்களாக ஒதுக்கப்பட்டுக் கிடப்பவர்கள் ஒடுக்கப்பட்ட ஏழை, எளிய மக்கள் தான்!*

*தமிழ்நாட்டில் தி.மு.க.வானாலும் சரி, அ.இ.அ.தி.மு.க.வானாலும் சரி; இரண்டு கட்சிகளுமே இந்த மைதானத்தில் விளையாடுவதற்கு தங்களுக்கும் பங்கு வேண்டும் என்று தங்களுக்குள் போட்டி போடுபவைதான். அ.இ.அ.தி.மு.க. தலைமை வெளிப்படையான பார்ப்பனிய அடையாளத்தைப் போர்த்திக் கொண்டு நிற்கிறது. தி.மு.க.வோ ‘திராவிட’ என்ற அடையாளத்தை பெயரளவில் மட்டும் வைத்துக் கொண்டு மைதானத்துக்குள் இடம் பிடிக்க முந்துகிறது.*

*மத்திய அமைச்சர் அ. ராசா நமது மதிப்புக்குரியவர். சிறந்த அம்பேத்கரிய – பெரியாரிய சிந்தனையாளர். அவரைப் போன்ற அடக்கப்பட்ட சமூகத்தின் இளைஞர்கள் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். ஆனாலும், அமைச்சர் அ.ராசா தனிப்பட்ட மனிதர் இல்லையே! அவர் பார்ப்பன-பனியா – பன்னாட்டு நிறுவனங்களுக்கான அணிகளில் விளையாட களம் இறக்கப்பட்டவர்; அல்லது விரும்பி களமிறங்கியவர் தானே! விளையாட வந்த அவர் இப்போது பலிகடாவாகி நிற்கிறார்!*

*இன்று – தி.மு.க.வுக்கு எதிராக களமிறங்கியிருக்கும் சுப்ரமணிய சாமியும், பார்ப்பன ஊடகங்களும், இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஈழத் தமிழர்கள் மீது இந்தியாவின் துணையோடு சிங்களம் இனப் படுகொலையை நடத்தியபோது, எப்படி செயல்பட்டார்கள்? தி.மு.க. என்ன நிலைப்பாடு எடுத்தது? தந்திரமாக இந்திய பர்ப்பன ஆட்சிக்கு ஆதரவாகத் தானே நின்றது? இதே பார்ப்பன ஊடகங்களும், சுப்ரமணிய சாமிகளும் அன்று ஈழத் தமிழர்களுக்கு எதிராக தி.மு.க. ஆட்சியின் பக்கம் நின்றவர்கள் தானே? அன்று ஆரிய – திராவிட சொல்லாடல்களை தி.மு.க. வெறுத்து ஒதுக்கி விட்டதே!*

*‘சுப்ரமணியசாமி’ – தில்லை தீட்சதப் பார்ப்பனர்களுக்காக நீதிமன்றம் வந்து நின்றபோது சில வழக்கறிஞர்கள் ஆத்திரமடைந்து அழுகிய முட்டையை வீசியபோது எங்கே ஆட்சியே பறிபோய்விடுமோ என்று பதறிய தி.மு.க., நீதிமன்ற வளாகத்துக்குள் காவல்துறையை ஏவி வழக்கறிஞர்கள் மண்டையை பிளந்ததே! அதே சுப்ரமணியசாமிதான் இப்போது உச்சநீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறி நின்று கொண்டு அதே தி.மு.க.வுக்கு எதிராக கொக்கரிக்கிறார்.*

*சுயமரியாதை இயக்கத்தின் வெளியீடான ‘ஞான சூரியன்’ இப்போதாவது கலைஞரின் நினைவுக்கு வந்தது நமக்கு மகிழ்ச்சிதான். அதில் பார்ப்பனருக்கு ஒரு நீதி; சூத்திரனுக்கு ஒரு நீதி கூறும் மனு தர்மக் கொடுமைகளை மக்கள் மன்றம் கொண்டு செல்வது வரவேற்க வேண்டியதுதான். ஆனால், ஆட்சி அதிகாரத்துக்கு நெருக்கடி வரும்போது ‘பார்ப்பன – சூத்திர’ மனுதர்ம எதிர்ப்பைக் கையில் எடுப்பதும், சமூகப் பிரச்சினை என்று வரும்போது அதைக் கை கழுவி விடுவதும் நியாயம் தானா என்று கேட்க வேண்டியிருக்கிறதே!*

*டிசம்பர் 6 ஆம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாள்! அதே நாள், டாக்டர் அம்பேத்கர் நினைவு நாள். பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்காக அம்பேத்கர் நினைவு நாள் நிகழ்ச்சிகளுக்கே அனுமதி மறுக்கப்பட்டு, மனுதர்மத்தை எரித்த தலைவரின் கருத்துகளைப் பரப்புவதற்கே அனுமதி மறுப்பதுதான் தி.மு.க. ஆட்சியின் ‘மனுதர்ம’ எதிர்ப்பா? என்று கேட்க வேண்டியிருக்கிறதே!*

*இப்போதும்கூட தொலைத் தொடர்புத் துறை தனியார் மயமாக்கப்பட்டதன் விளைவு தானே இவ்வளவுப் பிரச்னைகளுக்கும் காரணம்? தொலை தொடர்புத் துறை அரசுத் துறையாக இருந்திருக்குமானால், இவ்வளவு ஊழல் புகார்களுக்கு இடமிருந்திருக்காதே. அரசு பொதுத் துறை என்ற முறையில் அந்த நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்புகளும் கிடைத்திருக்குமே!*

*திராவிடர் கோட்பாடு, சமூக நீதி, தன்னாட்சி உரிமை, வடவர் எதிர்ப்பு என்ற அடையாளங்களோடு தொடங்கப்பட்ட தி.மு.க., ‘டாட்டா பிர்லா கூட்டாளி பாட்டாளிக்குப் பகையாளி’ என்ற முழக்கத்தை ஒரு காலத்தில் முன்வைத்த கட்சி. இன்று டாட்டா, பிர்லா, அம்பானிகளுக்கு நடைபாவாடை விரிப்பது எங்கள் கொள்கை அல்ல என்று மத்திய அரசை எதிர்த்ததா? தட்டிக் கேட்டதா?*

*மாறாக, ‘சிறப்பு பொருளாதார மண்டலங்கள்’ என்ற வடநாட்டு பன்னாட்டு தொழில் முதலாளிகளுக்கான சுரண்டல் திட்டத்தை முதன்முதலாக அறிமுகப் படுத்தியதே, மத்தியில் வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன் தானே!*

*பார்ப்பன-பனியா-பன்னாட்டு மேலாதிக்க அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை ஏற்று, அதன் வழியாக பார்ப்பன அதிகார ஆதிக்கத்துக்கு உரமிட்டுக் கொண்டிருப்பதில் தி.மு.க.வுக்கும் பங்கு உண்டு தானே?*

*குறைந்தது பெருகி வரும் இந்த தனியார் துறைகளில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்டோருக்கு வேலை வாய்ப்பு உரிமையையாவது, இவர்கள் வலியுறுத்தியது உண்டா? பிரதமருக்கு ஒரு கடிதமாவது எழுதினார்களா?*

*‘2ஜி’ அலைவரிசையின் முறைகேடான ஒதுக்கீடுகளால் பெரும் நிறுவனங்கள் கொள்ளையடித்த பணத்தை பறிமுதல் செய்ய வேண்டும் என்று எந்த அமைப்பாவது வலியுறுத்துகிறதா?*

*ஆக, இரண்டு அணிகளுமே, அது காங்கிரஸ், பா.ஜ.க.வானாலும், தி.மு.க., அ.இ.அ.தி.மு.க.வானாலும் பார்ப்பன-பனியா-பன்னாட்டு கூட்டுக் கொள்ளையை உறுதிப்படுத்தும் விளையாட்டுக்காக அணி பிரிந்து விளையாடுகின்றன. இந்த விளையாட்டில் உண்மையான பெரியாரியல்வாதிகள் – புறக்கணிக்கப்படும் வெகுமக்கள் பக்கம்தான் நிற்க முடியுமே தவிர, ஆடுகளத்தில் நிற்கும் எந்த அணிக்கும் ஆதரவாக கொடி தூக்கி நிற்க முடியாது. சந்தர்ப்பவாத ஆரிய – திராவிட முழக்கங்களுக்குள் கரைத்துக்கொள்ள முடியாது.*

*பார்ப்பன – பனியா – பன்னாட்டு நிறுவனங்களால் அடிமையாக்கப்பட்டு, உரிமை மறுக்கப்பட்ட மக்களின் குரலை முன்னெடுப்பதே பெரியாரியல் பார்வையில் பெரியார் திராவிடர் கழகம் முன் நிற்கும் சமூகப் பணி! இதுவே எமது உறுதியான நிலைப்பாடு.*

# கடவுள்களை காப்பாற்றுவதுதான் பக்தர்கள் வேலையா?

“இந்துக் கடவுள்களை புண்படுத்துகிறார்கள்; கோயில்களைப் பாதுகாக்க வேண்டும்; புனிதமான வழி பாட்டுத் தலங்களை சிதைக்கலாமா ? கடவுள் நிந்தனை யாளர்களை தண்டிக்க வேண்டும்” என்பது போன்ற கூக்குரல்களை - இந்து முன்னணி இராம. கோபாலன் களும், இந்துத்துவா சக்திகளும் அவ்வப்போது எழுப்பி வருகிறார்கள். இப்படி, கூக்குரல் போடுவதில் அர்த்த மிருக்கிறதா ? இது பற்றி ‘இந்து’ நாளேட்டில் (நவம். 28) ‘திறந்த பக்கம்’ (Open Page) என்ற பகுதியில் பிரேம்சதந்தவர்க்கர் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இவர்கள் தாங்கள் நம்பும் கடவுளையே காப்பாற்ற வேண்டும் என்று கேட்கிறார்களா ? என்ற கேள்வியை எழுப்பும் கட்டுரையாளர் விவேகானந்தர் சுயசரிதையிலிருந்து ஒரு சம்பவத்தை எடுத்துக் காட்டுகிறார். காஷ்மீரில் பயணம் செய்த விவேகானந்தர், ஏராளமான இந்து கோயில்கள் அன்னிய படையெடுப்பால் சிதைக்கப்பட்டதைக் கண்டு வேதனைப்பட்டார். காளி கோயிலுக்கு சென்று காளியின் காலில் விழுந்து வணங்கி, “புனிதத் தாயே” ஏன், இப்படி கடவுள்களை சிதைக்க, நீங்கள் அனுமதித்தீர்கள் ? என்று கேட்டார். அப்போது, விவேகானந்தர் உள்ளத்தில் காளி எழுந்து, ஆறுதல் கூறி, இவ்வாறு கூறியதாம் ! “படை எடுப்பாளர்கள் என் உருவத்தைச் சிதைத்ததால், உனக்கு என்ன நேர்ந்துவிட்டது, விவேகானந்தா ? உன்னால் என்னைக் காப்பாற்ற முடியுமா ? அல்லது நான்தான், உன்னைக் காப்பாற்ற முடியுமா ?” விவேகானந்தர் சுயசரிதையில் எழுதியது.

இந்த சம்பவத்தை எடுத்துக்காட்டும் கட்டுரை ஆசிரியர், கடவுள் மனிதர்கள் காப்பாற்றப்பட வேண்டிய நிலையில் இல்லை. அப்படி, கடவுளுக்கு பாதுகாப்பு வேண்டும் என்று கூறுகிறவர்களுக்கு கடவுளின் சர்வசக்தி மீது நம்பிக்கை இல்லையா ? அல்லது கடவுளர் மீதான பற்றைவிட, தங்களது தன் முனைப்புக்கு கூடுதல் அழுத்தம் தருகிறார்களா ? உண்மையிலே கடவுளை முழுமையாக நம்பும் ஒருவர் அந்த நம்பிக்கை உண்மையாக இருக்குமானால், பூமியில் எது நடந்தாலும், அத்தனையும் கடவுள் விரும்பியவாறே நடக்கிறது என்றே ஏற்றுக் கொள்ள வேண்டும். தன்னுடைய நம்பிக்கைக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக அஞ்சினால், அவர் தாம் வணங்கும் கடவுளையே சந்தேகிக்கிறார்.

கடந்த காலங்களில் மன்னர்கள் ஆட்சி நடந்தது. ‘வலிமையானவனே சரியானவன்’ என்பதே கடந்த கால

*(3 ஆம் பக்கம்)*

# மும்பையில் பெரியார் பிறந்தநாள்: கா.சு.நாகராசன் எழுச்சி உரை

மராட்டிய மாநிலம் மும்பையில் கழக சார்பில் தந்தை பெரியார் 132 ஆவது பிறந்த நாள் விழாவும், தோழர் கவுதம் சக்திவேல் எழுதிய "தமிழ் தேசியத்தின் தந்தை பெரியார்" எனும் நூல் அறிமுக விழாவும் கடந்த நவம்பர் 14 ஞாயிறு மாலை நடைபெற்றது.




தாராவி, கிராஸ் ரோடு, அம்பேத்கர் பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மும்பை கழகப் பொறுப்பாளர் மா.கதிரவன் தலைமை தாங்கினார். தோழர்கள் நெல்லை சிறீதர் (விழித்தெழு இயக்கம்), வி. வெள்ளிங்கிரி (ஆதித் தமிழர் பேரவை) ஆகியோர் முன்னிலை வகித்தனர். மராட்டியத் தோழர் சுமித் சதவ் பெரியார் படத்தினை திறந்து வைத்து உரையாற்றினார். தோழர்களின் உரைகளைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருந்து சென்றிருந்த தோழர்கள் நா. நாட்டுதுரை, க. கணேசுகுமார் (தமிழ்நாடு மாணவர் கழகம்) ஆகியோர் உரையாற்றிய பின் இறுதியாக கவுதம் சக்திவேல் எழுதிய "தமிழ் தேசியத்தின் தந்தை பெரியார்" எனும் நூலை அறிமுகம் செய்து கோவை மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசன் பேசினார். அப்போது, 2000 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர்களின் வாழ்க்கையை இருளிலே மூழ்கடித்திருந்த ஆரியப் புரட்டுகளை அகற்ற வந்த ஈரோட்டுக் கதிரவன் தந்தை பெரியாரின் ஓய்வறியாத உழைப்பினால்தான் தமிழினத்தின் அடையாளங்கள் மீட்கப்பட்டன. தமிழன் யாரென்று தமினுக்கு உணர்த்திய தலைவர் தந்தை பெரியார். 1925 இல் இருந்து கணக்கில் எடுத்துக் கொண்டால்கூட பெரியார் முடிவெய்திய 1973 முடிய கிட்டதட்ட தம்முடைய அரை நூற்றாண்டு கால போராட்ட வாழ்வை அப்படியே தமிழினத்தின் மான அறிவு விடுதலைக்காக விதையாய் போட்டவர் பெரியார் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும். வாழ்நாளெல்லாம் தமிழர்களுக்காகவே வாழ்ந்த பெருந்தகையாளர் பெரியாரை தமிழ் தேசியத்தின் தந்தை என்று போற்றுவது அப்படியொன்றும் மிகையான பாராட்டல்ல. அது மெய்யான பாராட்டே ஆகும்.

ஆரியத்தின் கோரப் பிடியில் சிக்கி சாதியத்தின் சாக்கடையில் மூழ்கிக் கிடந்த இந்த இனத்தை தொட்டுத் தூக்கி மான அறிவூட்டி தமிழன் என்கிற முகவரியை தப்பில்லாமல் எழுதியவரே பெரியார் தான். சாதிமத பேதங்களும், சாஸ்திர சம்பிரதாய - கடவுள் மூடப் பழக்கங்களும் ஒழிந்து மானமும் அறிவும் உள்ள இனமாய் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்கிற தணியாத தாகத்தை வெறியாய்க் கொண்டிருந்தவர் பெரியார். அதற்காக அவர் ஏற்றுக் கொண்ட துன்பங்கள், துயரங்கள், அவமானங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. தமிழ்நாடு தமிழருக்கே என்கிற பெரியார் முழக்கம் சாதி ஒழிந்த, மதம் ஒழிந்த, கடவுள் ஒழிந்த, பார்ப்பான் ஒழிந்த, பெண்ணடிமை ஒழிந்த பகுத்தறிவுள்ள சமதர்ம தேசத்தின் உண்மையான விடுதலை முழக்கம் ஆகும். பெரியார் காண விரும்பிய தமிழ் தேசம் இதுதான். இதற்காகவே உழைக்கிற இயக்கமாக இன்றைக்கு பெரியார் திராவிடர் கழகம் களத்திலே நிற்கிறது. இலட்சியங்களைத் தாங்கி வீறு கொண்டு எழுந்து வருகிற இளைஞர்களின் இயக்கமாக கழகம் செயலாற்றி வருகிறது. கழகத்தின் பணிகளுக்கு தமிழர்கள் எல்லோரும் ஆதரவளிக்க வேண்டும். கழகப் பணியாற்றும் எமது தோழர்களுக்கு எல்லோரும் துணை நிற்க வேண்டும் என்று நாகராசன் பேசினார். முன்னதாக நிகழ்ச்சியில் வெளியிடப்பட்ட "தமிழ் தேசியத்தின் தந்தை பெரியார்" என்ற நூலினை தோழர்கள் நாடோடித் தமிழன், தமிழ் காப்போம் இராசேந்திரன், வி.பி. அண்ணாதுரை (ஆதித் தமிழர் பேரவை), சித்தார்த்தன், சிறீதார் (விழித்தெழு இயக்கம்), ஜெ. தேன்மொழியான் (முத்தமிழ் மன்றம்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். முடிவில் தோழர் முகிலன் நன்றி கூறினார்.

# பட்டேலின் பார்ப்பனக் குரல்

## 'ரிவோல்ட்' பக்கங்களிலிருந்து....(8)

*(1928 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரை பெரியார் நடத்திய 'ரிவோல்ட்' ஆங்கில வார ஏட்டிலிருந்து சில வரலாற்றுத் தகவல்கள்)*

பார்ப்பனரல்லாதார் இயக்கம் - சுயமரியாதை இயக்கத்தின் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கிய நிலையில், காங்கிரஸ் பார்ப்பனர்கள் வல்லபாய் பட்டேலை தமிழகத்துக்கு அழைத்து சுற்றுப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள் பார்ப்பனர்கள். சுயமரியாதை இயக்கம் பற்றிய தவறான கருத்துகளை பட்டேலின் மூளைக்குள் திணித்து, சுயமரியாதை இயக்கத்துக்கு எதிராக அவரை பேச வைத்தார்கள். பார்ப்பனரல்லாதார் இயக்கம் 'உத்தியோக வேட்டை' கட்சி என்றும், ஆரிய கலாச்சாரத்தின் நல்ல கூறுகளை அழிப்பதற்காக வந்த அமைப்பு என்றும், பார்ப்பனர்கள் சொல்லித் தந்ததை அப்படியே பேசினார். அதற்கு 'ரிவோல்ட்' பதிலடி தந்தது.

ஆரிய கலாச்சாரத்தில் அப்படி என்ன நல்ல கூறு இருக்கிறது ? என்று கேள்வி எழுப்பியது ரிவோல்ட். 'சோட்டா காந்தி'யின் (பட்டேல்) மொட்டைத் தலையில் நீட்டிக் கொண்டிருக்கும் குடுமியா ? அவர் முதுகில் போட்டிருக்கும் "புனித" கயிறு பூணூலா ? நெற்றியில் அவர் போட்டுள்ள நாமமா ? புராணமா ? இதிகாசமா ? ஸ்மிருதியா ? 'பெருமை மிக்க' வர்ணாஸ்ரம தர்மமா ? 'தெய்வீக மொழி' என்று கூறிக் கொள்ளும் சமஸ்கிருதமா ? எப்போதோ திராவிட பூமிக்கு வந்து போகும், ஒரு பார்வையாளரான இவருக்கு பார்ப்பன கலாச்சார பண்டிதராக உலவவிட்டது யார் ? ஆரியர்கள் என்று கூறிக் கொள்கிற கூட்டம், திராவிடர்களை இழிவுபடுத்துவது தெரியுமா ? ஆரியத்தின் வழக்கறிஞராகி, அதைப் பரப்புவதுதான் இவரின் பயண நோக்கமா ? திராவிட தேசத்தில் இந்த மனிதர் பார்ப்பனரல்லாதாரை சந்தித்துப் பேசினாரா ? அவர்களிமிடமிருந்து நேரடியாக இங்குள்ள சூழ்நிலையை அறிய முற்பட்டாரா ? என்ற வினாக்களை தொடுத்தது ரிவோல்ட்.

கதர் மற்றும் இந்தி பிரச்சார இயக்கத்தை ஆதரித்துப் பேசிய பட்டேலிடம், கதர் இயக்கத்தில் ஊதியம் பெற்று வேலை செய்யும் ஊழியர்களின் எண்ணிக்கையும் அதில் பார்ப்பனர்கள் எவ்வளவு பேர் என்பதையும் பட்டேல் கேட்டுப் பார்த்தால், உண்மை புரியும் என்று ரிவோல்ட் எழுதியது. பட்டேலின் பார்ப்பனக் குரலைக் கண்டித்து (பட்டேல் பார்ப்பனியத்தை ஏற்றுக் கொண்ட பார்ப்பனரல்லாதவர்) திராவிடன், நாடார்குல மித்திரன், குமரன், தமிழ்நாடு ஆகிய பத்திரிகைகள் எழுதியதையும் 'ரிவோல்ட்' வெளியிட்டது. 'விதவைத் திருமணத்துக்காக போராட்டம் நடத்தினால், பசி பறந்து போய் விடுமா ?" என்று பட்டேல், விதவை திருமணத்துக்கு ஆதரவாக சுயமரியாதை இயக்கம் குரல் கொடுத்தத்தைக் கண்டித்துப் பேசியதை 'தமிழ்நாடு' நாளேடு கண்டித்தது. அதே நேரத்தில் காந்தியின் 'யங் இந்தியா' பத்திரிரிகை, பட்டேலின்தமிழகப் பயணத்தைப் புகழ்ந்து எழுதியதற்கும் 'ரிவோல்ட்' பதிலடி தந்தது.

காந்தியின் 60வது பிறந்த நாளை 'காந்தி ஜெயந்தி'யாக - தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் கொண்டாட முடிவு செய்ததை 'ரிவோல்ட்' கடுமையாக விமர்சித்தது. ஓர் 'சுயமரியாதைக் காரர்' என்ற புனைப் பெயரில் இக்கட்டுரை **(13, அக்.1929)** வெளி வந்துள்ளது.

"எந்தத் தென்னாட்டுப் பார்ப்பனராவது காந்தியை கடந்த காலத்தில் மதித்து, அன்பு காட்டியது உண்டா ? வி.எஸ். சீனிவாச சாஸ்திரி காந்தியை கைது செய்து சிறையில் போட வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆலோசனை கூறியவர் ! (கோகலேயுடன் இணைந்து, மிதவாத காங்கிரஸ் தலைவராக செயல்பட்ட தமிழ்நாட்டுப் பார்ப்பனர்) காந்தியை கைது செய்யாவிட்டால், நாட்டில் சட்ட மீறல் அதிகரித்து விடும் என்று கூறி, அதற்காகவே பிரிட்டிஷ் ஆட்சியாளரின் கவுரவ விருதை (Right Honourable) பெற்றவர். காந்தி அரசியலுக்கே தகுதி இல்லாதவர் என்று கூறியவர், சத்தியமூர்த்தி பார்ப்பனர். மற்றொரு காங்கிரஸ் தலைவரான சீனிவாச அய்யங்கார், காந்தியை ஒரு முட்டாள் என்ற கூறியதோடு அவரது இயக்கத்தை சட்ட விரோதமாக அறிவிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆலோசனை வழங்கியவர். சென்னையைத் தாண்டிப் போனாலும், பார்ப்பனர்கள் அனைவருமே காந்தி மீது வெறுப்பைக் கக்கிய "தேச பக்தர்கள்" தான். இவர்கள் எல்லாம் சேர்ந்துதான், காந்தி ஜெயந்தி கொண்டாடுகிறார்கள். புத்தரை நாத்திகர் என்று கூறி, அவரது இயக்கத்தை வேரும் வேரடி மண்ணோடும் ஒழித்துவிட்டு, புராணங்களில் புத்தரை மகாவிஷ்ணுவின் அவதாரமாக எழுதிக் கொண்டது போலவே, இப்போது காந்தியையும் கொண்டாட ஆரம்பித்துள்ளனர்" என்று அக்கட்டுரை சுட்டிக்காட்டியதோடு, காந்தியின் எந்த அறிவுரையையாவது, இந்தப் பார்ப்பனர்கள் ஏற்றது உண்டா, என்று ஒரு நீண்ட பட்டியலே போட்டுக் காட்டியது.

பெண்களின் திருமண வயதை 18 ஆக உயர்த்த வேண்டும் என்றார் காந்தி. தீண்டாமை ஒழியாமல் சுய ராஜ்யம் பெறுவது முடியாது என்றார். கோயிலுக்குள் "தீண்டப்படாதவர்களை" அனுமதிக்க வேண்டும் என்றார். விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்றார். காங்கிரஸ் கட்சி பள்ளிக்கூட சிறுவர்களின் விளை யாட்டுக் கூடம் போல் இருக்கிறது என்றார். கோயில்கள் விபச்சார விடுதிகளாகிவிட்டன என்றார். ஒத்துழையாமை கொள்கைதான் சுயராஜ்யத்துக்கு ஒரே வழி என்று கூறி, நீதிமன்றங்கள், கல்லூரிகள், கவுன்சில்களைப் புறக் கணிக்க வேண்டும் என்றார். காந்தியின் இந்தக் கருத்து களில் ஏதாவது ஒன்றை பார்ப்பனர்கள் ஏற்றது உண்டா ?

ஆனாலும், இப்போது ஏன் காந்தி ஜெயந்தி கொண் டாடுகிறார்கள் ? தமிழ்நாட்டில் வர்ணாஸ்ரமத்தை ஆதரித்து பேசியதற்கும், இராமாயணம், பகவத் கீதையை புகழ்ந்து பேசுவதற்கும், கதருக்காக, லட்சக்கணக்கான ரூபாயை தாராளமாக வழங்க முன் வந்ததற்கும் பார்ப்பனர்கள் காந்தி ஜெயந்தியைக் கொண்டாட கிளம்பி விட்டனர். தமிழ்நாட்டில் பார்ப்பனர்களை உயர்த்திப் பிடிக்கும் எத்தனையோ பண்டிகைகளும், திருவிழாக்களும் கொண்டாடப்பட்டு வருகின்றன. அந்தப் பட்டியலில் இப்போது காந்தி ஜெயந்தியும் சேர்ந்துள்ளது. எனவேதான் இதை 'மோசடி' (ஹம்பக்) என்று கூறுகிறோம்" என்று, அந்தக் கட்டுரை அனல் கக்கியது.

**– இரா**

**(தொடரும்)**

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அரசியல். மன்னராட்சி, நில பிரபுத்துவ ஆட்சியாகவே இருந்தது. மன்னர்களின் படைபலம் தான் ஆட்சியை தீர்மானித்தன. அந்த நிலையில் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ள, அவர்களுக்கு ஆண்டவன் சக்தி தேவைப்பட்டது. ஆண்டவனே ஆளும் உரிமையை தங்களுக்கு வழங்கியதாக மக்களை நம்ப வைத்தார்கள். அதற்காக மதம் நிறுவனமாக்கப்பட்டது. மத நிறுவனங்களே ஆட்சிக்கு வழிகாட்டின. அரசியலும், மதமும் பிரிக்க முடியாதவைகளாக இருந்த காலத்தில் நிறுவன மாக்கப்பட்ட மதம் அவசியமானது. இப்போது அரசியல் வாழ்க்கை முறையே மாறிவிட்டது. ஜனநாயகம், மனித உரிமைகள், சட்டம் ஒழுங்கு என்ற மனித நேயக் கோட்பாடுகள் வந்துவிட்டன. எனவே, அமைப்பு ரீதியான மதத்துக்கான தேவை இப்போது எழவில்லை.

மதத்தின் அடிப்படையில் சமூகத்தை ஒருங்கிணைக்க வேண்டிய அவசியமில்லை. மதம் அதன் காலிலே தானாக நிற்கட்டும். பக்தர்களின் நம்பிக்கை உண்மையாகவும், முழுமையாகவும் இருக்குமானால், மதத்துக்காக வெளியிலிருந்து பாதுகாப்பைக் கேட்க மாட்டார்கள். ஒருவரது மதமும், அதன் மீதான நம்பிக்கையும், அவரது தனிப்பட்ட உரிமை. அவர் தனக்குள்ளே அதற்கான போராட்டத்தை நடத்த வேண்டுமே தவிர, ஆபத்திலிருந்து காப்பாற்ற புறசக்திகளை அழைக்கக் கூடாது. அப்படி அழைத்தால், அவரது நம்பிக்கை உண்மையானது அல்ல என்று அக்கட்டுரையாளர் அறிவார்ந்த வாதங்களை முன் வைத்துள்ளார். பெரியார் தொண்டர்களுக்கு, இந்த கருத்துகள் ஏற்கனவே அறிமுகமானதாகக் கூட இருக்க வாய்ப்பு உண்டு. ஆனால், 'இந்து' ஏடு இப்படி ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறது என்பதுதான் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். ●

# சேனல் 4-ஒளிபரப்பிய கொடூரகாட்சி!

இறுதிக்கட்ட போரின்போது விடுதலைப் புலிகளின் நிதர்சன தொலை காட்சி பெண் செய்தியாளரும், போராளியுமான இசைப் பிரியாவை ராணுவத்தினர் வஞ்சகமாக வரவழைத்து பாலியல் படுகொலை செய்துள்ளனர். இங்கிலாந்தில் இருந்து ஒளிபரப்பாகும் சேனல் - 4 தொலைக்காட்சியில் இந்த வீடியோ காட்சி காட்டப்பட்டது.

புதிய வீடியோ காட்சிகளை அந்த தொலைக்காட்சி சமீபத்தில் ஒளிபரப்பியது. அதில் காணப்படும் காட்சி தமிழர்களின் நெஞ்சை பதற வைப்பதாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் தொலைக் காட்சி செய்தி அறிவிப்பாளராகவும், போராளியாகவும் செயல்பட்டவர் இசைப் பிரியா. இறுதிக் கட்ட போரின்போது ராணுவத்தின் உளவாளி ஒருவனை இசைப் பிரியா சுட்டுக் கொன்று விட்டார். அதற்கு பழிவாங்கும் வகையில் கொல்லப் பட்ட உளவாளியின் சக ராணுவத்தினர் இசைப்பிரியாவை கொல்ல சதி வலை பின்னுகிறார்கள்.

தங்களிடம் சரண் அடைந்த விடுதலைப் புலிகளின் பெண் போராளி ஒருவரை மிரட்டி, படுகாயமடைந்து தவிப்பது போன்று அலற வைக்கின்றனர். இதைப் பார்த்து முன்னணி காவல் பணியில் இருந்த இசைப்பிரியா அந்த போராளியை காப்பாற்ற அங்கு விரைகிறார்.

ராணுவத்தினரின் தந்திரத்தில், சதி வலையில் சிக்கி முகாமுக்குள் நுழைந்த இசைப்பிரியா சற்றும் எதிர்பாராத வகையில் ராணுவத்தினரின் பிடியில் சிக்கிக் கொள்கிறார்.

அவரை சிங்கள கர்னல் ரவிப்பிரியா என்ற பெண் தான் இவ்வாறு சதி வலையில் சிக்க வைக்கிறார். உடனே இசைப் பிரியாவை ரவிப்பிரியா தலைமையிலான படையினர் கைது செய்து சித்ரவதை செய்கின்றனர். அப்போது அவர் அலறி துடிக்கிறார். இதை அந்தப் பகுதி மக்களும்




கேட்கிறார்கள். இதை அறிந்த ராணுவத் தினர் இசைப் பிரியாவின் வாயையும் கைகளையும் கட்டுகிறார்கள். பின்னர் அவரை ரவிப்பிரியா முன்னிலையிலேயே பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி படுகொலை செய்கின்றனர்.

இந்த காட்சிகள் அனைத்தும் வீடியோ வில் பதிவு செய்யப்படுகின்றன. மாலை 4 மணி 13 நிமிடம் முதல் 4 மணி 46 நிமிடம் வரையில் அந்த காட்சிகள் படமாக்கப்பட்டு உள்ளது.

இந்த காட்சிகள் அனைத்தும் இன்றைக் கும் கர்னல் ரவிப்பிரியாவின் செல்போனில் பதிவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. இலங்கை ராணுவ அதிகாரிகளின் செல்போன்களை ரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட் டால் போர்க் குற்றம் தொடர்பான மேலும் பல உண்மைகளை கண்டறிய முடியும்.

இந்த வீடியோ காட்சி பற்றிய தகவல்களை 'தமிழ் நெட்' இணைய தளம் வெளியிட்டது.

## மரு. அ. சௌந்திரபாண்டியன் அறிவிப்பு

மரு. அ. சௌந்திரபாண்டியனின் ''தன் வரலாறான தன் முன்னேற்றப் போர்'' நூலின் அடுத்த பதிப்பு டிசம்பர் 15 இல் வெளியிடப்படும். நூலைப் பெறவிரும்புவோர் ஒரு அஞ்சலட்டையில் தங்கள் முகவரியைத் தெரிவித்து,

''டாக்டர் அ. சௌந்திரபாண்டியன், 98, பாண்டியன் தெரு, பீபி குளம், மதுரை - 625 002.'' என்ற முகவரிக்கு எழுதினால் நூல் அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும் என்று அ. சௌந்திரபாண்டியன் அறிவிக்கிறார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வழியாக போலீசார் கண்காட்சி அரங்கிற்கு அழைத்துச் சென்றனர். இதைத் தொடர்ந்து ஏற்கனவே இன்னொரு பகுதியில் தயாராக இருந்த ம.தி.மு.க., விடுதலை சிறுத்தை கட்சியினர், இந்து மக்கள் கட்சியினர் அணி, அணியாக திரண்டு வந்து முற்றுகையில் ஈடுபட்டனர். கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டதால், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் காசிம் பைசல், ஜவுளி கண்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமல் கொடிசியாவில் இருந்து வேறொரு கார் மூலம் திரும்பிச் சென்றார். அவர் திரும்பி சென்றது தெரிந்த பின்னரே போராட்டக் குழுவினர் அமைதி அடைந்தனர்.


இந்த போராட்டம் தொடர்பாக கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன், நிர்வாகிகள் கோபால், சாஜித், செல்வம், கதிரவன் உட்பட பலரும், ம.தி.மு.க. முன்னாள் மாநகராட்சி உறுப்பினர் மு. கிருஷ்ணசாமி, புகழேந்தி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் சுசி. கலையரசன், பாலசிங்கம், விடுதலை அரசு, கோவை சம்பத், பொன்னரசன், குட்டி, திலகர், இந்து மக்கள் கட்சி செயலாளர் செந்தில் குமார் உள்பட மொத்தம் 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இலங்கையில் தன் சொந்த நாட்டு மக்களின் மீது விமான தாக்குதல்களை நடத்தி லட்சக்கணக்கான அப்பாவி மக்களை கொன்றதுடன், வீடுகள், பள்ளி, மருத்துவமனைகள், தொழில் நிறுவனங்களை முற்றிலுமாக அழித்துவிட்டு லட்சக்கணக்கான தமிழர்களை அகதிகளாக, மின்சார முள்வேலி முகாம்களுக்குள் அடைத்து வைத்திருக்கின்றனர். இலங்கை அதிபர் ராஜபக்சே ஒரு போர் குற்றவாளி. அவருடைய பிரதிநிதியாக இலங்கை எம்.பி. கலந்து கொள்வதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றார்.

கைதான 100 பேரும் வேன்களில் கோவை பீளமேட்டில் உள்ள ஒரு மண்டபத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

# தஞ்சையில் புதிய தோழர்களுடன் கலந்துரையாடல் கூட்டம்



5.11.2010 ஞாயிறு காலை 11 மணி முதல் தஞ்சை கொடிமரத்து மூலை சமுதாய கூடத்தில், கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இந்தப் பகுதியை சார்ந்த தோழர் ராமர் மூலமாக கழகத்தில் புதிதாக இணைந்திருக்கும் சுமார் நாற்பது இளைஞர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். முதலில் சிற்பி ராசன் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சியினை நடத்திக் காட்டி, புராணம், இதிகாசம் பற்றி விளக்கம் அளித்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நாம் ஏன் பெரியார் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக் கிறோம்? பெரியார் திராவிடர் கழகத்தின் அவசியம் என்ன? என்பதைப் பற்றி உரை ஆற்றினார். பின்னர் தோழர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். தோழர்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதிக்கு கழகத் தலைவரை அழைத்துச் சென்றனர். அப்பகுதியில் இருக்கும் சிக்கல்கள், அவற்றை எதிர்கொள்ளும் முறைகள் பற்றியும் ஆலோசனை நடை பெற்றது. தோழர்கள் பசு.கவுதமன், இராவணன், திருச்சி புதியவன், திருச்சி குமார், தாமரைக் கண்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# திருப்பூரில் மாவீரர் நாள்




ஈழப்போரில் உயிர்நீத்த மாவீரர் களுக்கு திருப்பூர் பழைய பேருந்து நிறுத்தத்தில் நினைவேந்தல் கூட்டம் கழக சார்பில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் சு. துரைசாமி தலைமை தாங்கினார். மாலை 6 மணிக்கு உலக தமிழர்களின் உணர்வுகளை வெளிப்படுத் தும் விதமாக தீச்சுடர் ஏற்றப்பட்ட 5 நிமிடங் கள் அமைதி காக்கப்பட்டது. குழந்தைகள், பெண்கள் உட்பட அனைவரும் மெழுகு வர்த்தி ஏந்தி, ஈழப் போரில் உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினர். கூட்டத்திற்கு தமிழ் உணர் வாளர்கள் மற்றும் ஆதித் தமிழர் பேரவை, மக்கள் ஜனநாயகக் கட்சி போன்ற அமைப்பினரும், கழகத தோழர்களும் கலந்துகொண்டனர்.

''புரட்சிப் பெரியார் முழக்கம்'' ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
தொடர்புக்கு புதிய எண்: ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th December 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | டிசம்பர் 16, 2010 | புரட்சி 9 | முழக்கம் 49 | விலை: ரூ.2.50


## பெரியாருக்கு தில்லி முதல்வர் புகழாரம்

தில்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தமிழ் - 2010 கருத் தரங்கம் 10.12.2010 அன்று மாலை தில்லி தமிழ்ச் சங்கத்தின் திரு வள்ளுவர் கலையரங்கில் தொடங்கியது. மாநாட்டுக்குத் தலைமை வகித்த தில்லி மாநில முதல்வர் ஷீலா தீட்சித் பேசிய தாவது:

“எனக்கும் தமிழகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. என் மருமகளே தமிழகத்தின் தலைநகர் சென்னையைச் சேர்ந்தவர் தான். எனக்கும் என் கணவருக்கும் தமிழ் நண்பர்கள் ஏராளம். தமிழகத்தில் எண்ணற்ற சீர்திருத்தவாதிகள் தோன்றி இருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர் தந்தை பெரியார். அவரது எழுத்துக்கள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப் பட்டிருக்கின்றன. அவற்றை நான் படித்து மிகவும் உத்வேகம் அடைந்திருக்கிறேன். மனிதகுல சமத்துவத்திற்காகவும், பெண்கள் விடுதலைக்காகவும், சாதி ஒழிப் புக்காகவும் அவர் ஏராளமான இயக்கங்களை நடத்தி இருக் கிறார். இந்தியாவிலேயே சமுகப் புரட்சியை ஆரம்பத்திலேயே கொண்டு வந்தவர் தந்தை பெரியார் என்பதை நான் நன்கு அறிவேன். அத்தகைய சமுக சீர்திருத்தவாதிகள் எண்ணற் றோரைத் தந்தது தமிழகம்” என்று முதல்வர் ஷீலா தீட்சித் பேசினார்.

அடுத்து தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி கம்பம் செல் வேந்திரன், கனடா விண்ட்சர் பல்கலைக்கழக பேராசிரியர் கவிஞர் சேரன், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக இந்திய மொழி கள் மையத் தலைவர் கி.நாச்சி முத்து, தில்லிப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் அ. மாரி யப்பன் வாழ்த்துரை வழங் கினார்கள். பி. குருமூர்த்தி நன்றி கூறினார்.

### திருப்பூர் பெரியாரியல் பயிலரங்கம்

21.11.2010 ஞாயிறு அன்று மாவட்ட தலைவர் துரைசாமி இல்லத்தில் பெரியாரியல் பயிலரங்கம் நடைபெற்றது. காலையில் “கடவுள் புராணம்” என்ற தலைப்பில் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணனும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி “இன்றைய சூழலில் பெரியாரியலின் தேவை” தலைப் பில் மாலையிலும் வகுப்பெடுத்தனர். கலந்து கொண்ட சுமார் 100 பேரில் பெரும் பாலோர் புதிதாக இணைந்த இளைஞர்கள். இறுதியாக தோழர்களின் கேள்விகளுக்கு தலைவர் விளக்கம் அளித்தார்.

*அய்யப்பன் உள்ளிட்ட தோழர்களை விடுதலை செய்க*

## புதுவையில் கண்டன ஆர்ப்பாட்டம்



புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், சக்திவேல் (தி.மு.க.), தேவமணி (பா.ம.க.) ஆகியோர் ஈழத் தமிழர் அகதிகளுக்கு உதவியதாக குற்றம் சாட்டி அம்மாநில காங்கிரஸ் ஆட்சி அவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது. காங்கிரஸ் ஆட்சியின் அடக்குமுறையைக் கண்டித்து தொடர்ந்து கண்டனக் கூட்டங்களும் ஆர்ப் பாட்டங்களும் புதுவையில் நடந்து வருகின்றன.

டிசம்பர் 3 ஆம் தேதி அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் மாநில கழகத் துணைத் தலைவர் இரா. வீராசாமி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றியோர்:

புதுச்சேரி கழகப் பொருளாளர் வீரமோகன், செயலாளர் சு. விசயசங்கர், இளைஞரணி தலைவர் சா. சார்லஸ், இளைஞரணி செயலாளர் செ. சுரேசு, அமைப்பாளர் இர. தந்தைப் பிரியன், ஈழ மக்கள் கூட்டமைப்பு இரா. அழகிரி, செந்தமிழ் இயக்கம் ந.மு.தமிழ் மணி, அம்பேத்கர் மக்கள் படை புரட்சியாளர் சி. மூர்த்தி, புரட்சிப் பாவலர் இலக்கிய பாசறை இராம. சேகர், கிராமப்புற மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் பெ. சந்திரசேகரன், பெரியார் திராவிடர் விடுதலைக் கழகம் கோகுல் காந்திநாத், மண்ணின் மைந்தர் நல உரிமைச் சங்கம் இர. அபிமன்னன், பார்வர்டு பிளாக் உ. முத்து, மக்கள் ஜனசக்தி சி.எம். புரட்சி வேந்தன், செம்படுகை நன்னீரகம் வீர. பார்த்திபன், புதுவை மாநில கட்டிட தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் வ. செல்வராஜ், பாட்டாளி மக்கள் கட்சி தொகுதி தலைவர் செந்தில் வேலன், மனித உரிமைகள் கழக தலைமை அமைப்புச் செயலாளர் பி.எம். கல்யாண சுந்தரம், மீனவர் முன்னேற்ற இயக்கம் இ. சண்முகம், மாணவர் கல்வி அறக்கட்டளை ந. வேல்முருகன், பாட்டாளி மக்கள் கட்சி தொகுதி செயலாளர் நா. சுந்தர், நாம் தமிழர் கட்சி இரா. வேலுச்சாமி, பெரியார் பாசறை பெ. கலிவரதன், புதிய வேள்வி மக்கள் இயக்கம் அ. இரஞ்சித் குமார், தமிழிய கொள்கைகள் செயற்பாட்டு அமைப்பு அ. தெள்ளியன், புதுவை குயில் பாசறை ச. ஆனந்த குமார் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியாக பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கே.ஆர். அனந்தராமன் சிப்புரையாற்றினார், ம. இளங்கோ நன்றியுரை யாற்றினார்.

### சேலம் பல்கலையில் பெரியார் விழா


## *இன்று தேவை பெரியார் சிலை அல்ல; பெரியாரின் கைத்தடியே!*

சேலம் பல்கலையில் நடந்த பெரியார் விழாவில் பேராசிரியர் மூர்த்தி பேசுகையில் பெரியாரின் கைத்தடியே இன்று தேவைப்படுகிறது என்றார்.

சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தில் முப்பெரும் விழாவின் முதல் நாளாக 1.11.2010 புதன் கிழமை அன்று காலை முதல் மாலை வரை பெரியார் விழா நடைபெற்றது. பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முத்துச்செழியன் விழாவினை துவக்கி வைத்துப் பேசினார். பேராசிரியர் மூர்த்தி, “பெரியார் இன்றும் தேவைப்படுகிறார்” என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் தனது உரையில், “எந்த பெருமையைப் பற்றியும் கவலைக் கொள்ளாமல், மக்கள் தேவைக்காக களம் கண்டவர் பெரியார். அது மட்டும் இல்லாமல் எந்த ஒரு மனிதரையும் மகாத்மா என்பதற்காகவோ, பெரிய அறிஞன் என்பதற்காகவோ பாராட்டியவர் அல்ல பெரியார். தந்தை பெரியார் அவர்களின் அளவுகோல் என்பது ஒரு மனிதன் இந்த சமூகத்திற்கு பயன்படு கிறானா இல்லையா என்பதுதான். மற்ற தலைவர்களுக்கெல்லாம் இல்லாத சிறப்பு தந்தை பெரியாருக்கு என்னவென்றால், இந்த சமூகத்திலுள்ள அனைத்து ஏற்ற தாழ்வுகளுக்கும் அடிப்படையாக இருக்கக்கூடிய வர்ண தர்மத்தை அடையாளம் காட்டியவர். தந்தை பெரியாரின் தேவையை தமிழ்நாட்டில் இருப்பவர்களைவிட, வடநாட்டில் இருக்கக்கூடிய என்னைப் போன்றவர்கள் நன்கு அறிவார்கள். இன்றும்கூட தொழிற்சங்கங்களை நிர்வகிக்கும் திறமைகூட உங்களுக்கு இல்லை யென்றால், நீங்கள் எப்படி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உருவாக்க முடியும் என்று தொழிலாளர்களைப் பார்த்துக் கேட்டார். உங்கள் தொழிற் சங்கங்களுக்கு அரசியல்வாதிகளின் தலைமையை ஏற்காதீர்கள். உங்கள் தலைமையை அரசியல்வாதிகளை ஏற்கச் செய்யுங்கள் என்றார். பெரியாரை புகழ்வது, பெரியாருக்கு சிலை வைப்பது என்பதைவிட, பெரியாரின் கைத்தடி இன்றும் தேவைப்படுகிறது என்று பேசினார்.

சமீபத்தில் பெரியார் விருது பெற்றதற்காக பாராட்டப்பட்ட தமிழக மேலாண்மை துறை அமைச்சர் வீர பாண்டி ஆறுமுகம் ஏற்புரை வழங்கினார். அடுத்து கவிஞர் வைரமுத்து சிறப்புரை யாற்றினார். தொடர்ந்து “நம் பெரியார்” என்ற தலைப்பில் மக்கள் சிந்தனை பேரவை நிறுவனரும், பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்தவருமான ஸ்டாலின் குணசேகரன் உரையாற்றி னார். இறுதியாக முனைவர் இராமசாமி, தஞ்சை நிஜ நாடகக் குழு சார்பாக “தோழர்கள்” நாடகம் நடைபெற்றது.

# சீமான் விடுதலையானார்



‘பொடா’ - அ.இ.அ.தி.மு.க. பயன்படுத்திய அடக்குமுறை ஆயுதம்; தேசிய பாதுகாப்பு சட்டம் - தி.மு.க. பயன்படுத்தும் அடக்கு முறை ஆயுதம். ஜெயலலிதா - அடக்குமுறை சட்டத்தைப் பயன்படுத்தினால், கலைஞர் கருணாநிதி - மனித உரிமை முழக்கமிடுவார். அவரே அதிகாரத்துக்கு வந்து விட்டால், அடக்குமுறைச் சட்டத்தை கையில் எடுத்துக்கொள்வார்.

வேலூர் சிறையில் 5 மாதங்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சீமான் சிறைபடுத்தப்பட்டார். அவர் செய்த குற்றம் என்ன? தேசத்தைக் காட்டிக் கொடுத்தாரா? லஞ்சம் வாங்கினாரா? கிரிமினல் குற்றம் இழைத்தாரா? இல்லை; தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைக்குக் குரல் கொடுத்தார். அதைவிடப் பெரும் குற்றம் சிங்களர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

எப்படிப் பொறுப்பார்கள், “தமிழர் தலைவர்”கள்?

தமிழினப் படுகொலையை நடத்தி முடித்த போர்க் குற்றவாளி ராஜபக்சேவுக்கு உலகம் முழுதும் எதிர்ப்பு வலுக்கிறது. தமிழர்கள் மீது நடத்திய இனப் படுகொலை காட்சிகளை சர்வதேச தொலைக்காட்சிகள் ஆதாரங் களுடன் வெளிப்படுத்தி வருகின்றன. இங்கிலாந்து பிரதமர் ராஜபக்சேயின் போர்க் குற்றங்களை விசாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அறிவிக்கிறார். அய்.நா.வின் மனித உரிமைக் குழு, ராஜபக்சேவின் மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் முயற்சிகளில் இறங்கி யுள்ளது. சர்வதேசப் புகழ் வாய்ந்த டப்ளின் தீர்ப்பாயம், ராஜபக்சே போர்க் குற்றவாளி என்று அறிவித் துள்ளது.

ராஜபக்சே மோசமான இனப் படுகொலைகளை நடத்தினார் என்று இலங்கையின் அமெரிக்க தூதர், அமெரிக்காவுக்கு அனுப்பிய ரகசிய தகவல்களை, உலகையே வியப்பில் ஆழ்த்தி வரும் ‘விக்கி லீக்ஸ்’ இணைய தளம் அம்பலப்படுத்தியிருக்கிறது.

இவ்வளவுக்கும் பிறகு ராஜபக்சேயின் மனித உரிமை மீறல்களையோ, போர்க் குற்றத்தையோ, இனப் படுகொலைகளையோ கண்டித்து ஒரு வார்த்தையாவது தி.மு.க. ஆட்சியோ, அதன் முதலமைச்சரோ கூறியது உண்டா? பெரியார், அண்ணாவின் கைப்பிடித்து வந்ததாகக் கூறிக் கொள்வதன் வெளிப்பாடு இது தானா?

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒழித்து விட்டதாக ராஜபக்சே அறிவித்த பிறகும், அந்த இயக்கத்தின் மீதான தடையை நீடிக்க வேண்டும் என்று நடுவர்மன்றத்தின் முன் ‘சுப்ரமணிய சாமி’யின் குரலை அப்படியே உள்வாங்கி ஒலித்தது தானே தி.மு.க. ஆட்சி! எனவேதான் இந்த ஆட்சியின் பார்வையில் ஈழத் தமிழர்களுக்கு குரல் கொடுப்பவர்கள் எல்லாம் ‘தேசத் துரோகிகளாகவே’ தெரிகிறார்கள்.

தேசத் துரோகிகள் யார்? தேச பக்தர்கள் யார்? என்பதை வரலாறு தீர்மானிக்கும். 8 மாத காலம், இந்த ஆட்சியில் சிறைப்படுத்தப்பட்டதால், தமக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சீமான் வருந்தத் தேவை இல்லை என்பதே நமது கருத்து. அவரது இந்த சிறைவாசம் எதிர்காலத் தமிழினத்தின் விடுதலைக்கான முதலீடாகவே நாம் கருதுகிறோம்.

புடம் போட்ட தங்கமாக சீமான் கொள்கை உறுதியோடு வெளியே வந்திருக்கிறார். சமூகத் தளத்தில் சாதி, தீண்டாமை, பார்ப்பனியம், மூடநம்பிக்கைகள் என்ற பாம்புகள் படமெடுத்தாடுகின்றன. தமிழனின் நதி நீர் உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

பன்னாட்டு பனியா சுரண்டல்கள், தமிழனை ஒட்டாண்டியாக்கி வருகின்றன. பெரியார் எடுத்துக் கொடுத்த கொள்கைச் சுடரை ஏந்தி, மக்களை சந்திக்க வேண்டிய லட்சியக் கடமை - சீமான் முன் நிற்கிறது. அதைத் தான் எழுச்சியுற்ற தமிழின இளைஞர்களும் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்!

சிறைச்சாலை - இந்த துடிப்புள்ள இளைஞனை கூர் தீட்டியிருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

இந்தக் கைதும் தமிழினத்தின் நன்மைக்கே என்று வரவேற்று சீமானை வாழ்த்துகிறோம்!

# மத்திய அரசின் பணிகளில் பிற்படுத்தப்பட்டோர் நிலை என்ன?

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது, டி.கே. ரங்கராஜன், மத்திய அரசின் முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் நான்காம் நிலைப் பணிகளில், தலித்துகள், பழங்குடியினர், இதர பிற்பட்ட வகுப்பினர்களுக்கான இட ஒதுக்கீடு எவ்வளவு ? அவற்றில் எத்தனை இடங்கள் நிரப்பப் படாமல் இருக்கின்றன ? அவற்றை நிரப்பிட காலக் கெடு நிர்ணயித்து ஏதேனும் திட்டமிடப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்.

இவற்றிற்குப் பதிலளித்த மத்திய திட்டம் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் வி.நாராயணசாமி, மத்திய அரசின் பணிகளில் தலித்துகள், பழங்குடியினர் மற்றும் இதர பிற்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு, நேரடி நியமனத்தின்போது, அகில இந்திய அடிப்படையில், வெளிப்படையான போட்டி தேர்வு செய்யப்படும்போது முறையே 15 விழுக்காடு 7.5 விழுக்காடு மற்றும் 27 விழுக்காடு என்று கூறினார். மேலும், அகில இந்திய அடிப்படையில் வெளிப்படையான போட்டி இல்லாமல் நேரடியாக நியமனம் செய்யப்படுகையில், மூன்று இனத்தினருக்கும் முறையே 16.66 விழுக்காடு, 7.5 விழுக்காடு மற்றும் 25.84 விழுக்காடு என்ற முறையில் இடஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

மூன்றாம் நிலை மற்றும் நான்காம் நிலைப் பணி யிடங்களுக்கு நேரடியாக நியமனம் செய்யப் படுகையில், தலித்துகள் மற்றும் பழங்குடியினரின் சம்பந்தப்பட்ட மாநிலத்தில் அவர்களின் மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப இடஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றும், அதே போன்ற சமயங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சேர்த்து மாநிலத்தில் மொத்தம் 50 விழுக்காட்டுக்கு மிகாமலும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காட்டுக்கு மிகைப்படாமலும் இடஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றும் கூறினார்.

பதவி உயர்வு என்று வரும்போது, தலித்து களுக்கும் பழங்குடியினருக்கும் முறையே 15 விழுக்காடு, 7.5 விழுக்காடு என்கிற முறையில் அனைத்து நிலைகளிலும் இடஒதுக்கீடு செய்யப்படு வதாகவும் கூறினார்.

முதல்நிலையில் மொத்த மத்திய அரசு ஊழியர்கள் 97 ஆயிரத்து 951 என்றும், இவர்களில் தலித்துகள் 12 ஆயிரத்து 281, பழங்குடியினர் 4 ஆயிரத்து 754, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 5 ஆயிரத்து 331 என்றும் கூறினார்.

இரண்டாம் நிலையில் மொத்த ஊழியர்கள் 1 லட்சத்து 40 ஆயிரத்து 223 என்றும், இவர்களில் தலித்துகள் 20 ஆயிரத்து 884, பழங்குடியினர் 8 ஆயிரத்து 004, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 5 ஆயிரத்து 52 என்றார்.

மூன்றாம் நிலையில் மொத்த ஊழியர்கள் 18 லட்சத்து 22 ஆயிரத்து 326 என்றும், இவர்களில் தலித்துகள் 2 லட்சத்து 86 ஆயிரத்து 573, பழங்குடி யினர் 1 லட்சத்து 27 ஆயிரத்து 871, இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் 1 லட்சத்து 47 ஆயிரத்து 327 என்று கூறினார்.

நான்காம் நிலையில் (துப்புரவு தொழிலாளர்கள் தவிர) மொத்த ஊழியர்கள் 7 லட்சத்து 06 ஆயிரத்து 170. இவர்களில் தலித்துகள் 1 லட்சத்து 38 ஆயிரத்து 466, பழங்குடியினர் 48 ஆயிரத்து 828, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 356 ஆயிரத்து 468 என்றார்.

துப்புரவு தொழிலாளர்கள் மொத்தம் 77 ஆயிரத்து 295. இவர்களில் தலித்துகள் 39 ஆயிரத்து 774, பழங்குடியினர் 4 ஆயிரத்து 621, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 2 ஆயிரத்து 548 என்று கூறினார்.

மொத்தத்தில் மத்திய அரசு ஊழியர்கள் 28 லட்சத்து 43 ஆயிரத்து 965 பேர் என்றும், இவர்களில் தலித்துகள் 4 லட்சத்து 97 ஆயிரத்து 978 என்றும், பழங்குடியினர் 1 லட்சத்து 93 ஆயிரத்து 978 என்றும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 1 லட்சத்து 96 ஆயிரத்து 236 என்றும் கூறினார்.

மத்திய அரசின் 72 அமைச்சகங்கள் / துறைகளிட மிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2008 நவம்பர் 1 ஆம் தேதி நிலவரப்படி, தலித்துகளுக்கான பணியிடங்கள் 23 ஆயிரத்து 277, பழங்குடி யினருக்கான பணியிடங்கள் 26 ஆயிரத்து 923, இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான பணியிடங்கள் 20 ஆயிரத்து 763 காலியாக இருக்கின்றன.

இப்பணியிடங்களை நிரப்பிட 2008 நவம்பரில் ஒரு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டது என்றும், இவற்றில் கடைசியாகக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தலித்துகள் பணியிடங்களில் 6 ஆயிரத்து 202, பழங்குடியினர் பணியிடங்களில் 4 ஆயிரத்து 015, இதர பிற்படுத்தப்பட்டோர் பணியிடங்களில் 4 ஆயிரத்து 964 இடங்கள் நிரப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## ஈரோடு கருத்தரங்கம்




27.11.2010 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு ஈரோடு பெரியார் மன்றத்தில் “தேசிய உரிமை களுக்கான போராட்டமும்-ஒடுக்குமுறைகளும்” கருத் தரங்கம் நடைபெற்றது. தேசிய உரிமைகளுக்கான கூட்டமைப்பு சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்ச்சிக்கு சாதி ஒழிப்புப் பொதுவுடமை முன்னணி மாவட்ட அமைப்பாளர் புலி பாண்டியன் தலைமை ஏற்றார். தமிழக மக்கள் விடுதலை முன்னணி ஒருங் கிணைப்பாளர் தமிழழகன் வரவேற்றுப் பேசினார். “தமிழ் தேசிய விடுதலைப்போரும் - இந்தியாவும்” என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர்மணி சிறப்புரையாற்றினார். மேலும், தியாகி இம்மானுவேல் பேரவை பூ. சந்திரபோசு, மனித உரிமை ஆர்வலர் காசுமீர் அகமத், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி கி. வெங்கட்ராமன், தமிழ் தேசிய விடுதலை இயக்கம் தியாகு ஆகியோர் உரையாற்றினர்.

## பெரம்பலூரில் அம்பேத்கர் சிலைக்கு மாலை

பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் பெரம்ப லூரில் உள்ள பழைய பேருந்து நிலையத்திலுள்ள அம்பேத்கர் சிலைக்கு மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன் தலைமையில் 6.12.2010 திங்கள் அன்று காலை 10 மணி அளவில் மாலை அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் கார்த்திகேயன், பேராசிரியர் அம்மணி, செந்தமிழன், ஜெ. ஜெய வர்த்தனா, சுதாகர், ராஜேஷ், லெனின், கற்பனை பித்தன், பிரபாகரன், ஹரீஷ், காமராஜ், பூபாவலன், சாத்தனவாடி சக்திவேல் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு பெரம்பலூர் நகரம் முழுவதும் சுவரொட்டி ஒட்டப் பட்டது.

## டிசம்பர் 6 - கருப்பு நாள்

6.12.2010 திங்கள் காலை 11 மணி முதல் 450 அண்டு கால வரலாற்று சிறப்பு மிக்க பள்ளி வாசல் இடிக்கப்பட்ட கருப்பு நாளில் நீதி கிடைக்க, தேசத்தின் அவமானத்தை துடைக்க, தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் சேலம் மாவட்டம் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பாக நடைபெற்றது. த.மு.மு.க. மாநில துணை செயலாளர் கோவை சாதிக் அலி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கழகம் சார்பாக கழகத்தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு கண்டன உரை ஆற்றினார்.

## வழக்கு நிதி

மேட்டூர் காவல் நிலையத்தில் நடைபெற்ற ஆயுத பூசையை தடுத்து நிறுத்திய தோழர்கள் மீது போடப்பட்ட வழக்கிற்காக 11.12.2010 சனிக்கிழமை அன்று ரஜினிகாந்த் ரசிகர்மன்றம் சார்பாக, அதன் மாவட்ட பொறுப்பாளர் மேட்டூர் ஆல்பர்ட் வழக்கு நிதியாக ரூ.1000 கழகத் தலைவரிடம் வழங்கினார். தொடர்ந்து கழகத்திற்கு ஆதரவு அளித்து வரும் ஆல்பர்ட், மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் இயங்கி வரும் தோழர் கருப்பரசன் நினைவு நூலகத்திற்கு கழகம் வெளியிட்ட குடிஅரசு தொகுப்புகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

# அம்பேத்கர் : உலகத் தரமிக்க தயாரிப்பு

ஒரு வழியாக பல ஆண்டுகால போராட்டத்துக்குப் பிறகு டாக்டர் அம்பேத்கர் படம் தமிழில் மொழி மாற்றத்தோடு திரையரங்கிற்கு வந்துள்ளது. சென்னை நகரில் பல திரையரங்குகளில் காலை 11 மணி காட்சியாகவோ, அல்லது விடுமுறை நாட்களில் ஏதேனும் ஒரு காட்சியாகவோ தான் திரையிடப்படுகிறது. அதிகாரச் செல்வாக்கு மிக்கவர்களால் விநியோகிக்கப்படும் "எந்திரன்கள்" என்றால், அந்தப் படத்தைத் தவிர வேறு எந்தப் படமும் திரையரங்குகளில் ஓட முடியாது. ஆனால், அடக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளியாய் திகழ்ந்த ஒரு மாபெரும் புரட்சியாளருக்கு தமிழ்நாட்டில் இதுதான் நிலை.

இந்தப் படம் சர்வதேச திரைப்படங்கள் வரிசையில் இடம் பெறக்கூடிய தரத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும். அம்பேத்கர் தனி வாழ்க்கை என்பதைவிட, அம்பேத்கரின் அரசியல் பணிகளுக்கு கூடுதல் அழுத்தம் தந்திருப்பது இந்தப் படத்தின் சிறப்பாகும். இந்த வகையில் திராவிடர் கழகம் தயாரித்த பெரியார் படத்தை, அம்பேத்கர் படம் விஞ்சி நிற்கிறது என்று உறுதியாக சொல்ல முடியும். படத்தைப் பார்த்த பலரின் ஒருமித்த கருத்தும் அப்படித்தான் இருக்கிறது. பெரியாரின் போராட்டங்கள், பின்னுக்குத் தள்ளப்பட்டு, அவரது வாழ்க்கை நிகழ்வுகளே பெரியார் படத்தில், அதிக காட்சிகளாக்கப்பட்டன.

அம்பேத்கராக நடித்துள்ள நடிகர் மம்முட்டி, அம்பேத்கராகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார். அம்பேத்கரை படத்தில் மட்டும் பார்த்த இன்றைய தலைமுறை, மம்முட்டியின் தோற்றப் பொலிவில் உணர்வு பூர்வமாக ஒன்றி விட்டது என்றே கூறலாம். காந்தியார் மீது அம்பேத்கர் வைத்த நேர்மையான விமர்சனங்கள், சென்சார் கத்தரிக்கோலுக்கு உள்ளாகாமல், இடம் பெற்றிருப்பது படத்தின் மற்றொரு முக்கிய சிறப்பு அம்சமாகும். சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வறுமைச் சூழலில் பிறந்த ஒரு மனிதன் இந்த இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு தமது அறிவாற்றலால் உயர்ந்து, அந்த ஆற்றலையும் அறிவையும் சமூகத்துக்குப் பயன்படுத்திய உன்னத வரலாற்றை - இப்படம், இளம் தலைமுறைக்கு எடுத்து விளக்குகிறது. அம்பேத்கர் படமாகி விடக் கூடாது; அவர் பாடமாக வேண்டும் என்ற கருத்துக்கு உரமிட்டுள்ள இத்திரைப்படத்தை குடும்பத்தோடும், நண்பர்களோடும் பார்க்க வேண்டியதை ஒரு சமுதாயக் கடமையாகவே கருத வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். இதில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும்.

திரைப்படத்தில் இடம் பெற்றுள்ள முக்கிய அரசியல் நிகழ்வான லண்டன் வட்ட மேசை மாநாடு இரட்டை வாக்குரிமைக்கு ஆதரவாக முடிவெடுத்தது பற்றிய உரையாடல்கள் திரைப்படத்தில் இடம் பெற்றிருந்தாலும் இரட்டை வாக்குரிமைக்கான விரிவான விளக்கங்கள், இடம் பெறாத காரணத்தால் அது தொடர்பான அய்யங்களை படம் பார்த்த பல இளைஞர்கள் எழுப்புகிறார்கள். எனவே அது பற்றிய சில விளக்கங்களை இங்கே பதிவு செய்ய விரும்புகிறோம்.

1932 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் நாள் 'கம்யூனல் அவார்டு' என்று அழைக்கப்படும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இரட்டை வாக்குரிமைக்கான அறிவிப்பு லண்டனிலிருந்து மன்னரின் ஆணையாக அறிவிக்கப் பட்டது. அதில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இரட்டை வாக்குரிமை பற்றி கூறப்பட்டுள்ள பகுதிகள்:

*"தாழ்த்தப்பட்ட வகுப்புகளை"ச் சேர்ந்தவர்களில் வாக்களிக்கும் தகுதி படைத்தவர்கள் பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பார்கள். இவ்வழியில் மட்டும் இவ்வகுப்பினர் சட்டமன்றத்தில் போதிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கு அனேகமாய் நீண்ட காலத்திற்கு வாய்ப்பிருக்காது என்ற உண்மைகளைக் கருத்தில் கொண்டு அட்டவணையில் காட்டப்பட்டிருப்பது போல் அவர்களுக்கென்று இடங்கள் ஒதுக்கப்படும். இந்த இடங்கள் தனித் தொகுதிகளில் நடைபெறும் தேர்தலைக் கொண்டு நிரப்பப்படும்; இந்தத் தொகுதியில் வாக்களிக்கத் தகுதி படைத்த* ***"தாழ்த்தப்பட்ட வகுப்பினர்" மட்டுமே*** *வாக்களிக்கும் உரிமை பெற்றிருப்பார்கள். முன்பே கூறியதுபோல், இப்படியொரு தனித் தொகுதியில் வாக்களிக்கிற எவரும் பொதுத் தொகுதியிலும் வாக்களிக்க உரிமை படைத்தவராய் இருப்பார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பெருந்தொகையினராய் இருக்கும் பகுதிகளைத் தெரிந்தெடுத்து அங்கெல்லாம் இந்தத் தனித் தொகுதிகள் அமைக்கப்பட வேண்டும் என்பதும், சென்னையில் தவிர இத் தொகுதிகள் மாகாணத்தின் முழுப் பரப்பையும் அளாவியதாய் இருக்கக் கூடாது என்பதே நோக்கமாகும்."*




- இந்த அறிவிப்பை எரவாடா சிறையிலிருந்த காந்தி கடுமையாக எதிர்த்தார்.

லண்டனிலுள்ள தலைமை அமைச்சருக்கு 1932 ஆகஸ்ட் 18 ஆம் நாள் (அறிவிப்பு வந்த அடுத்த நாளே) எரவாடா சிறையிலிருந்து காந்தி கடிதம் எழுதினார். அதில் இடம் பெற்றிருந்த வாசகம்:

*"சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் பற்றிய பிரிட்டிஷ் அரசின் முடிவை நான் படித்துப் பார்த்தேன்; அது குறித்து ஆழ்ந்து யோசித்தேன். சர். சாமுவேல் ஹோருக்கு நான் எழுதிய கடிதத்தை ஒட்டியும் 1931 நவம்பர் 13 ஆம் நாள் புனித ஜேம்ஸ் அரண்மனையில் வட்ட மேசை மாநாட்டின் சிறுபான்மையினர் குழுக் கூட்டத்தில் நான் செய்த பிரகடனத்தை ஒட்டியும், தங்கள் முடிவை உயிரைக் கொடுத்தும் எதிர்க்க வேண்டியவனாய் உள்ளேன். நான் இப்படி செய்வதற்குள்ள ஒரே வழி; உப்புடன் அல்லது உப்பு இல்லாமல் நீரும் சோடாவும் தவிர வேறு எவ்வகை உணவும் உட்கொள்ளாமல் சாகும்வரை நீடித்து உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே பிரிட்டிஷ் அரசினர் தாமாகவோ, பொது மக்களின் கருத்து நெருக்குதலுக்கு ஆளாகியோ தமது முடிவை மாற்றிக் கொண்டு, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வகுப்பு வழிபட்ட தேர்தல் தொகுதிகளுக்கான திட்டத்தை விலக்கிக் கொள்வார்களானால் உண்ணாவிரதம் முடிந்துவிடும்; தாழ்த்தப்பட்ட வகுப்புகளின் பிரதிநிதிகள், எவ்வளவு விரிவான வாக்குரிமை என்றாலும்* ***பொது வாக்குரிமைப்படி பொதுவான தேர்தல் தொகுதியினால்*** *தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.*

*மேற்கூறிய முடிவை மேலே சொல்லப்பட்ட ஆலோசனைப்படி மாற்றிக் கொள்ளவில்லை என்றால் அடுத்த செப்டம்பர் 20 ஆம் நாள் நடுப்பகலிலிருந்து உண்ணாவிரதம் ஆரம்பமாகும்."*

- இது காந்தி எழுதிய கடிதம். உண்ணாவிரதத்தையும் காந்தி தொடங்கினார்.

காந்தியின் உண்ணாவிரதத்தை மய்யமாக வைத்து காந்தியின் உயிரைக் காப்பாற்ற அம்பேத்கருக்கு கடுமையான அழுத்தங்கள் தரப்பட்டன. (அப்போது வெளிநாட்டு பயணத்தில் இருந்த பெரியார் மட்டும் - காந்தியின் மிரட்டலுக்கு பணிந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைத்த உரிமையை இழந்து விடாதீர்கள் என்று எச்சரித்து காந்திக்கு தந்தி அனுப்பினார்) அந்த நிலையில் அம்பேத்கர் இரட்டை வாக்குரிமையை விட்டுத் தர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இது பற்றி தனது நிலையை அம்பேத்கர் இவ்வாறு விளக்கினார்:

*"என்னைப்பொறுத்த வரை அப்போது எனக்கு ஏற்பட்ட மிகப் பெரிய மிகக் கொடிய தரும சங்கடம் வேறு எவருக்கும் ஏற்பட்டதில்லை என்று சொல்வது மிகையாகாது. எவரையும் திக்குமுக்காட வைக்கும் நிலைமை அது. இரு மாற்று வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியவனாய் இருந்தேன். பொதுவான மனிதத் தன்மையான ஒருவன் என்ற முறையில் நிச்சய மரணத்திலிருந்து காந்தியைக் காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கிருந்தது. தீண்டாத மக்களுக்குத் தலைமை அமைச்சர் வழங்கிய அரசியல் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய சிக்கலும் எனக்கிருந்தது. நான் மனிதத் தன்மையின் அறைகூவலை ஏற்றுக் காந்தியாரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, அவருக்கு மன நிறைவு தரக் கூடிய விதத்தில் வகுப்புநலத் தீர்ப்பை மாற்றியமைக்க உடன்பட்டேன். இந்த உடன்பாடுதான் பூனா ஒப்பந்தம் என்று அறியப்படுகிறது."*

பூனா ஒப்பந்தப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கான 'இரட்டை வாக்குரிமை' முறை நீக்கப்பட்டது. அதற்கு பதிலாக பொதுவான தேர்தல் தொகுதிகளிலேயே தாழ்த்தப்பட்டோருக்காக தனித் தொகுதிகள் (ரிசர்வ் தொகுதி) ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்துக்கும் எத்தனை தனித் தொகுதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டன. இது பற்றி பூனா ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள பகுதிகள் (தாழ்த்தப்பட்டோர் போட்டியிடும்): இந்த இடங்களுக்கான தேர்தல் கூட்டுத் தேர்தல் தொகுதிகள் மூலமாய் நடைபெறும் என்றாலும் பின்வரும் நடைமுறைக் குட்பட்டதாய் இருக்கும்;

*"ஒரு தொகுதியில் பொதுவான வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைவரும் ஒரு தேர்தல் குழாம் ஆவர்; இந்தத் தேர்தல் குழாம் ஒற்றை வாக்கு முறையில் இந்த ஒதுக்கீட்டு இடங்கள் ஒவ்வொன்றுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த நான்கு வேட்பாளர்களின் பட்டியல் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்; இந்த ஆரம்ப நிலைத் தேர்தலில் மிக அதிக வாக்குகளைப் பெறும் நால்வர் பொதுவான தேர்தல் தொகுதியின் மூலமான தேர்தலுக்கு* ***வேட்பாளர்களாய்*** *இருப்பார்கள்."*

- இதுவே பூனா ஒப்பந்தத்தின் முக்கிய பகுதி.

இரட்டை வாக்குரிமை என்ற வகுப்பு நலத் தீர்ப்பு தந்த அழுத்தமான உரிமைகளை பூனா ஒப்பந்தம் பறித்து விட்டது என்றே அம்பேத்கர் கருதினார். இது பற்றி அம்பேத்கர் எழுதியது:

*"பூனா ஒப்பந்தம் தீண்டாத மக்களுக்கு 148 இடங்கள் அளித்தது என்பதும், வகுப்பு நலத் தீர்ப்பு (இரட்டை வாக்குரிமை) அவர்களுக்கு 78 இடங்கள் மட்டுமே கொடுத்திருந்தது என்பதும் மெய்தான். ஆனால் இதிலிருந்து வகுப்புநலத் தீர்ப்பு கொடுத்ததைவிடவும் பூனா ஒப்பந்தம் அவர்களுக்கு அதிகமாய் கொடுத்தது என்ற முடிவுக்கு வருவது வகுப்புநலத் தீர்ப்பு தீண்டாத மக்களுக்கு என்ன கொடுத்தது என்பதைக் காணத் தவறுவதே ஆகும்.*

*வகுப்புநலத் தீர்ப்பு தீண்டாத மக்களுக்கு இரு நன்மைகளைக் கொடுத்தது:*

*1) தீண்டாத மக்களின் தனித் தேர்தல் தொகுதியால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவையும் தீண்டாத மக்களைச் சேர்ந்தவர்களால் நிரப்பப்பட வேண்டியவையுமான இடங்கள் நிர்ணயமான பங்களவு. 2) இரட்டை வாக்கு – தனித் தேர்தல் தொகுதிகள் மூலமாகப் பயன்படுத்துவதற்கு ஒன்று, பொதுவான தேர்தல் தொகுதிகளில் பயன்படுத்துவதற்கு மற்றொன்று.*

*இப்போது பூனா ஒப்பந்தம் இடங்களின் நிர்ணயமான பங்களவைக் கூடுதலாக்கியது என்றால், இரட்டை வாக்கிற்கான உரிமையைப் பறித்துக் கொண்டது. இடங்கள் இவ்விதம்*

(4 ஆம் பக்கம்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 16.12.2010

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## சென்னையில் சாதி ஒழிப்பு உறுதி ஏற்பு நாள்




சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தை பெரியார் 1957 ஆம் ஆண்டு நவம்பர் 26 இல் நடத்தினார். தென் சென்னை மாவட்ட திராவிடர் கழகம், கடந்த நவம்பர் 26 ஆம்நாளை சாதி தீண்டாமை ஒழிப்பு உறுதி ஏற்பு நாளாக நடத்தியது. திருவல்லிக்கேணியில் இருசப்ப தெருவில் கலைமாமணி பாவலர் ஓம் முத்துமாரி கலைக் குழுவினரின் பகுத்தறிவு கலை நிகழ்ச்சியுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. பா.செல்வகுமார் தலைமையில் தோழர்கள் ச. குமரன், ஜான், அன்பு தனசேகர் ஆகியோர் உரையைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் சிறப்புரையாற்றினர். வீ. தீபக் நன்றி கூறினார்.

### வட சென்னையில் சாதி ஒழிப்பு மாவீரர் நாள் சிறப்புக் கூட்டம்

சாதி ஒழிய சட்டம் எரித்த மாவீரர்கள் நான் சிறப்புக் கூட்டம் நவம்பர் 29 ஆம் தேதி மாலை திருவொற்றியூர் பெரியார் நகரில், வடசென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் நடத்தியது. கலைமாமணி பாவலர் ஓம் முத்துமாரி கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சியைத் தொடர்ந்து து. இரவிச்சந்திரன் தலைமையில் பொதுக் கூட்டம் நடந்தது. சந்திரசேகர்,ஏசு குமார், நா. டார்வின் தாசன், துரை. சீனிவாசன், மாவட்ட தலைவர் கேசவன், செயலாளர் சொ. அன்பு, வழக்கறிஞர் குமாரதேவன், விடுதலை இராசேந்திரன், துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் ம.தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் ஆ. வந்தியத்தேவன் சிறப்புரையாற்றினார். நாகேந்திரன் நன்றி கூறினார். இடையில் மழை வந்தாலும் கூட்டம் தடைபடாது தொடர்ந்து நடந்தது.

### தூத்துக்குடி பரப்புரைப் பயணத்தில் பங்கேற்றோர்

20.10.10 அன்று தூத்துக்குடி மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற சாதி - தீண்டாமை இழிவு ஒழிப்புப் பரப்புரைப் பயணத்தில் மாவட்ட கழகச் செயலாளர் கோ. அ.குமார், மாவட்ட அமைப்பாளர் ச.கா.பாலசுப்பிரமணியன், ஆழ்வை ஒன்றிய தலைவர் நாத்திகம் முருகேசனார், ஆதித் தமிழர் பேரவை சு.க. சங்கர் ஆகியோரும் பங்கேற்றனர்.

### அம்பேத்கர் நினைவு நாள்

6.12.2010 திங்கள் அன்று காலை 9 மணிக்கு அம்பேத்கர் நினைவு நாளையொட்டி சேலம் காவல் ஆணையர் அலுவலகம் அருகேயுள்ள அம்பேத்கர் சிலைக்கு கழகம் சார்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. மாவட்ட செயலாளர் சக்திவேல், மாநகர அமைப்பாளர் மோ. பாலு, தமிழ்மதி, ஜங்சன் தங்கராஜ், டேவிட், அம்பிகாபதி, சரவணன், தமிழ் மணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### நன்கொடை

மேட்டூர் ஆர்.எஸ். தேசாய் நகர் பொறியாளர் இரா. நாகராஜ்-பொறியாளர் மேனகா இணையர் புரட்சிப் பெரியார் முழக்கம் ஏட்டிற்கு ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*கூடுதலாக்கப்பட்டதை இரட்டை வாக்கு பறி போனதற்கான இழப்பீடாகக் கருத முடியவே முடியாது. **வகுப்புநலத் தீர்ப்பு கொடுத்த இரண்டாவது வாக்கு விலை மதிப்பற்ற சிறப்புரிமை ஆகும்.** அரசியல் கருவி என்ற முறையில் அதற்குள்ள மதிப்பைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. ஒவ்வொரு தொகுதியிலும் தீண்டாத மக்களின் வாக்கு வலிமை பத்துக்கு ஒன்று என்பதாகும். இந்த வாக்கு வலிமையைச் சாதி இந்து வேட்பாளர்களின் தேர்தலில் பயன்படுத்திக் கொள்ள உரிமை இருக்குமானால், தீண்டாத மக்கள் பொதுத் தேர்தலுக்குரிய பிரச்சினை இன்னதென்று கட்டளையிட முடியாவிட்டாலும் அதனை நிர்ணயிக்கக் கூடிய நிலையில் இருப்பார்கள்”*

- என்று குறிப்பிட்டார்.

பூனா ஒப்பந்தத்தில்கூட போட்டியிடுகிற தாழ்த்தப்பட்ட வேட்பாளர்களின் பட்டியலைத் தேர்வு செய்யும் உரிமை தாழ்த்தப்பட்ட மக்களுக்கே வழங்கப்பட்டிருந்தது. அந்த உரிமையும் பார்ப்பனர் வி.வி.கிரி (முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்தவர்) தொடர்ந்த வழக்கில் நீதிமன்றத்தால் பறிக்கப்பட்டது.

இப்போது கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டு அவர்களால் நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களே ரிசர்வ் தொகுதி வேட்பாளர்கள் என்ற நிலை வந்து விட்டது !

(அம்பேத்கர் திரைப்படத்தில் உரையாடல்களாக வரும் இப்பிரச்னைகளை இளம் தலைமுறையினர் புரிந்து கொள்ள உதவியாகவே இந்த விளக்கத்தை முன் வைத்துள்ளோம். – ஆர்.)

## கரூர் அரங்கக் கூட்டம்




23.11.2010 செவ்வாய் மாலை 5 மணிக்கு கரூர் திருநீலகண்டா மண்டபத்தில் “எழுத்தாளர் அருந்ததிராய் மீதான காவிக் கும்பலின் தாக்குதலைக் கண்டித்தும், காஷ்மீர் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தும்” அரங்கக் கூட்டம் நடைபெற்றது. கழக மாவட்டத் தலைவர் கரூர் தனபால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திருச்சி வழக்கறிஞர் பானுமதி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) மாநில செயலாளர் மீ.தா. பாண்டியன், குடியுரிமை பாதுகாப்பு நடுவம் வழக்கிறஞர் முருகேசன், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் பழனிச்சாமி, ஆதித் தமிழர் பேரவை முல்லை அரசு, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

## புதுவையில் கொடி அறிமுக விழா



25.11.2010 வியாழன் காலை 11 மணிக்கு புதுச்சேரி ஜெ.வி.ஆர். அரங்கத்தில், “புரட்சியாளர் அம்பேத்கர் மக்கள் படை” கொடி அறிமுக விழா நடைபெற்றது. இதன் அமைப்பாளர் மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு “கொடி” அறிமுகம் செய்து சிறப்புரையாற்றினார். புதுவை மாநில கழக அமைப்பாளர் தந்தை பிரியன், தலித் சுப்பையா, பேராசிரியர் தணிகாசலம் மற்றும் புரட்சியாளர் அம்பேத்கர் மக்கள் படை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வந்த கடிதம்

9.12.10 ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் தலையங்கத்தில் ‘இந்தியாவின் அரசியலை தீர்மானிப்பது பார்ப்பன பனியா கும்பலும், டாடா, பிர்லா, அம்பானிகளும், இந்தியாவின் பெரும் தொழில் நிறுவனங்கள் என்பதையும், இந்த நிறுவனங்கள் இந்தியாவை விளையாட்டு மைதானமாக ஆக்கி பிற்படுத்தப்பட்டவர்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும் ஏழை, எளிய மக்களையும் வெறும் பார்வையாளர்களாக்கியதை தெளிவாக படம் பிடித்துக் காட்டி விட்டீர்கள் ! **– ந.சொ. சிவசுப்பிரமணியன், வடசேரி.**


2.12.2010 ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வெளியான “போராளிகள் பயிற்சிக் களத்தில் மாவீரர் நாள்” என்னும் தலைப்பில் வெளியான செய்தியைப் படித்தேன். “தற்போது தமிழீழப் போராட்டம் ஒரு பெரும் பின்னடைவை பெற்றிருந்தாலும் அதற்கு பெரும் காரணமான இந்த இந்திய அரசோடுதான் நாமும் பின்னி பிணைந்திருக்கிறோம் என்னும் கேவலமான உணர்வோடுதான் நாம் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளோம்” என்று தலைவர் கொளத்தூர் மணி மிகச் சரியாகவே பேசியுள்ளார்.– **தங்க. சங்கரபாண்டியன், சென்னை–103.**

“புரட்சிப் பெரியார் முழக்கம்” **ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
**தொடர்புக்கு புதிய எண்: ✆ 99416 13535**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 16th December 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | டிசம்பர் 23, 2010 | புரட்சி 9 | முழக்கம் 50 | விலை: ரூ.2.50


### லோகு. அய்யப்பனை சட்டவிரோதக் காவலில் வைத்த

## புதுவை சிறை அதிகாரி மீது கழகம் வழக்கு

### மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி தொடர்கிறார்



ஈழத் தமிழ் அகதிகள் வெளிநாடு செல்ல உதவினார்கள் என்ற குற்றத்தின் கீழ் புதுவை மாநில கழகத் தலைவர் லோகு அய்யப்பன், தி.மு.க. கவுன்சிலரும், மீனவர் சங்கத் தலைவருமான சக்திவேல், காரைக்கால் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் தேவமணி ஆகியோரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் புதுவை காங்கிரஸ் ஆட்சி கைது செய்தது. இதே குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் இந்திய தண்டனை சட்டத்தில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, சுமார் இரண்டு வாரம் சிறைவாசத்துக்குப் பிறகு, நீதிமன்றத்தால் நிபந்தனை பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

காலையிலும், மாலையிலும் புலனாய்வு அலுவலகத்தில் கையெழுத்திட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. 25 நாட்கள் கையெழுத்திட்டு வந்த நிலையில் புதுவை காங்கிரஸ் ஆட்சி பழி வாங்கும் வெறியில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஏவியது.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தை முறைகேடாக பழி வாங்கும் நோக்கத்தோடு பயன்படுத்தியிருப்பது புதுவை வாழ் தமிழின உணர்வாளர்களை கொதிப்படையச் செய்தது. கைதான அடுத்த நாளே - கைதைக் கண்டித்து அனைத்துக் கட்சியினரும் பங்கேற்ற மறியல் போராட்டம் 18.11.2010 அன்று புதுவை சுப்பையா சிலை அருகே மாநில கழக அமைப்பாளர் தந்தைப் பிரியன் தலைமையில் நடைபெற்றது. மறியலில் பல்வேறு அமைப்பைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர். ஏராளமான கழகத் தோழர்கள் பங்கேற்றனர். 302 தோழர்கள் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, புதுவை முழுதும் கண்டன சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது. தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களும், பெண்கள் பங்கேற்ற பட்டினி போராட்டமும் நடைபெற்றது. பேராசிரியர் சரசுவதி உரையாற்றினார். தொடர் கண்டனக் கூட்டங்கள் என்று பழி வாங்கும் அடக்குமுறையைக் கண்டித்து, தொடர் போராட்டங்கள் நடைபெற்றன. உயர்நீதிமன்றத்தில் கழக சார்பில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கழகத்தின் மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி, வை. இளங்கோ ஆகியோர் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

தேசிய பாதுகாப்புச் சட்டம் தவறாக பயன்படுத்தப் பட்டுள்ளதாக லோகு. அய்யப்பன் சார்பாக அவரது தந்தை லோகநாதனும், சக்திவேல் சார்பாக அவரது மனைவி கயல்விழியும் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் அனுப்பியிருந்தனர். இக்கடிதத்தை பரிசீலனை செய்த மத்திய உள்துறை அமைச்சகம் 13.12.2010 அன்று தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ரத்துச் செய்து, விடுதலை செய்ய ஆணை பிறப்பித்தது. 14.12.2010 அன்று இச் செய்தி புதுவை மாநில மாலை நாளேடுகளிலும், சன் நியூஸ் தொலைக்காட்சியிலும் வெளியானது. 15.12.2010 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி உட்பட நூற்றுக் கணக்கான தோழர்கள் சிறை முன் திரண்டனர். மாலை வரை காத்திருந்த தோழர்கள் சிறை அதிகாரிகளிடம் விசாரித்தனர். விடுதலை செய்யக் கோரி, புதுவை அரசிடம் இருந்து உத்தரவு வரவில்லை என்று தெரிவித்தனர். இரண்டு தினங்களுக்கு முன்பே உள்துறையின் உத்தரவு வந்துள்ளதை உறுதி செய்து கொண்ட தோழர்கள், சட்டவிரோதமாக காவலில் வைக்கப்பட்டிருக்கும் செய்தியை, சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு தந்தி வழியாக தெரியப்படுத்தினர். சிறை கண்காணிப்பாளர் ஜெய காந்தன் தான் செய்த அதிகார முறைகேடு உயர் அதிகாரிகளுக்கு தெரிந்துவிட்டதால், இரவு 9 மணிக்கு அவசரமாக லோகு. அய்யப்பனையும், சக்திவேலுவையும் வெளியேற்ற முயற்சி செய்தார். ஆனாலும், தோழர்கள் இரவு நேரத்தில் வெளியேற மறுத்தனர். அவர்களை வலுக் கட்டாயமாக வெளியேற்ற காவல்துறையை வரவழைத்தார். அதிகபடியான காவலர்கள் அங்கு திரண்டதால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பத்திரிகையாளர்களும், ஏராளமான பொது மக்களும் அங்கு விரைந்தனர்.

இரவு 11.30 மணி அளவில் லோகு அய்யப்பன், சக்தி வேல் விடுதலை செய்யப்பட்டனர். சிறை கண்காணிப் பாளர் ஜெயகாந்தனுக்கு எதிராகவும், புதுவை அரசுக்கு எதிராகவும் பொது மக்களும், கழகத் தோழர்களும் விண்ணதிர ஒலி முழக்கங்களை எழுப்பினர். நள்ளிரவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்களின் ஒலி முழக்கங் களாலும், தோழர்கள் வந்த வாகனங்களின் விளக்கு களாலும் புதுவை மாநகரமே அதிர்ந்தது. இரண்டு நாள் சட்ட விரோத காவலில் வைத்திருந்த சிறை கண் காணிப்பாளர் ஜெயகாந்தன் மீது கழக வழக்கறிஞர் மூலம் உயர்நீதிமன் றத்தில் வழக்கு தொடர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**மத்திய உள்துறை அமைச்சகம் நடவடிக்கை:**
**லோகு அய்யப்பன் மீதான தே.பா.ச. ரத்து!**

*ஈழத் தமிழ் அகதிகளுக்கு உதவியதாக புதுவை கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், தி.மு.க. கவுன்சிலர் சக்திவேல், காரை பா.ம.க. மாவட்ட செயலாளர் தேவமணி ஆகியோரை புதுவை காங்கிரஸ் ஆட்சி பழி வாங்கும் நோக்கத்தோடு தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்தது. மத்தியில் உள்துறை அமைச்சராக இருப்பவரும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் தான். அவரது அமைச்சகமே இருவர் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்துள்ளது. புதுவை காங்கிரஸ் ஆட்சியின் அதிகார முறைகேட்டை அந்தக் கட்சியினரே அம்பலப்படுத்தியிருக்கிறார்கள்!*


**கழக (மாதாந்திர)**
**நாட்காட்டி தயாராகிறது**

- ***நீதிக்கட்சி – சுயமரியாதை இயக்கத் தலைவர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் போராளிகள் ஆகியோரது புகைப்படங்கள்.***
- ***தந்தை பெரியார் – பிரபாகரன் பொன் மொழிகள்.***
- ***தமிழக – தமிழீழ வரலாற்று நிகழ்வுகள்.***

- என அரிய தகவல்களுடன் வண்ணமயமாய் வெளிவருகிறது.

**ஒரு நாட்காட்டியின் விலை ரூ.50/- மட்டுமே.**

**தொடர்புக்கு:**

1. இரா. உமாபதி, மாவட்ட செயலாளர், பெரியார் படிப்பகம், 73/1, லாயிட்சு சாலை, இராயப்பேட்டை, சென்னை-14. பேசி: 98847 54080
2. இரா. முத்துராசு, பெரியார் படிப்பகம், பேருந்து நிலையம் அருகில், மேட்டூர் அணை, சேலம் மாவட்டம். பேசி: 97863 16155
3. சோ. கதிரவன், பெரியார் படிப்பகம், அரசு விரைவுப் பேருந்து நிலையம் அருகில், புதுசித்தாபுதூர், கோயமுத்தூர்-18. பேசி: 98433 23153
4. கா.சு. நாகராசன், 107/1, ஆரோக்கியநாதர் வீதி, பொள்ளாச்சி-1. பேசி: 9443833669


– புரட்சிப் பெரியார் முழக்கம் 23.12.2010

**தலையங்கம்**

# ‘பூச்சாண்டி’ காட்டுகிறார்கள்!

*தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை இந்திய தேசியப் பார்ப்பனிய ஆட்சி, சிங்கள ராணுவத்தைப் பயன்படுத்தி ஒடுக்கி, தமிழர் பிரதேசத்தை சிங்களமாக்கிவிட்டது. பல்லாயிரம் தமிழர்களைப் பிணமாக்கிய ஈழ இனப் படுகொலை இந்தியாவின் முழுமையான ஆதரவோடு நடந்து முடிந்துள்ளது. அய்ரோப்பிய நாடுகளும், அய்.நா.வும்கூட இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றன. மன்மோகன் சிங் ஆட்சியோ, கலைஞர் கருணாநிதி ஆட்சியோ இலங்கையின் இனப்படுகொலைகளைக் கண்டித்து, இதுவரை ஒரு கண்டனத்தையும் கண் துடைப்புக்காகக்கூட தெரிவித்தது இல்லை.*

*இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை கடந்த மே மாதம் 14 ஆம் தேதியிலிருந்து மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடித்து விட்டார்கள். சட்டத்தின் நடைமுறைகளுக்காக சடங்குக்காக தீர்ப்பாயம் ஒன்றும் தடையை நீடிக்கலாமா, கூடாதா என்று, ஒரு விசாரணை நாடகத்தை நடத்தியது. தடையை நீடிக்கக் கூடாது என்று, தீர்ப்பாயத்தின் முன் கருத்து கூற, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு என்று, தீர்ப்பாய நீதிபதி கூறிவிட்டார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடையை விதித்துவிட்டு, அந்த இயக்கத்தின் உறுப்பினரே வந்துதான், கருத்து கூற வேண்டும் என்றால், “இது எந்த ஊர் நியாயம்?” என்று தானே கேட்க வேண்டியிருக்கிறது. காலைக்கட்டிப் போட்டுவிட்டு, ஓடச் சொல்லுகிறார்கள். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று தீர்ப்பாயத்தின் முன் வாதாட வந்தவர்களையும் அனுமதிக்க மறுத்து விட்டார்கள். (குறுக்கு விசாரணைக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டது) மத்திய அரசு மட்டுமல்ல, தமிழ்நாட்டில் நடக்கும் தி.மு.க. ஆட்சியும்கூட தடையை நீடிக்க வேண்டும் என்றே தீர்ப்பாயத்தின் முன் வலியுறுத்தியது.*

*விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, அரசியல் நடவடிக்கைகளுக்கு முன் வந்தால், இந்தியா உதவத்தயார் என்று உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், இந்தியாவின் சார்பில் கூறினார். இப்போது ஆயுதப் போராட்டம் ஏதும் நடக்கவில்லை. தமிழர்களின் பிரச்சினையை அரசியல் ரீதியாக முன்னெடுக்க நாடு கடந்த தமிழீழ அரசு என்ற, சர்வதேச நாடாளுமன்றத்தையும் அதற்கான பிரதமரையும், உலகம் முழுதும் வாழும் ஈழத் தமிழர்கள் தேர்வு முறை வழியாக ‘ஜனநாயக’ வழியில் தேர்ந்தெடுத்துள்ளனர். ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு, அரசியல் தீர்வுக்கு வரவேண்டும் என்று கூறியவர்கள். நியாயமாக, இதை வரவேற்றிருக்க வேண்டுமல்லவா? மாறாக, “நாடு கடந்த தமிழீழ அரசுக்கும்” பயங்கரவாத முத்திரைக் குத்தி அதையே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தடையை நீடிப்பதற்கான காரணமாக, இந்திய அரசு தீர்ப்பாயத்தின் முன் வலியுறுத்தியுள்ளனர். இது அறிவு நாணயமற்ற செயல் அல்லவா?*

*தடை நீடிக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, வழக்கறிஞர் புகழேந்தி ஆகியோர் வழக்கு தொடர்ந்துள்ளனர். இந்த நிலையில் விடுதலைப் புலிகள், மன்மோகன் சிங், கருணாநிதி, ப. சிதம்பரம் ஆகியோரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாக புலனாய்வுத் துறையின் வழியாக ஒரு செய்தியைப் பரப்பியுள்ளார்கள். உயர்நீதிமன்றத்தில் தொடரப் பட்டுள்ள வழக்கில் தடையை நீடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே சூழ்ச்சியாக உளவுத் துறை வழியாக இப்படி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள்.*

*சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பே விடுதலைப் புலிகள் வைகோவைப் பயன்படுத்தி தன்னைக் கொல்ல திட்டமிட்டுள்ளதாக கலைஞர் கருணாநிதி கூறி, வைகோவை கட்சியிலிருந்து வெளியேற்றினார். சோனியாவை கொல்ல தென்னாப்பிரிக்காவில் புலிகள் சதித் திட்டம் தீட்டியதாக 10 ஆண்டுகளுக்கு முன் புலனாய்வுத் துறை ஒரு கதை விட்டது. பிறகு பிரபாகரனே கொல்லப்பட்டுவிட்டதாக உளவுத் துறை பரப்பியது. அடுத்து ஜெயலலிதாவை கொல்ல புலிகள் திட்டம் தீட்டியுள்ளதாக புலனாய்வுத் துறை கூறி, அந்த அம்மையாருக்கு ‘இசட்’ பிரிவு’ பாதுகாப்பு வழங்கப்பட்டது.*

*இப்போது மற்றொரு ‘கொலை மிரட்டல்’ அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. உண்மையான படுகொலைகளை தமிழர்கள் மீது திட்டமிட்டு, செய்து முடித்தவர்கள் – போலியான கொலை மிரட்டல் அறிவிப்புகளை மீண்டும் மீண்டும் வெளியிட்டு, தமிழ் ஈழப் பிரச்சினையை பேசுகிறவர்களை மிரட்டுவதற்கும், அவர்களை அடக்குமுறை சட்டங்களின் கீழ் சிறைப்படுத்துவதற்கும் இந்த “மிரட்டலை” ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். உண்மையான மிரட்டல், அச்சுறுத்தல், ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும், தமிழின உணர்வாளர் களுக்கே தவிர, மன்மோகன் சிங்குக்கோ, கலைஞர் கருணாநிதிக்கோ அல்ல.*

*இத்தகைய ‘பூச்சாண்டிகளாலும்’ போலி நாடகங்களாலும் மக்களை தொடர்ந்து ஏமாற்ற முடியாது என்பதை ஆட்சியாளர்களும் உளவுத் துறையும் புரிந்து கொள்ளட்டும்!*

# சத்திய மூர்த்தியின் ‘தேச பக்தி’

## ‘ரிவோல்ட்’ பக்கங்களிலிருந்து....(9)

பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறைகளை தேசிய பார்ப்பனர்கள் எதிர்த்து நின்றதாக பார்ப்பனர்கள் கூறுவது உண்மை தானா? வரலாற்றுப் பக்கங்கள் அப்படி கூறவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகத்துக்கு பெயர் சூட்டப்பட்டுள்ள சத்திய மூர்த்தி என்ற பார்ப்பனர் - பச்சை வர்ணாஸ்ரம வெறியராக செயல்படுவதற்கு காங்கிரசைப் பயன்படுத்தியிருக்கிறார். ‘குடிஅரசு’, ‘ரிவோல்ட்’ ஏடுகள் சத்திய மூர்த்தியின் வர்ணாஸ்ரம வெறியை படம் பிடித்துக் காட்டுகின்றன. பெரும் தொழிலதிபர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு அவர்களுக்கு சாதகமான கேள்விகளை மாகாண சட்டமன்றங்களில் கேட்பது சத்திய மூர்த்தியின் வழக்கம். இதை அவரே ஒப்புக் கொண்டுள்ளார். 6.2.1929 ‘ரிவோல்ட்’ ஏட்டில் ஒரு செய்தி வெளி வந்திருக்கிறது. மாகாண சட்டமன்றத்தில் சத்தியமூர்த்தி ஒரு கேள்வி கேட்டுள்ளார். ராமசாமி நாய்க்கர் வேலூரில் காங்கிரஸ் கட்சியின் பெயரில் சீர்திருத்த மாநாடு நடத்துவதற்கு அனுமதி தந்தது ஏன்? ஏன் 144 தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை? என்பதே இந்த ‘தேசபக்தர்’ எழுப்பிய கேள்வி. பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பதைவிட சமுதாய சீர்திருத்த எதிர்ப்புக்கே இவர்கள் முன்னுரிமை தந்ததை இதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

- திருச்சியிலிருந்து கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்காக மாத இதழ் ஒன்று வெளி வந்தது. அதன் பெயர் ‘கிங்ஸ் ரேலி’ (Kings Rally). சுயமரியாதை இயக்கத்தைத் தொடர்ந்து கடுமையாக எதிர்த்தது இந்தப் பத்திரிகை. சாதி அமைப்பை ஒரு சமூக அமைப்பு என்று நியாயப்படுத்தியது இந்த இதழ். சுயமரியாதை இயக்கத்தால் மதத் துக்கு ஆபத்து வந்துவிட்டதாக எழுதிய அந்த ஏட்டுக்கு ‘ரிவோல்ட்’ இவ்வாறு பதிலளித்தது. “சுயமரியாதை இயக்கம் வைணவத்தை எதிர்த்தபோது சைவர்கள் சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்தனர். சைவத்தை எதிர்த்த போது சைவர்கள் எதிர்த்தனர். இந்து பழமைவாதத்தை எதிர்த்தபோது இசுலாமியர்கள் ஆதரித்தனர். முல்லாக்களை எதிர்த்த போது இஸ்லாமியர் எதிர்த்தனர். புரட்டஸ்டன்டுகளை எதிர்த்தபோது கத்தோலிக்கர்கள் ஆதரித்தனர். கத்தோலிக்கர்களை எதிர்க்கும்போது ‘கிங்ஸ் ரேலி’ இப்போது எதிர்க்கிறது.”
- சர். ஏ. ராமசாமி முதலியார் பார்ப்பனரல்லாதாரில் புகழ் பெற்ற அறிஞர்; ஆங்கில மேதை. அவரது பார்ப்பனரல்லாதார் உரிமைக்கு ஆதரவான தீண்டாமை, வர்ணாஸ்ரம எதிர்ப்பு உரைகளை ‘ரிவோல்ட்’ விரிவாக வெளியிட்டது. அதேநேரத்தில் அவர் தலித் தனித்தொகுதி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்த போது, ‘ரிவோல்ட்’ உடனே “அது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் கருத்து அல்ல; தனித் தொகுதி முறை அவசியம் தேவை என்பதே ரிவோல்ட்டின் கருத்து” என்று மறுப்பு தெரிவிக்க தயங்கவில்லை.

**(இரா)**

**(தொடரும்)**

# பார்ப்பனர் எச்சில் இலையில் ‘அங்கப் பிரதட்சணமாம்’!

*பார்ப்பனர்கள், உயர்சாதியினர், சாப்பிட்ட எச்சில் இலைகள் மீது படுத்துக் கொண்டே உருண்டு பிரார்த்தித்தால் தோல் வியாதிகள் நீங்கும் என்ற மூடநம்பிக்கை, கருநாடக மாநிலம் தட்சிண கன்னடா மாவட்டத்தில் சுப்ரமணியா கிராமத்திலுள்ள குக்கி சுப்பிரமணிய கோயிலில் இன்றும் சடங்காக பின்பற்றப்பட்டுவருகிறது. உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய இந்த ஆபத்தான ‘அங்கப் பிரதட்சணத்தை’ நம்பிக்கையோடு செய்து வருவோர், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்தான். கடந்த டிசம்பர் 10 ஆம் தேதி சில தொலைக்காட்சிகள் இந்த மூடப் பிரார்த்தனையை நேரடியாக ஒளிபரப்பின. அதை நேரில் பார்த்து அதிர்ச்சி அடைந்த உ.பி. முதல்வர் மாயாவதி தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் இந்த சடங்குக்கு தடைபோட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். 400 ஆண்டுகளாக நடக்கும் இந்த ‘இழிவு’க்கு முதன்முறையாக இப்போது எதிர்ப்பு உருவாகியுள்ளது. அம்மாநில சமூக சீர்திருத்தவாதி ஜி.கே. கோவிந்தராவ், கிராமியக் கலைஞர் காலேகவுடா நசவாரா ஆகியோர் தடுத்து நிறுத்த மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டன. தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட அமைப்புகள் பார்ப்பன, உயர்சாதி மேலாண்மையை நிலை நிறுத்தும் இந்த மூடச் சடங்குக்கு எதிராக குரல் கொடுத்துள்ளன. இந்த பிரார்த்தனையை தலித் அல்லாதவர்களும் செய்வதாக கோயில் நிர்வாகம் நியாயப்படுத்தி வருகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் 51(ஏ) (எச்) பிரிவு குடி மக்களிடையே விஞ்ஞான மனப்பான்மையையும், மனித நேயத்தையும், பகுத்தறிவையும் (Spirit of Inquiry) வளர்க்க வேண்டும் என்று கூறினாலும், சட்டத்துக்கு எதிரான மூட நம்பிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. பெரியார் இயக்கங்களைத் தவிர, வேறு எந்த அமைப்பும் பகுத்தறிவு கருத்துகளை பரப்புவதே இல்லை.*

# ஈரோடு மாவட்ட கலந்துரையாடல் கூட்டம்

*19.12.2010 அன்று காலை 11 மணி முதல் ஈரோடு சூரம்பட்டி நான்கு ரோடு அருகே உள்ள அண்ணா அறிவகத்தில், ஈரோடு மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு ஈரோடு மாவட்ட தலைவர் நாத்திகஜோதி, துணைத் தலைவர் கோபி வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வி.மேட்டுபாளையத்தை சார்ந்த பெரியார் பெருந்தொண்டர் வெங்கடாசலம் மறைவிற்கும், விபத்தில் பலியான சேலம் மாவட்டம் கொளத்தூர் நகர செயலாளர் இளஞ்செழியன் மற்றும் தம்மநாயக்கன் பாளையம் கஜேந்திரன் ஆகியோருக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.*

1. *ஈரோடு மாவட்டத்தில் அரசு நிதியில் கட்டப்பட்டுள்ள இரட்டைச் சுடுகாடுகள் பற்றிய விவரங்களை உடனடியாக கணக்கெடுத்து தலைமைக்கு அனுப்புவது.*
2. *பெரியார் நினைவு நாள் மற்றும் அம்பேத்கர் நினைவு நாள் பொதுக் கூட்டங்கள் நடத்துவது.*
3. *பள்ளி மாணவர்களின் தேர்வு நேரத்தில், பக்தியின் பெயரால் கோவில்களில் ஒலி பெருக்கி வைத்து பள்ளி மாணவர்களுக்கு இடையுறு செய்வதையும், அரசு அலுவலகங்களில் மதச்சார்பின்மைக்கு எதிராக நடப்பதையும் சட்டப்படி தடுத்து நிறுத்துவது.*
4. *‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு மேலும் சந்தாக்களை சேர்ப்பது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*ஈரோடு நகர புதிய அமைப்பாளர்களாக திருமுருகன், சிவானந்தம், பிரபாகரன் ஆகியோர் செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டது.*

## திருத்தம்

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ (16.12.2010) இதழில் வெளிவந்த அம்பேத்கர் திரைப்பட விமர்சனத்தில் - பெரியார், வெளிநாட்டிலிருந்து காந்தியின் உண்ணாவிரதத்துக்கு பணிய வேண்டாம் என்று அம்பேத்கருக்கு தந்தி கொடுத்தார் என்று திருத்திப் படிக்கவும், காந்திக்கு தந்தி கொடுத்தார் என்று தவறாக வெளி வந்தமைக்கு வருந்துகிறோம். (ஆர்.)

# தெரியாததை தெரியாது என்று ஒப்புக் கொள்கிறவன் - நாத்திகன்
# தெரியாததை கடவுள் என்று கூறுபவன் - பக்தன்

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

*பல்லடத்தில் நடந்த நாத்திகர் விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:*

இன்று காலையிலிருந்து நடந்த நிகழ்ச்சி நாத்திகர் விழா என்ற பெயரால் ஒரு மாநாட்டை கூட்டி நாத்திக கருத்துகளை முன்னிறுத்தி மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு அல்லது ஏற்கனவே இருக்கிற கருத்துகளை மேலும் தூண்டி விடுவதற்கும் அதை துளிர்த்து விடுவதற்குமாக இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்திக்கொண்டிருக்கிறோம் என்றாலும் இதெல்லாம் ஏற்கனவே மக்களுக்கு தெளிவாக தெரிந்த செய்திகள் தான். மாணவப் பருவத்தில் பள்ளியில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு அறிவியல் என்று ஊட்டப்படுகிறது. அறிவியல் பாடம் சொல்லி தந்த செய்திகள் அதிலே நிபுலா தியரி என்று சொல்லுகிறார்கள். பிக்பேங் தியரி என்று சொல்லுகிறார்கள். உலகம் எப்படி உண்டானது என்பதற்கு உலகம் கடவுளால் படைக்கப்பட்டது பொய் என்று அறிவியல் பாடம் சொல்லிவிட்டது மாணவப் பருவத்தில்.

டார்வின் தியரியை படிக்கிறார்கள் எப்படி உயிர்கள் உருமலர்ச்சி பெற்றது என்று. ஓர் அணு அமீபாவாக இருந்து மனிதனாக உரு மலர்ச்சிப் பெற்ற முழு வரலாற்றை டார்வின் தத்துவம் சொல்லி வருகிறது. ஆக மனிதன் படைக்கப்படவில்லை. மனிதன் உரு மலர்ந்தான் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை அறிவியல் பாடம் சொல்லி விடுகிறது. எல்லாம் கடவுள் படைக்கவில்லை என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை அறிவியல்பாடம் சொல்கிறது. ஆனால் அறிவியல் என்பது அறிவியல் அறிவாக உள்ளது. அறிவியல் மனப்பான்மையாக மாற வேண்டும் என்பதே நம் நோக்கம்.

அறிவியல் அறிவு - Scientific Knowledge மட்டும் போதாது அறிவியல் மனப்பான்மை - Scientific Mentality வேண்டும். அப்படி அறிவியல் மனப்பான்மை இருந்தால் தான் எதையும் அறிவியல் பார்வையில் அணுக முடியும் - Scientific Approach. அறிவியல் அணுகுமுறை இருந்தால் தானாகவே அறிவியல் கண்டுபிடிப்புகள் - Scientific Inventions உருவாகும்.

அறிவியல் மனப்பான்மை இல்லாததால்தான் சரஸ்வதிக்கு வருடம் தவறாமல் பூஜை நடத்தியும் காகிதத்தை மிதித்தாலும் கண்ணில் ஒற்றிக் கும்பிடும் நமது நாடு தாழ்ந்து கிடக்க காகிதத்தில் மலம் துடைக்கும் ஐரோப்பியர்கள் மேலை நாட்டார்கள் வளர்ந்து நிற்கிறார்கள்.

அறிவியலை வயிற்றுக்காக படிப்பதற்கு மாறாக அறிவியலை மூளைக்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும். அதை செயல்படுத்த வேண்டும் என்று கேட்பதும், அப்படி செயல்படுத்த வேண்டும் என மக்களிடம் வேண்டுகோள் வைத்து அதற்கு துணையான நிகழ்ச்சிகளை நிகழ்த்தி காட்டினார்கள். அருமைத் தோழர்கள் அலகு குத்தி தொங்கிய வண்ணம் காட்டினார்கள். இராட்டின காவடி என்று அலகு குத்தி தோழர் சட்ட கல்லூரி மாணவர் பன்னீர்செல்வம், கோவை மாநகர செயலாளர்கோபால், பல்லடத்தைச் சேர்ந்த குமார் கூட அலகு குத்தி வந்ததை நீங்கள் பார்த்தீர்கள். உள்ளூர் தோழர்களைப் பார்த்தீர்கள்.

பல பேர் வந்தார்கள். காரணம் இதன் மூலம் செயல் விளக்கமாக செய்ய வேண்டும் என்பதும் கூடுதல் முயற்சி. இப்படிப்பட்ட செயல்களில் கடவுள் மறுப்பைப் பற்றி ஏன் கடவுள் இல்லை, எப்படி இல்லை என்று விளக்குகிறார்கள். முழக்கமிட்டபோது கூட சிலருக்கு வருத்தமாக இருந்திருக்கும். கடவுளை கற்பித்தவன் முட்டாள் என்கிறார்கள். பரப்பியவனை அயோக்கியன் என்கிறார்கள். வணங்குகிறவனை காட்டுமிராண்டி என்று சொல்கிறார்கள். வீதியில் போகிறவனை பார்த்து திட்டுவதுபோல அல்ல.

இதனால் வருத்தமுற்ற பக்தர்கள் பெரியாரிடமே எதிர்ப்பைக் காட்டினார்கள். சீர்காழியில் பெரியார் பேசவிருந்த மேடைக்கு முன்னால் பெரிய பலகையை வைத்தார்கள். கடவுளை கற்பித்தவன் புத்திசாலி. ஏன்னா நாம் முட்டாளுனு சொல்றோம்; கடவுளை பரப்பியவன் பண்பாளன். வணங்குகிறவன் வாழ்வான் என்று எழுதி வைத்தார்கள். பெரியார் வந்து பார்க்க வேண்டுமாம், எழுதி வைத்தார்கள்; பெரியார் பார்த்தார்.

கடவுளை கற்பித்தவன் புத்திசாலி என்று எழுதி வைத்திருக்கிறார்கள். நான் கடவுளை உண்டாக்கியவன் முட்டாள் என்று சொல்லுகிறேன். இரண்டு பேருக்கும் சின்ன வேறுபாடுதான் இருக்கிறது. இரண்டு பேரும் கடவுள் உண்டாக்கப்பட்டது என்பதை ஒத்துக் கொள்கிறோம். அவன் முட்டாளா புத்திசாலியா என்பதே இப்ப சண்டை வேறு ஒன்றுமில்லை, என்றார் பெரியார்.

கடவுள் உண்மையாக இல்லை. இயற்கையாக இல்லை. பெரியார் மூன்று கேள்வி கேட்பார். கடவுள் Nature-ஆ, Invention-ஆ, Creation-ஆ இதில் எது என்று கேட்டார். அதாவது கடவுள் இயல்பாக இருக்கிறதா, கண்டு பிடிக்கப்பட்டதா, உண்டாக்கப்பட்டதா, சொல்லு நீ.... நான் கடவுள் உண்டாக்கப்பட்டது, உண்டாக்கியவன் முட்டாள் தனமாக சரியான செய்திகளை சொல்லாமல் உண்டாக்கி வைத்து போய்விட்டான் என்று சொல்கிறேன். நீ உண்டாக்கியவன் புத்திசாலி என்று சொல்கிறாய். ஆனா இரண்டு பேரும் ஒன்றை ஒத்துக் கொள்கிறோம். கடவுள் இயற்கை அல்ல, உண்டாக்கப்பட்டது என்று பெரியார் சொன்னார். அதைப்போல உண்டாக்கப்பட்ட கடவுள் நம்முடைய அறியாமையை, ஏன்னா கடவுளுக்கு எது அடிப்படை என்றால் அறியாமையும் மலைப்பும்தான். அறியாமையே நமக்கு தெரியாத பொருளுக்கெல்லாம் கடவுள் என்று விளக்கம் சொல்கிறது.

*5* ஆம் வகுப்பு மாணவனிடம் போய் *2*-ம் *2*-ம் எவ்வளவு என்றால் சொல்வான். *5*-ம் *5*-ம் எவ்வளவு என்றால் சொல்ல முடியும். இல்ல *5*-ம் *5*-ம் பெருக்கினால் எவ்வளவு என்றும் சொல்வான். அவனிடம் போய் *3284*-ம் *8738*-ம் எவ்வளவு என்றால்சொல்ல தெரியாது. அல்லது கொஞ்சம் நேரம் வேண்டும். அவன் தெரியவில்லை என்றால், ஆசிரியர் சரி அடுத்த முறை முயற்சி செய்து பார் என்று சொல்வார். கடவுள் என்று சொன்னால் ஆசிரியர் அனுமதிக்க மாட்டார். ஆனால், சமுதாயம் அப்படிப்பட்ட போக்கை அனுமதித்துக் கொண்டிருக்கிறது. எதெல்லாம் தெரியவில்லையோ அதையெல்லாம் கடவுள் என்கிறான். அணுவை பிளந்தால் புரோட்டான், நியூட்டான் அதுக்கப்புறம் தெரியலைனு நாம சொல்வோம். அவன் கடவுள் என்று சொல்வான். பக்தனுக்கும் நாத்திகனுக்கும் உள்ள வேறுபாடு அங்கே தான் இருக்கிறது.

அந்த கட்டடத்துக்கு அந்தப் பக்கம் என்னவென்று தெரியாது என்று சொல்கிறோம் போய் பார்த்தா தெரியப் போகுது. மலைக்கு அந்தப் பக்கம் என்னவென்று தெரியாது போய் பார்த்தால் தெரியும். நிலவில் என்ன இருக்கிறது அப்ப தெரியாது போய் பார்த்தோம் தெரிந்து விட்டது. அதற்கு மேல் போக போகத் தெரியும், தெரியாததை தெரியாது என்று சொல்பவன் நாத்திகன். தெரியாததை கடவுள் என்று சொல்பவன் ஆத்திகன் அவ்வளவுதான் வேறுபாடு. நாங்கள் தெரியாததை தெரியாது என்று சொல்லுங்கள் நாணயமாவது மிஞ்சும். நம்மை வேண்டுமானால் முட்டாள் தெரியாதவன் என்று அவன் சொல்லிவிட்டுப் போகட்டும். நாணயமானவன் என்று சமுதாயம் ஒத்துக் கொள்ளும்.

நீங்கள் சொல்லுகிற பதில், கடவுள் என்கிற பதில் இரண்டையும் ஏற்றுக்கொள்ளாது. அதைத்தான் நாங்கள் சொல்லுகிறோம். இப்படி பல பேரால் மறுக்கப்பட்டிருக்கிற கடவுளை, யார் யார் மறுத்தார்கள் என்றெல்லாம் காலையில் சொன்னார்கள். கடவுள் என்பது ஒன்று அறிவுக்கு புறம்பாக இருக்கிறது. வேண்டாம் என்று சொல்கிறோம். இன்னொன்று தன்னம்பிக்கைக்கு எதிராக உள்ளது. கடவுள் நம்பிக்கையை விட்டு விடுங்கள் என்று சொல்கிறோம். ஆனால் நாம் கடவுள் செய்யும் என நம்பிக் கொண்டு அமைதியாக இருந்து வருகிறோம். கடவுள் பார்த்துக் கொள்வார் என்று நாம் விட்டுவிடுகிறோம்,தோல்வியில் முடிகிறது.

அங்கிருந்து இசுலாமியர்கள் படையெடுத்து வந்தபோது இங்கு நம்ம அரசருக்கு ராஜகுரு அறிவுரை சொன்னார். அரசன் வைணவத்தை சேர்ந்தவன். நீ ஒன்றும் செய்யாதே எல்லையில் கொண்டு போய் துளசியை விரித்து விட்டால் போதும் என்றார்கள். துளசி தழையை பூஜை செய்து போட்டால் முஸ்லீமின் குதிரை இந்தப் பக்கம் வராது என்று சொன்னான். துளசி இலைகளைக் கொண்டு போய் தூவி விட்டான் குதிரைகள் அவற்றை தின்னுட்டு இந்தப் பக்கம் வந்துவிட்டது. சண்டை போடாம ஆட்சியை புடிச்சிட்டு போயிட்டான்.

நம்ம தமிழ்நாட்டில் பல ஆட்சிகள் அப்படித்தான் போய்விட்டது. ஏராளமான உதாரணங்களை சொல்ல முடியும். இங்கிலாந்தில் ஆங்கிலேய தளபதி ஒருவன் இருந்தான். நெல்சன் என்று பெரிய கப்பல் படை தளபதி. புகழ் பெற்ற தளபதி அவன். தன் படை வீரர்களுக்கு சொன்னான் போருக்கு போகும் முன் சொன்னான், படை வீரர்களே கடவுளை நம்புங்கள், ஆனால் வெடிமருந்து நனையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

பூசாரியே சம்பளம் அதிகம் வேண்டுமென்றால் அரசு கிட்டதான் கோரிக்கை வைக்கிறான். எங்களுக்கு பாதுகாப்பு நிதி கொடுங்கள் என்று அரசைக் கேட்கிறான். ஓய்வூதியம் வேண்டும் என்று அரசைக் கேட்கிறான். கடவுள்கிட்ட ஒரு நாளும் கேட்டதில்லை. எல்லா பூசாரியும் சங்கம் வைத்து அரசுக்கிட்ட கோரிக்கை வைக்கிறான்.

கோயிலுக்கு அதிகமாக கூட்டம் போகிறது என்று சொன்னார்கள். பெரியார் எளிமையாக சொன்னார். அவர் எதையும் மிக எளிமையாக சொல்வார். கோயிலுக்கு கூட்டம் அதிகமாக போகிறதா ? நான் ஒரே ஒரு நிபந்தனை வைக்கிறேன். ஒரு நாளைக்கு ஆண்கள் மட்டும் கோயிலுக்கு வரவேண்டும். ஒரு நாளைக்கு பெண்கள் மட்டும் கோயிலுக்கு வரவேண்டும். அப்புறம் பார் கூட்டத்தை என்று சொன்னார். இதுதான் கடவுள் நம்பிக்கை என்பது. இந்த கடவுள் நம்பிக்கை வைத்துக் கொண்டிருப்பது வெளிநாடுகளில் அறிவுக்கு மட்டும் எதிரானது. அறிவுக்கு மட்டும் எதிரானது என்பதால் அறையிலிருந்து அறிஞர்கள் எல்லாம் உட்கார்ந்து அறிவியல் சிக்கலாக பார்த்தார்கள்.

பெரியாரே சொல்வார் கடவுள் உண்டா இல்லையா என்பது, அறையில் உட்கார்ந்து அறிஞர்கள் சொல்ல வேண்டிய செய்தி. அரங்கில் வந்து மக்களிடம் பேச வேண்டிய செய்தி இல்லை. ஆனால் ஏன் கடவுள் இல்லை என்று சொல்வதற்கு பெரியார் சில விளக்கங்களை சொல்வார். நிறைய பேர் கடவுள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். காலையில் எல்லாம் பேசினார்கள். நடிகர் கமலகாசன் கடவுள் இல்லை என்று சொல்லுவார். ஆனால், இடஒதுக்கீடு தப்பு என்கிறார். அவருக்கு கடவுள் இல்லை தான். இந்து ராம் கடவுள் இல்லை என்று சொல்லுகிற மார்க்சிஸ்ட் என்று தன்னை சொல்லிக் கொள்கிறார். ஆனால் குற்றவாளியாக இருக்கிற இளைய சங்கராச்சாரியாரை அவர் தான் காரில் அழைத்துப் போய் காஞ்சிபுரத்தில் விடுகிறார்.

இவர்களையெல்லாம் விட்டுவிடுங்கள். இந்த நாட்டிற்கு தீங்காய் வந்த இந்துத்துவா என்ற தத்துவத்தை தந்த சாவர்க்கர், காந்தி கொலையில் குற்றவாளி. இந்துத்துவா என்ற பாசிச கருத்தை முதலில் விதைத்தவர். இந்த நோய்க்கெல்லாம் காரணமாக இருந்த சாவர்க்கர் ஒரு நாத்திகர். அவர் கடவுளை நம்பியவர் அல்ல. ஆனால் பார்ப்பனன் உயர்ந்தவன். ஆரியன் உயர்ந்தவன் என்ற ஆணவ கருத்தும் ஆரியர் ஆட்சியில்தான் இந்தியா இருக்க வேண்டுமென்றும் அவர் விதைத்த நச்சு விதைகள் ஏற்படுத்தியிருக்கிற நாசங்களை நாம் அறிவோம். கடவுள் உண்டு இல்லை என்பதால் ஒன்றும் பெரிதாய் வந்து விடாது. இந்த கடவுள் நம்பிக்கையை ஏன் மறுக்கிறோம் என்பதில்தான் அடங்கியிருக்கிறது பெரியாரின் தத்துவங்கள் அனைத்தும் என்பதால்தான். பெரியார் கடவுள் மறுப்பை எப்படி சொன்னார் என்றால், கடவுளை எப்படி மறுக்கிறார் என அவரே சித்திரபுத்திரன் என்ற புனைப் பெயரில் குடி அரசில் ஒரு உரையாடலை எழுதி இருக்கிறார்.

நாத்திகனை கூப்பிட்டு ஒரு ஆத்திகன் கதை சொல்கிறான். கடவுள் எப்படியெல்லாம் உலகத்தை படைத்தார் என்று சொல்லுவான். அவர்தான் வெளிச்சத்தைக் கொடுத்தான் என்று சொல்லுவான். நாத்திகன் கேள்வி கேட்பான். "அதற்கு முன் இருட்டாய் இருந்துச்சா. அப்படின்னா இருட்டை எவன் உண்டாக்கினான்." இப்படி பல கேள்விகளை கேட்டார்.

இன்னொன்றும் சொன்னார் பக்தன் இரண்டை நம்புகிறான். கடவுளை நம்புகிறான், விதியை நம்புகிறான். பெரியார் கேட்டார், கொஞ்சம் பொறுமையாய் யோசி. கடவுள் என்பதை நம்பினால் விதியை மறந்துவிடு. விதி உண்மையாக இருந்தால் கடவுள் இல்லை. ஏனென்றால் என்னுடைய விதிப்படி நான் பிறந்தேன், வளர்ந்தேன், சாவேன் என்றால் இன்னைக்கு கீழே இறங்கி வண்டியில் போகையில் அந்த மூலையில் போய் விபத்து நேரிட்டு சாவதுதான் விதியாக இருந்தால், அப்புறம் எதற்கு கடவுளை கும்பிடனும். கும்பிட்டாலும் சாவேன். ஏன்னா விதி. அதுதான் என்ன பண்ணினாலும் சாவேன் என்றால், கடவுள் எதற்கு ? அல்லது கடவுளை நம்பினால், கடவுளை வணங்கினால், பிரார்த்தனை செய்தால், அதற்கு உண்டியலில் போட்டால், பூஜை செய்தால் அந்தவிதியை கடவுள் மாற்றிவிடும் என்றால் விதியை உண்மை என்று சொல்லாதே. இரண்டில் ஏதாவது ஒன்றை சொல் என்றார் பெரியார்.

**(தொடரும்)**

- புரட்சிப் பெரியார் முழக்கம் 23.12.2010

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# நீரா ராடியாவின் இந்துத்துவ - பன்னாட்டு நிறுவன பின்னணி

*2ஜி ஸ்பெக்ட்ரம் தொடர்பான சர்ச்சைகளில் டாட்டா மற்றும் அம்பானி நிறுவனத்துக்கான தரகராக செயல்பட்டு வரும் நீரா ராடியாவின் பின்னணியில் பன்னாட்டு இந்துத்துவ சக்திகள் உள்ளதை விளக்குகிறது இக்கட்டுரை.*

நாடாளுமன்றத்திலும், வெளியிலும் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் பற்றி பெரும் குரல் எழுப்புகின்றது, பா.ஜ.க. ஆனால், நன்றாகக் கவனித்துப் பார்த்தால் நீராராடியா டேப் பற்றி வாயே திறப்பதில்லை. ஏன் ?

பதில் அந்த டேப்புகளிலேயே இருக்கின்றது. அவருக்கு முதன்முதலில் பழக்கமான இந்திய அரசியல்வாதி பா.ஜ.க.வின் மக்களவை உறுப்பினரும், முன்னாள் மத்திய அமைச்சருமான அனந்த்குமார் தான். சற்று பின்னோக்கி போவோம்.

கென்யாவில் வாழ்ந்து கொண்டிருந்த பஞ்சாபி பெற்றோருக்குப் பிறந்தவர் நீராடியா. அவரது தந்தை சர்மா (பார்ப்பனர்-ஆர்) விமான உபகரணங்கள் விற்பனையாளர். 1970களில் அவர் லண்டனுக்குக் குடிபெயர்கின்றார். லண்டனில் இளங்கலை பட்டம் பெற்ற ராடியா அங்கு நிதி வர்த்தகம் செய்து வந்த ஜனக் ராடியா என்கிற குஜராத்தியை மணம் முடிக்கின்றார். அவர்களுக்கு மூன்று ஆண் குழந்தைகள். பின்னர் 1995 இல் விவகாரத்து ஆகின்றது. அப்போதுதான் அவர் இந்தியாவிற்குக் குடி பெயர்கின்றார்.

இந்தியாவில் பல்வேறு விதமான சேவை நிறுவனங் களில் பிரதிநிதியாக, அவற்றின் மக்கள் தொடர்பைக் கவனித்துக் கொள்பவராகச் செயல்பட்டார். சகாரா, சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், யுகேஏர், கேஎல்எம் எனப்படும் கொரிய விமான நிறுவனம் ஆகியவை. ஏர் பஸ் என்கிற விமான தயாரிப்பு நிறுவனத்திற்கும் ஆலோசகராக ஆகின்றார்.

பின்னர் இரண்டு முறை சொந்தமாக விமான சேவை நிறுவனம் துவங்க முயற்சி செய்து தோல்வியடைந்தார். 2000-வது ஆண்டு முதலில் துவங்க நினைத்த நிறுவனத்தின் பெயர் கிரவுன் எக்ஸ்பிரஸ். முதலீடு 100 கோடி. (சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் பினாமி நிறுவனம்) மீண்டும் 2005 ஆம் ஆண்டு மேஜிக் ஏர் என்கிற விமான சேவை நிறுவனத்தைத் துவங்க முயற்சித்தார். அதுவும் தோல்வியடைந்தது. இரண்டுக்குமே முக்கியமான காரணம் அவரிடம் இந்தியக் கடவுச் சீட்டு இல்லை என்பதும், அந்த வகையில் அவர் பிரிட்டன் குடிமகள் என்பதும் தான். உள்நாட்டு விமான சேவையில் அந்நிய நிறுவனங்களை அனுமதிப்பதில்லை என்பது இன்று வரையிலும் அரசின் கொள்கையாக இருந்து வருகின்றது. இந்தக் கொள்கை அப்படியே மாறாமல் இருப்பதற்கு இந்திய விமான சேவை நிறுவன முதலாளிகள் நரேஷ் கோயல், விஜய் மல்லையா போன்றோர் காரணம். அதனால் தான் டாடா சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்துடன் கூட்டாகத் துவக்க விரும்பிய விமான நிறுவனத்திற்கு அனுமதி கிடைக்கவில்லை.

இதற்கிடையே 2001 இல் வைஷ்ணவி கம்யூனிகேசன்ஸ் என்கிற ஆலோசனை நிறுவனத்தைத் தொடங்குகின்றனர். நோயசிஸ் விக்டோம், நியோகாம் ஆகிய நிறுவனங் களையும் பின்னர் துவக்குகின்றார். டாடா குழுமத்தின் 90 நிறுவனங்களுக்கும் மக்கள் தொடர்பு சேவைகள் வழங்கும் உரிமையைப் பெறுகின்றார். பின்னர் முகேஷ் அம்பானியின் ரிலையன்சும் அவரது வாடிக்கையாளர் பட்டியலில் சேருகின்றது.

அவர் 1998-99களில் விமான சேவை நிறுவனங்களின் ஆலோசகர் என்கிற வகையில் அவரக்கு அப்போதைய விமான போக்குவரத்துத் துறை மத்திய அமைச்சர் அனந்தகுமாருடன் (இவரும் ஒரு பார்ப்பனர் - ஆர்) பரிச்சயம் ஏற்படுகின்றது. நெருங்கிய நண்பராகின்றார். இதைப் பயன்படுத்தி அவர் அதிகார வட்டாரங்களில் செல்வாக்கு மிக்கவராக தன்னை வளர்த்துக் கொள் கின்றார். அவர் மூலம் கர்நாடகாவின் செல்வாக்கு மிக்கவராக தன்னை வளர்த்துக் கொள்கின்றார். அவர் மூலம் கர்நாடகாவின் செல்வாக்கு மிக்க மடாதிபதிகளில் ஒருவரான பெஜாவர் மடாதிபதியுடன் அறிமுகம் ஏற்படு கின்றது. 2003 ஆம் ஆண்டு 'தவறான கட்சியில் இருக்கும் நல்லவர்' வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது அவர் பெஜாவர் மடாதிபதியைச் சந்திக்கிறார். அப்போது வாஜ்பாயுடன் நீராராடியாவும் இருக்கும் புகைப்படம் ஒன்றை அப்போதே 'லங்கேஷ்' பத்திரிகா' எனப்படும் கன்னட இதழ் வெளியிட்டது. மேற்குறிப்பிட்ட விவரங்களுடன் அதை 'அவுட்லுக்' இதழ் (டிசம்பர் 6, 2010) மறுபிரசுரம் செய்துள்ளது.

வாஜ்பாயின் வளர்ப்பு மருமகன் ரஞ்சன் பட்டாச்சார்யா வும் ராடியாவின் நண்பர். முகேஷ் அம்பானியின் சார்பாக அவர் ராடியாவுடன் பேசும் தொலைபேசி உரையாடலும் வருமானவரித் துறையின் அமலாக்கப் பிரிவால் பதிவு செய்யப்பட்டுள்ளது. யார் அமைச்சராகலாம், கூடாது என்பது குறித்த இந்த உரையாடலின் ஒரு சிறு பகுதியை மட்டும் இங்கு தருகின்றோம்.

**ரஞ்சன்:** ஆக, முகேஷ் மகிழ்ச்சியாக இருக்கின்றார் ?

**ராடியா :** மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்.

**ரஞ்சன் :** (சிரிக்கின்றார்) அவர் என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா ?

**ராடியா :** என்ன ?

**ரஞ்சன் :** அவர் தன்னுடைய வழக்கமான பாணியில் சொன்னார்... நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்றார்... என்னை விடுங்கள்... நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று நான் கேட்டேன்.

**ராடியா :** ம்... ம்....

**ரஞ்சன் :** ஓகே என்றார்... எப்போதாவது கொஞ்சம் உணர்ச்சியை வெளிப்படுத்துங்கள் என்றேன்... உங்கள் வேலை எல்லாம் செய்தாகிவிட்டது என்றேன்....

**ராடியா :** ம்... ம்ம்....

**ரஞ்சன் :** ..... ரஞ்சன் நீங்கள் சொன்னது சரி. காங்கிரஸ் இப்போது நமது கடை என்று முகேஷ் கூறினார்.

**ராடியா :** (சிரிக்கின்றார்)

(ஆதாரம்: 'ஓபன்' ஆங்கில வார இதழ், நவம்பர் 20, 2010)

அம்பானி சகோதரர்களுக்கு இடையில் இயற்கை எரிவாயு உரிமம் குறித்து நடந்த சண்டை குறித்து நாடாளுமன்றம் விவாதித்ததும், அந்த விவாதத்தில் பா.ஜ.க. சார்பாக முதலில் அருண்ஷோரி பேசுவதாக இருந்ததும், அவர் பேசினால் அனில் அம்பானிக்குச் சாதகமாகப் பேசி விடுவார் என்பதனால், முகேஷ் அம்பானியின் ஆலோச கராக இருந்த ராடியா பா.ஜ.க. கூட்டணிக் கட்சியான ஐக்கிய ஜனதா தளத்தின் என்.கே.சிங் மூலமாக அப்போது பா.ஜ.க. தலைவராக இருந்த வெங்கய்ய நாயுடு விவாதத்தைத் துவக்குவதாக மாற்றியது குறித்து ஷோரி வெளிப்படையாகப் புலம்புவதும் நாடறிந்த கதை.

இத்தோடு முடியவில்லை, ராடியாவின் பா.ஜ.க. தொடர்பு. எந்த பா.ஜ.க. தலைவரை பீகாரில் பிரச்சாரம் செய்யக் கூடாது என்று ஐக்கிய ஜனதாதளம் சொன்னதோ அந்த நரேந்திர மோடிக்கும் அவருக்கும் கூட தொடர்பு இருக்கின்றது.

''டைம்ஸ் ஆப் இந்தியா'' நாளிதழின் அகமதாபாத் பதிப்பு சிறப்பாசிரியராக அந்நாளில் இருந்த கிங்சுக் நாக் தன்னுடைய வலைதளத்தில் அந்நாட்கள் குறித்த நம்முடைய நினைவுகளைக் கிளறிவிடுகின்றார். மோடி விஷயத்தில் இணக்கமாக நடந்து கொள்ளுமாறு ராடியா தன்னுடைய வலை தளத்தில் அந்நாட்கள் குறித்த நம்முடைய நினைவுகளைக் கிளறிவிடுகின்றார். மோடி விஷயத்தில் இணக்கமாக நடந்து கொள்ளுமாறு ராடியா தன்னிடம் இரண்டு முறை கேட்டுக் கொண்டதாக நாக் எழுதுகின்றார். உங்களைப் போன்ற ஆட்கள் நரேந்திர மோடிக்கு வாழ்க்கையை நரகமாக்கிவிட்டீர்கள். நீங்கள் ஏன் அவரையும், அவரது கொள்கைகளையும் புரிந்து கொள்கிற வர்களாக இருக்கக் கூடாது ? என்று ராடியா கேட்டதாக தன்னுடைய கட்டுரையில் மேற்கோள் காட்டுகின்றார். மோடி உங்களது வாடிக்கையாளராக ஆகிவிட்டாரா என்று நாக் அவரிடம் கேட்டபோது, குஜராத்தின் மருமகள் என்கிற வகையில் மட்டுமே அம்மாநிலத்தின் விஷயத்தில் தனக்கு பொறுப்பு இருப்பதாக ராடியா கூறியிருக்கின்றார்.

''வேறு ஒருவர் மூலமாக ராடியா மோடிக்கு அறிமுகப் படுத்தப்பட்டது போல் தெரிகின்றது. வெகு விரைவிலேயே குஜராத் முதலமைச்சருடன் தன்னுடைய நட்பைப் பலப்படுத்திக் கொண்டார் ராடியா. டாடா மோட்டார்ஸ் தன்னுடைய நானோ தொழிற்சாலையை குஜராத்திற்கு மாற்றியபோது அது பலனளித்திருக்கும். பஞ்சாப், மகாராஷ்டிரா, ஒரிசா, ஆந்திரப் பிரதேசம், அரியானா ஆகிய ஐந்து மாநிலங்கள் அந்த தொழிற்சாலைக்காக போட்டி யிட்டுக் கொண்டிருக்கும்போது திடீரென்று குஜராத்திற்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. தற்போது டைம்ஸ் ஆப் இந்தியா வின் ஐதராபாத் பதிப்பின் சிறப்பாசிரியராக இருக்கும் நாக் 'டாடாவிற்கு நிலம் கிடைத்த வேகம்... மோடிக்கு முன்னரேயே தெரிந்திருக்கும் வாய்ப்பு இருக்கின்றது. புத்திசாலி என்கிற வகையில் அவர் நிலத்தைத் தயாராக வைத்திருக்கக் கூடும்' என்று 'அவுட்லுக்'கிடம் கூறினார்.'' (டிசம்பர் 6, 2010)

இவ்வளவு பழக்கம் இருந்தும் 'உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கின்றதே'' என்று கூட பா.ஜ.க. ராடியா பற்றி வாய் திறக்க மாட்டேன் என்கிறதே, அது கவனிக்கப்பட வேண்டியது.

**நன்றி : 'தீக்கதிர்',** 11.12.2010

## சிற்பி ராசன் பிறந்த நாள்



கழகப் பகுத்தறிவுப் பரப்புரை யாளர் சிற்பி ராசன், டிசம்பர் 25 அன்று 56 ஆம் அகவையிலிருந்து 57 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறார். பகுத்தறிவுத் தொண்டையே வாழ்க்கையாகக் கொண்டிருக்கும் சிற்பிராசன் தொண்டு சிறக்க 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வாழ்த்து கிறது. பிறந்த நாள் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

## பெரம்பலூரில் வீரவணக்க நாள்




சாதி ஒழிப்பு போராளி டாக்டர் அம்பேத்கர் மற்றும் ஈழத் தமிழர்களுக்காக தீயிட்டு மரணத்தைத் தழுவிய அப்துல் ரவூப் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் 14.12.2010 அன்று பெரம்பலூர் வானொலி திடலில் கழக சார்பில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் துரை. தாமோதரன் தலைமை தாங்கினார். திருச்சி பெரியார் கலைக் குழுவினரின் பறை இசையுடன் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. ஜெயவர்த்தனா வரவேற்புரையாற்றினர். கழக சார்பில் தியாகி அப்துல் ரவூப்பின் தந்தை அசன் முகமதுக்கு சிறப்பு செய்யப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். வீர வணக்க நாள் பொதுக் கூட்டத்திற்கான முழு வேலைகளையும் இரவு பகல் பாராது செய்த இயக்கத் தோழர்கள் நெய்குப்பை ஜெயவர்த்தனா, வி. களத்தூர் பிரபு ஆகியோர் ஆடை போர்த்தி சிறப்பிக்கப்பட்டனர். வீர. செங்கோடன், பேரா. முருகையன் - (விடுதலை சிறுத்தைகள்), செ. துரைராசு (ம.தி.மு.க.), ஆதி. தமிழ்ச்செல்வன் (மன்ற நிதி பேரவை), இரா. கிட்டு, ஜெ. தங்கதுரை, சுல்தான் மொய்தீன், மனித நேயமக்கள் கட்சி எழுத்தாளர் அம்மணி ஆகியோர் உரையாற்றினர். பெரியார் நேசன் நன்றி கூறினார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
தொடர்புக்கு புதிய எண்: ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 23rd December 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் periyardk.org திருவள்ளுவர் ஆண்டு 2041 டிசம்பர் 30, 2010 புரட்சி 9 முழக்கம் 51 விலை: ரூ.2.50


# 2010: கழகத்தின் கொள்கைப் பயணம்

*'குடிஅரசு' வழக்கில் உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் வெற்றிகளைக் குவித்ததும், சாதி, தீண்டாமை ஒழிப்புக்கான பரப்புரைகளையும் போராட்டங்களையும் தொடர்ச்சியாக முன்னெடுத்ததும், 2010 ஆம் ஆண்டில் பெரியார் திராவிடர் கழகத்தின் பயணத்தில் முக்கிய மைல் கல்லாகும்.*

*களப்பணிகள் – போராட்டங்கள் வழியாக பெரியாரியலை வழக்கம் போல் மக்களிடையே கொண்டு சென்றும் போராடி சிறை சென்றும் பெரியார் திராவிடர் கழகம் உயிர்த் துடிப்புடன் செயலாற்றும் இயக்கம் என்பதை மீண்டும் கழகச் செயல்வீரர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.*

*பயிற்சி முகாம்கள் வழியாக பெரியாரியச் சிந்தனைகளை மேலும் செழுமைப்படுத்திக் கொண்ட தோழர்கள் களப்பணிகளிலும் முனைப்போடு செயலாற்றியிருப்பது கடந்த ஆண்டின் சிறப்புகளாகும். கடந்த ஆண்டு கழகத்தின் செயல்பாடுகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

## ஜனவரி

புத்தாண்டின் தொடக்க நாளிலேயே உடுமலைப்பேட்டை அருகே உள்ள திருமூர்த்தி அணைக்கட்டுப் பகுதியில் பயிற்சி முகாமோடு கழகப் பணிகள் தொடங்கின. மூன்று நாட்கள் சிறப்பான பயிற்சி முகாமை கோவை மாவட்டக் கழகத் தோழர்கள் நடத்தினர். தொடர்ந்து 9,10 தேதிகளில் திண்டுக்கல்லில் பயிற்சி முகாம், ஈரோட்டில் 'தமிழ் மய்யம்' நடத்திய "நம்ம ஈரோடு" விழாவையொட்டி நடந்த பெரியார் சமத்துவப் பேரணியில் கழகத் தோழர்கள் பெருமளவில் பங்கேற்று மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர். (ஜன.4) சேலத்தில் தோழர்கள் தொடர் பரப்புரைக் கூட்டங்களை நடத்தினர். (ஜன.5-12). திருச்சி தோழர்களும் சாதி - தீண்டாமை ஒழிப்பு தொடர் பரப்புரைக் கூட்டங்களை நடத்தினர். (ஜன.7-13) சூரிய கிரகணத்தின் போது சாப்பிடக் கூடாது என்ற மூடநம்பிக்கைகளை முறியடித்து, சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் அன்று சூரிய கிரகணத்தின்போது தியாகராயர் நகரில் மாட்டுக்கறி விருந்து நடத்தினர். (ஜன.15) சென்னை இராயப்பேட்டையில் கழகம், மாபெரும் தமிழர் கலை விழாவை தமிழர் திருநாள் விழாவாக நடத்தியது. (ஜன. 12)

## பிப்ரவரி

திருவரங்கத்தில் பெரியார் சிலையை மதவெறி சக்திகள் உடைத்ததற்கு எதிர்வினையாக ஈரோடு பார்ப்பன மடமான ராகவேந்திரா மடத்தைத் தாக்கியதாக ஈரோடு கழகத் தோழர்கள் மீது காவல்துறை தொடர்ந்த வழக்கில் தோழர்கள் விடுதலையானார்கள். சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் மாநகராட்சிக்கு சொந்தமான 'சிவா' பூங்காவில் 'சிவராத்திரி' கொண்டாட்டத்தை மத வெறி சக்திகள் விடிய விடிய நடத்தத் திட்டமிட்டதை எதிர்த்து கழகத் தோழர்கள் களமிறங்கினர். சிவராத்திரி கொண்டாட்டம் நிறுத்தப்பட்டது. (பிப்.18) விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் தயாரித்துத் தந்ததாக தொடரப்பட்ட வழக்கில் கோவை ஆறுச்சாமி உள்ளிட்ட தோழர்கள் உயர்நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டனர். (பிப்.10) காஞ்சிபுரம் மக்கள் மன்ற அரங்கில் சென்னை மாவட்டக் கழகம் சிறப்புடன் பயிற்சி முகாம் நடத்தியது. (பிப்.27-28) காதலர் தினத்தை வரவேற்று துண்டறிக்கைகள் வழங்கியதற்காக திருச்சியில் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். கல்வியை மாநிலப் பட்டியலில் சேர்க்கக் கோரி, தூத்துக்குடியில் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. (பிப்.27)

## மார்ச்

கோபியில் சாமியார் படங்களுக்கு செருப்படி தரும் ஆர்ப்பாட்டம் நடந்தது. (மார்ச் 14) திருவண்ணாமலை மாவட்டத்தில் ரயில் விடக் கோரி கள்ளக்குறிச்சியிலிருந்து திருவண்ணாமலை வரை விழுப்புரம் மாவட்டக் கழகத் தோழர்கள் 3 நாள் பரப்புரை நடைப்பயணம் நடத்தினர். (மார்ச் 24-27)

## ஏப்ரல்

சாதி - தீண்டாமைக்கு எதிராக பரப்புரைப் பயணம் ஏப்.14 இல் போடியில் தொடங்கியது. மே 14 ஆம் தேதி வரை ஒரு மாதம் தொடர்ந்து பரப்புரைக் குழுவினர், 31 நாட்கள் 100-க்கும் அதிகமான ஊர்களில் பரப்புரை செய்தனர்.

அம்பேத்கர் பிறந்த நாளையொட்டி சென்னை மாவட்டக் கழகம் தொடர் கூட்டங்களை நடத்தியது. (ஏப் 9-11) சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் மேட்டுப்பாளையத்துக்கு இரயில்கள் எண்ணிக்கையை குறைத்த மத்திய அரசை எதிர்த்து கோவை மாவட்டக் கழகத் தோழர்கள் 50 பேர், இரயிலை நிறுத்தப் போராட்டம் நடத்தி கைதானார்கள். (ஏப்.9) சோதிடம் கூறும் 12 ராசிகளுக்கும் மத்திய அரசு தபால் தலை வெளியிடும் அறிவிப்பு வெளி வந்தவுடன், அறிவிப்பு வந்த அடுத்த நாளே கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்களை சென்னை, சேலம், கோவை, தூத்துக்குடி, கோபி, சங்கராபுரம் ஆகிய ஊர்களில் நடத்தியது. (ஏப்.15)

டெல்லியில் ஈழத் தமிழர்கள் மீதான இனப் படுகொலைகளைக் கண்டித்து, மனித உரிமை அமைப்புகள் நடத்திய கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டார். (ஏப்.15) சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் பில்லி சூன்யம் வைத்து விட்டதாகக் கூறி அதை அகற்றுவதற்கு 'கடா வெட்டி' பூசை நடத்தியதைக் கண்டித்து, சேலம் மாவட்டக் கழகத் தோழர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர் (ஏப்.23)

### குறிப்பிடத்தக்க நாட்கள்

***கடந்த ஆண்டு கழகப் பயணத்தில் கீழ்க்கண்ட நாட்கள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.***

***ஜூன் 9*** *– குடிஅரசு வழக்கில் பெரியார் தொகுப்புகளை வெளியிட பெரியார் திராவிடர் கழகத்துக்கு உரிமை உண்டு என்று, சென்னை உயர்நீதிமன்ற அமர்வு தீர்ப்பு வழங்கிய நாள்.*

***ஜூன் 11*** *– தீர்ப்பு வெளிவந்த ஒரு நாள் இடைவெளியில் சென்னையில் 'குடிஅரசு' தொகுப்பு வெளியிட்டு நிகழ்ச்சியை கழகம் நடத்தியது. கழகத்தின் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு வெளியிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லக்கண்ணு பெற்றுக் கொண்டார்.*

***அக். 2*** *– திருச்சியில் தீண்டாமை சுவர் இடிப்புப் போராட்டம். திருச்சி போர்க்களமானது . 2471 தோழர்கள் கைதானார்கள்.*

***நவம்பர் 27*** *– 'குடிஅரசு' வழக்கில் மேல் முறையீட்டுக்கு உச்சநீதிமன்றம் சென்ற கி.வீரமணியின் மனுவை விசாரணைக்கு ஏற்காமலே உச்சநீதிமன்ற நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.*

***டிசம்பர் 23*** *– சென்னை உயர்நீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக புதிய கோரிக்கைகளுடன் (Prayer) வழக்கை மீண்டும் தொடருவதாகக் கூறி கி.வீரமணி உயர்நீதி மன்றத்தில் தாக்கல்செய்த மனுவை மீண்டும் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.*

## மே

ஈழத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடந்த இனப் படுகொலையில் உயிர்ப்பலியான தமிழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் கூட்டம் சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நடந்தது. (மே 16) மேட்டுப்பாளையத்துக்கு ரயில்விடக் கோரி ஈரோட்டில் ஆர்ப்பாட்டம் (மே 24). முல்லைப் பெரியாறு நீர் உரிமையை வலியுறுத்தி, கேரளா செல்லும் பாதைகளை மறித்து, ம.தி.மு.க. நடத்திய போராட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் பங்கேற்றது. கோவை கேரள எல்லைப் பகுதியான அணைக்கட்டி அருகே மாங்கரையில் நடந்த மறியல் போராட்டத்தில் கழகத் தலைவர் பொதுச் செயலாளர்கள் கழகத் தோழர்களோடு பங்கேற்று கைதானார்கள். (மே 28) சேலம் மாவட்டம் இளம்பிள்ளையிலும் (மே 22, 23), மதுரையிலும் (29,30) கழகப் பயிற்சி முகாம்கள் சிறப்பாக நடந்தன.

அரசு சூழ்ச்சியால் படுகொலை செய்யப்பட்ட சந்தனக்காடு வீரப்பனுக்கு உதவியதாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது அடக்குமுறை சட்டங்களின் கீழ் கருநாடக அரசு தொடர்ந்த 5 பொய் வழக்குகளிலிருந்தும் தோழர் கொளத்தூர் மணி விடுதலையானார். (மே 27)

முல்லைப் பெரியாறு நதி நீர் உரிமையை வலியுறுத்தி கோவைப் பகுதியில் இரண்டு நாள் பரப்புரைப் பயணத்தை பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் கழகத் தோழர்களுடன் நடத்தினார். (மே 22, 23)

## ஜூன்

ஆதி திராவிடர் நல விடுதிகளை அவிநாசியில் ஏற்படுத்தக் கோரி கழகம் ஆர்ப்பாட்டம் (ஜூன் 6) சாதி தீண்டாமை ஒழிப்புக்காக சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் பங்கேற்ற இரண்டாம் கட்ட பரப்புரைப் பயணம் செங்கல்பட்டு அருகே கூடுவாஞ்சேரியில் தொடங்கி 10 நாட்கள் நடந்தன. (ஜூன் 12-22)

'குடிஅரசு' வழக்கில் தோல்வி அடைந்த விரக்தியில் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு அவர்களின் இல்லத்தில் புகுந்து, அவர் பயன்படுத்தும் காரை வன்முறைக் கும்பல் உடைத்து சேதப்படுத்தியது (ஜூன் 12), திருவாரூர் தங்கராசு கார் சேதப்படுத்தப்பட்ட சேதி அறிந்து அடுத்த நாளே கோவையில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. (ஜூன் 13) மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் இலங்கை அரசைக் கண்டித்து இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகம் சென்னையில் நடத்தியது. (ஜூன் 14) பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் கழகத்தோழர்கள் அதில் பங்கேற்று கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டு, 4 நாட்கள் கழித்து பிணையில் விடுதலையானார்கள். (ஜூன் 17)

## ஜூலை

திருவாரூர் தங்கராசு கார் உடைக்கப்பட்டதற்கு எதிர்வினையாக கி.வீரமணியின் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த அவரது காரின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. (ஜூலை 2) கழகத் தோழர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டு தமிழ்ச் செல்வன் உட்பட 4 தோழர்கள் கைதானார்கள். 13 நாட்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டு, பிணையில் விடுதலையானார்கள். (ஜூலை 14) வீரமணியின் காரின் விலை ரூ.27 லட்சம் என்று அவரது "மேனேஜர்" சீதாராமன் கூறியதாக 'தினத்தந்தி' செய்தி வெளியிட்டது. தமது கார் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து சாலை மறியல்களில் ஈடுபட வேண்டாம். நாட்டில் சட்டம் ஒழுங்குகளை சீர்குலைத்திட வேண்டாம். கழக ஆட்சியைக் காப்பதே தலையாய கடமை என்று "தமிழர் தலைவர்" கி.வீரமணி, "ரசனை" மிக்க ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதேபோல் நாட்டில் சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.( !)

*(4 ஆம் பக்கம்)*

# கி. வீரமணியின் '2010 ஆம் ஆண்டு' கொள்கை துரோகங்கள்

*ஆளும் கட்சிகளின் அரவணைப்புகளுக்காக பெரியார் கொள்கைகளை குழி தோண்டி புதைத்துவிட்டு, பெரியார் இயக்கத்தின் ஒரே 'அதிகாரபூர்வ வாரிசாக' தன்னை அறிவித்துக் கொள்ளும் 'தமிழர் தலைவர்' கி. வீரமணி, கடந்த ஆண்டில் மட்டும் இழைத்த துரோகங்களிலிருந்து சில :*

- ஓய்வு வயது உயர்த்தப்படுவதையே எதிர்ப்பதுதான், பெரியார் கொள்கை. புதிய நியமனங்களை தடைப்படுத்தும் இந்த சமூக அநீதிக்கு எதிராக கடந்த காலங்களில் பெரியார் இயக்கம் குரல் கொடுத்து வந்திருப்பது வரலாறு. ஆனால் கடந்த ஆண்டு, ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களை அரசின் அனைத்துத் துறைகளிலும், மீண்டும் பதவிக்கால நீட்டிப்பு தந்து, பணியமர்த்தும் அரசு ஆணையை கலைஞர் கருணாநிதி ஆட்சி, பிறப்பித்தபோது, வீரமணி, வாயை மூடிக் கொண்டு விட்டார் எதிர்க்கவில்லை.
- தஞ்சையில் வீரமணி அறக்கட்டளை பெயரால் நடத்தும் பெரியார் மணியம்மை அறிவியல் தொழில்நுட்பக் கழகம் என்ற நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் அங்கீகாரத்தை மத்திய மனிதவளத் துறை அமைச்சகம் ரத்து செய்தது. பல்கலைக்கழக நிர்வாகத்தில் கல்வியாளர்களை நியமிப் பதற்கு பதிலாக குடும்ப உறுப்பினர்களை நியமித்தது ஒரு காரணம். கி.வீரமணி பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவில் தனது மகள் அன்பு ராஜையும், தனக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கமானவர்களையும் நியமித்தார். கல்வித் துறையோடு தொடர்பில்லாத அவர், தன்னை பல்கலைக் கழக வேந்தராக்கிக் கொண்டார். எனவே மத்திய மனித வளத்துறை அமைச்சகம் அங்கீகாரத்தை ரத்து செய்தது.
- இது மட்டுமல்ல; தமிழ்நாட்டின் உயர்கல்வி அமைச்சரான பொன்முடி ஒரு அதிர்ச்சியான குற்றச்சாட்டை முன் வைத்தார். தமிழ்நாட்டிலுள்ள நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் ஒற்றைச் சாளர முறையில் 'கவுன்சிலிங்' வழியாக இடஒதுக்கீடு அடிப்படையில் மாணவர்களை சேர்த்திட **65** சதவீத இடங்களைக் கேட்டபோது ஒரு பல்கலைக்கழகம் கூட தனது இடங்களை அரசுக்கு ஒதுக்க முன்வரவில்லை என்பதே அமைச்சர் பொன்முடியின் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டுக்கு "வேந்தர்" வீரமணி தரப்பிலிருந்து பதில் ஏதும் வரவில்லை. வீரமணி நடத்தும் பல்கலைக் கழகம், இதுகாறும் வெளியிட்ட எந்த மாணவர் சேர்க்கை அறிவிப்பிலும், தமிழக அரசின் இடஒதுக்கீட்டின்படிதான் சேர்க்கை நடைபெறும் என்று எங்கேயும் அறிவித்ததில்லை. சமூகநீதிக் கொள்கையை காற்றில் பறக்கவிட்டு, லட்சம் லட்சமாக நன்கொடை வாங்கிக் கொண்டு, ஏ.சி. சண்முகம், ஜெகத்ரட்சகன், விநாயகா மிஷன் சண்முகசுந்தரம் சவீதா ஈவரியன் போலவே கல்வி வியாபாரம் நடத்தி, பெரியார் கொள்கைகளை குழி தோண்டி புதைக்கிறார்கள். பல்கலை அங்கீகாரம் ரத்து செய்ததை எதிர்த்து ஏனைய கல்வி வியாபாரிகளுடன் கைகோர்த்துக் கொண்டு நீதிமன்றம் போனார், கி.வீரமணி.
- கல்வி வர்த்தகத்துக்காக மட்டும், அவர் நீதிமன்றம் போகவில்லை. பெரியாரின் 'குடிஅரசு' பத்திரிகையில் புரட்சிகர சிந்தனைகள் மக்கள் மன்றத்தில் பரவிடக் கூடாது என்பதற்கும் நீதிமன்றம் போனார். பெரியார் திராவிடர் கழகம், 'குடிஅரசின்' **27** தொகுப்புகளை வெளியிட்டதை எதிர்த்து, பெரியார் தங்களுக்கு மட்டுமே பதிப்புரிமை தந்ததாக உயர்நீதிமன்றத்தின் படிக்கட்டுகளை ஏறிய வீரமணி தீர்ப்பில் மூக்குடை பட்டது அல்லாமல், மேல்முறை யீட்டிலும் மூக்குடை பட்டார். பெரியார் நூல்களை மக்கள் மன்றத்துக்குக் கொண்டு வந்ததோடு கழகம் வெளியிட்ட குடிஅரசு தொகுப்புகளை இணையதளத்தில் இலவச மாகவே வெளியிட்டது, பெரியார் திராவிடர் கழகம். உயர்நீதிமன்ற மேல்முறையீட்டில் அவமானப்பட்டதோடு நிற்காமல், பெரியார் சேர்த்து வைத்த பணத்தை எடுத்துக் கொண்டு உச்சநீதிமன்றம் போனார். வழக்கை விசாரணைக்கு ஏற்கவே, உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது. வீரமணியின் பிறந்த நாளில் உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு அவரது பிறந்த நாள் பரிசாக வந்தது. இதற்கிடையே சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு மன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு, மற்றொரு வழக்காக தமது முந்தைய வழக்கின் மனுவின் கோரிக்கையை (Prayer) மாற்றி வீரமணி தொடர்ந்தார். அதையும் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. இது வீரமணிக்கு கிடைத்த பெரியார் நினைவு நாள் பரிசு. இனி சர்வதேச நீதிமன்றத்துக்கோ, அய்.நா.வுக்கோ கூட, கி.வீரமணி போகலாம். "விடமாட்டேன்; கிணறு வெட்டியதற்கான ரசீது என்னிடம் இருக்கிறது" என்று நடிகர் வடிவேலுவின் திரைப்பட 'காமெடி' தான் நினைவுக்கு வருகிறது.
- தமிழர்கள் டெல்லி பார்ப்பன ஆட்சிக்கு அடிமையாக இருப்பதை எதிர்க்க இறுதி மூச்சு அடங்கும் வரை போர் முரசு கொட்டிய தலைவர் பெரியார். உரிமைகள் இல்லாத சட்டமன்றங்களுக்கு பதவிகளுக்காக ஓடுவது பெரியார் தொண்டர்களின் வேலை அல்ல. தேர்தலில் போட்டியிடு திலிருந்து பெரியார், தனது இயக்கத்தை விலக்கியே வைத்தார். ஆனால், கலைஞர் கருணாநிதி ஆட்சி பல கோடி செலவில் 'அலங்கார சட்டமன்றம்' ஒன்றை கட்டி எழுப்பி யதற்கு விடுதலை சிறப்பு மலர் வெளியிட்டு, கொள்கை துரோகத்தை வெளிச்சப் படுத்தியது. இதே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அனைத்து சாதியினர் அர்ச்சகர் சட்டம் உச்சநீதி மன்றத்தில் மீண்டும் முடக்கப்பட்டுக் கிடப்பதை அகற்ற, கலைஞர் கருணாநிதி ஆட்சி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியைக்கூட வீரமணி வாய் திறந்து கேட்கவே இல்லை. ஆனால், அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கி, மாபெரும் சமூகப் புரட்சியை கலைஞர் கருணாநிதி செய்து முடிந்து விட்டதாக பெரியார் நினைவிடத்திலேயே வீரமணி கல்வெட்டை நிறுவிவிட்டார்.
- அண்ணா முதல்வரானவுடன் வாஞ்சிநாதன் குடும்பத்துக்கு நிதி உதவி வழங்கப் போவதாக அறிவித்தார். வாஞ்சி நாதன், வர்ணாஸ்ரமத்தைக் காப்பாற்றவே, ஆஷ்துரையை சுட்டுக் கொன்றவன் என்பதால், அண்ணாவின் இந்த அறிவிப்பை அப்போதே, பெரியார் எதிர்த்தார். விடுதலை கண்டன தலையங்கம் தீட்டியது. அதே வாஞ்சிநாதனுக்கு மணிமண்டபம் கட்டுவதாக தி.மு.க. அறிவித்தபோது வீரமணி, வாயை மூடிக் கொண்டு விட்டார்.
- பெரியாரின் வாழ்க்கை வரலாறான தமிழர் தலைவர் நூலை ஆங்கிலத்தில் வெளியிட்ட ஒரு தனியார் நிறுவனம் பதிப்புரிமை அச்சிட்டோர் போன்ற தகவல்களை வெளியிடும் பக்கத்தில், நூலின் பெயரைக் குறிப்பிட்டபோது அடைப்புக் குறிக்குள் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் என்று அச்சிட்டிருந்தது. தங்களைத் தவிர, வேறு நிறுவனம் பெரியார் நூல்களை வெளியிட்டால், இப்படித் தான், பெரியாருக்கே சாதிப் பட்டம் போட்டு விடுவார்கள் என்று விடுதலை மீண்டும் மீண்டும் ஆவேசமாக எழுதியது. ஆனால், கி.வீரமணி நடத்தும் திரைப்பட நிறுவனம் தயாரித்த பெரியார் படம் தெலுங்கு மொழியில் வெளியிடும் உரிமையை விற்பனை செய்தபோது படத்தை வாங்கியவர் அதற்கு தந்த தலைப்பு 'ஈ.வெ.ராமசாமி நாய்க்கர்' என்பதாகும். இதை வீரமணி கண்டு கொள்ள வில்லை. பெரியார் திராவிடர் கழகம் அம்பலப்படுத்திய பிறகு, 'நாய்க்கர்' என்ற பெயரில் அடித்தல் குறி போடப் படும் என்றார். சாதிப் பட்டத்தை நீக்க முன் வரவில்லை.
- கொலைக்குற்றம் சாட்டப்பட்ட காஞ்சி ஜெயேந் திரனுக்கு எதிரான அரசு சாட்சிகளே - பிறழ் சாட்சிகளாகி விட்டன. தி.மு.க. ஆட்சியின் காவல்துறை வழக்கை நீர்த்துப் போகச் செய்துவிட்டது. கலைஞர் கருணாநிதி அவரது 'முரசொலி' நாளேட்டில் (**12.2.2010**) 'அவனும் சிரித்தான்; நானும் சிரித்தேன்' என்று ஒரு உருவகக் கதையை எழுதினார். சங்கர்ராமன் கொலை வழக்கை முன் வைத்து எழுதிய அந்த கதையில் "மடாலயத்தில் நடைபெற்ற ஒரு கொலையில், சாமியார் சிக்க வைக்கப்பட்டார்; அம்மையார் பழி தீர்த்துக் கொண்டார்" என்று எழுதி சங்கராச்சாரி மீது தொடரப்பட்ட கொலை வழக்கு, ஜெயலலிதா பழி வாங்க போட்ட பொய் வழக்கு என்று எழுதினார். இதற்குப் பிறகு காவல்துறை எப்படி நடந்து கொள்ளும்? கி.வீரமணி, இதை எல்லாம், எதிர்த்து எதுவும் பேசவில்லை; எழுதவும் இல்லை.
- அண்ணா முதலமைச்சரானவுடனேயே உலகத் தமிழ் மாநாடு நடத்தியபோது பெரியார், "உலகத் தமிழ் மாநாடாம்; வெங்காய மாநாடாம், இது எதற்கு? கும்பகோணம் மாமாங்கத்துக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் இருக்கப் போகிறது?" என்று எழுதினார். ('விடுதலை' **15.12.67**) தி.மு.க. ஆட்சி அதேபோன்ற ஆடம்பரத் திருவிழாவை உலகத் தமிழ் செம்மொழி மாநாடு என்ற பெயரில் கோவையில் நடத்தியபோது அது பற்றி எந்தக் கருத்தும் கூறாதது மட்டுமல்ல. மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசினார், வீரமணி.
- தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் பார்ப்பானுக்கு அடிமைகளாகவே இருந்தவர்கள் என்பதால், அவர்களின் பெருமை பேசுவதைக் கடுமையாக கண்டித்தவர் பெரியார். "நம் சேர, சோழ பாண்டியன் களைப் பற்றி கேட்க வேண்டியதே இல்லை. மோட்சத்திற்காக தம் மனைவியைப் பார்ப்பானுக்கு கூட்டிக் கொடுக்கும் அளவுக்கு முட்டாள்களாக, மடையர்களாக இருந்திருக் கிறார்கள்" என்று பெரியார் எழுதினார். ('விடுதலை' **30.3.1959**) ஆனால் தஞ்சை பெரிய கோயில் கட்டி, ஆயிரம் ஆண்டு முடிந்து விட்ட தற்காக, ராஜராஜசோழனுக்கு அரசு செலவில் தி.மு.க. ஆட்சி 'திருவிழா' எடுத்தபோது அதை சுட்டிக்காட்டி கண்டிக்காமல், வாயை மூடிக் கொண்டார், கி.வீரமணி.
- தமிழ்நாட்டின் அரசு வழக்கறிஞராக இருந்த விடுதலை என்ற திராவிடர் இயக்கக் குடும்பத்தைச் சார்ந்த வழக்கறிஞரை நீக்கிவிட்டு, வி.பி.ராமன் பரம் பரையில் வந்த ஒரு பார்ப்பனரை அரசு வழக்கறிஞராக நியமித்தபோதும் சரி, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் பதவிக்கு மூப்பு வரிசையில் இருந்த பல அதிகாரிகளை புறக்கணித்து விட்டு, மாலதி என்ற பார்ப்பனரையே தேடிப் பிடித்து கலைஞர் கருணாநிதி நியமித்தபோதும் சரி, வீரமணி கண்டித்து எழுதவோ, பேசவோ இல்லை. பார்ப்பனரைத் தேடிப் பிடித்து, அன்றைய முதல்வராக இருந்த ஜெயலலிதா தலைமைச் செயலாளர்களை நியமித்ததைக் கண்டித்த தி.மு.க. கலைஞர் கருணாநிதி ஆட்சிக்கு வந்த பிறகு எல்.கே. திரிபாதி, கே.எஸ். சிறீபதி, மாலதி என்ற பார்ப்பனர் களையே தேடிப் பிடித்து நியமிப்பது ஏன் என்று கி.வீரமணி கேள்வி எழுப்பவும் இல்லை, நேர்மையான தலித் அதிகாரி உமாசங்கரைத் தண்டித்த கலைஞர் கருணாநிதி ஆட்சி, ஓய்வு பெற்ற தலைமைச் செயலாளர் பார்ப்பனர் கே.எஸ். சிறீபதிக்கு உடனடி 'பரிசாக' மாநிலத்தின் தலைமைத் தகவல் உரிமைக்கான அதிகாரி பதவி வழங்கினாரே; இதை எல்லாம் தட்டிக் கேட்க 'தமிழர் தலைவர்' வீரமணி தயாராக இல்லை.
- பரதநாட்டியக் கலை தமிழர் கலை அல்ல. அது காஷ்மீரத்துப் பார்ப்பனர் பரத முனிவரிடமிருந்து வந்த கலை என்று 'ஆராய்ச்சி' செய்து நூல் எழுதிய பார்ப்பனர் பத்மா சுப்ரமணியனுக்கு, ஜெயலலிதா ஆட்சி நிலம் ஒதுக்கியது. ஆட்சிக்கு வந்த தி.மு.க. அந்த ஒதுக்கீட்டை ரத்து செய்தது. உடனே கி.வீரமணி, கலைஞர் ஆட்சியை அதற்காகப் புகழ்ந்து எழுதினார். அதே கலைஞர் கருணாநிதி மீண்டும் அதே பார்ப்பனப் பெண்மணிக்கு மாமல்லபுரம் அருகே **5** ஏக்கர் நிலம் ஒதுக்கி, அதற்கான விழாவிலும் கலந்து கொண்டு மகிழ்ந்த போது, வீரமணி அதைக் கண்டித்தாரா? வாயை மூடிக்கொண்டார். அழைப்புக் கிடைத்திருந்தால் நிகழ்ச்சியிலும் போய் கலந்திருப்பார். இப்படி அடுக்கிக் கொண்டே போக முடியும்.

*2010 ஆண்டில் மட்டும் "தமிழர் தலைவர்" வீரமணி, பெரியார் கொள்கைக்கு இழைத்த துரோகங்கள் இவை; இதுவும் கூட ஒரு சிறு துளி தான் !*

## மணமகள் தேவை

*தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.10,000 ஊதியம் பெறும் 30 வயதுள்ள பெரியாரிய கொள்கையில் ஈடுபாடு உள்ள சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட பெற்றோருக்குப் பிறந்த மகனுக்கு மணமகள் தேவை. சாதி தடையில்லை. தொடர்புக்கு: 9787626035*

## சிற்பி ராசன் பங்கேற்ற 151 கூட்டங்கள்

கழக பரப்புரையாளர் சிற்பி ராசன் 2010 ஆம் ஆண்டு முழுதும் பம்பரமாக சுழன்று 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை தமிழகம் முழுதும் நடத்தினார். அவர் பங்கேற்ற கழகக் கூட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 151.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 30.12.2010

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம்

# பெரியார் பேசிய நாத்திகம் இழிவு-சாதி ஒழிப்புக்கானது!

*பல்லடத்தில் நடந்த நாத்திகர் விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை தொடர்ச்சி:*

இப்போ திருமணம் பன்றப்ப பையன் எனக்கு பி.இ. படித்த பெண் வேணும்; எம்.பி.பி.எஸ். படித்த பெண் வேணும்; எல்லாம் கேட்பான். அதற்கு மேல் இவனும் படித்திருப்பான். போய் வரதட்சணை கேட்பான். என்னப்பா நீ இவ்வளவு படிச்சுட்டு போய் வரதட்சணை கேட்கிறாயே ? என்றால் எங்கம்மா ஒத்துக்கவே மாட்டேங்கிறாங்க. எங்கப்பா ஒத்துக்கவே மாட்டேங்கிறாங்க என்பான். அப்பா சொன்ன பல விசயத்தை கேட்க மாட்டான். தண்ணி போடாதே என்று சொன்னால் கேட்க மாட்டான். அவன்கூட சேர்ந்து சுத்தாதே என்று சொன்னால் கேட்க மாட்டான். அப்பா வரதட்சணை கேட்க சொன்னா மட்டும் ஒத்துக்குவான். எங்கப்பா சொல்றாருங்க எப்படி மீறுவது எங்கம்மா ஆசைப்படுதுங்க என்பான்.

இப்படி பக்தன் பலவற்றில் கடவுளுக்கு மாறாக நடப்பான். ஆனால் இந்த மாதிரி வரும்போது இல்லை. அது கடவுளுக்கு எதிரானது அதை செய்யக் கூடாது என்பான். எதை என்றால் கடவுள் எதையெல்லாம் சொல்லி வைத்திருக்கிறாரோ அதை மீறுவது தப்பு என்பான். அவங்கவுங்க எப்படீனு பிரித்து வைத்திருக்கிறாரோ அப்படி அப்படி இருக்கனும் என்பான். உலகத்தில் எல்லா மதமும் எல்லா கடவுள்களும் மனிதனை சமம் என்று சொன்னது. ஆண்டவன் முன்னால் அனைவரும சமம் என்று எல்லா மதத் தத்துவங்களும் சொன்னது. நம்ம இந்து மதம் மட்டும் வித்தியாசமாக சொல்லியது. ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் இல்லை என்று; இதுதான் இந்துமதத் தத்துவம்.

இப்ப மத்த கடவுளுக்கும் நம்ம கடவுளுக்கும் ஒரு வேறுபாடு எல்லா மத வேதங்களையும் மதத் தலைவர்கள் படியுங்கள் என்று சொன்னார்கள். பைபிளை படி என கிருத்துவ மதக் குருவும் சொன்னார். பெற்றோர்களும் சொன்னார்கள். குரானை படி என்று இஸ்லாமிய மதக் குருவும் சொன்னார், பெற்றோர்களும் சொன்னார்கள். ஆனால் இந்து மதத் தலைவர்கள் சொன்னார்கள் வேதத்தைப் படிக்காதே. ஆனால் ஏற்றுக் கொள் என்று. பெரியார் கேட்டார், ‘ஏண்டா பத்திரத்த படிக்காம கையெழுத்து போடச் சொல்லுகிற மாதிரி வேதத்தை படிக்காம ஏற்றுக் கொள் என்றால் எப்படி ஏற்றுக் கொள்வது ? அதுல என்ன இருக்குதுனு சொல்லு. அப்புறம் ஒத்துக் கொள்வதா இல்லையானு நான் சொல்றேன். நீ பத்திரத்தை கொண்டு வந்து கையெழுத்து போடுனா நான் படிச்சு பார்த்துதான் போடுவேன். படிச்சு பார்க்காம நாம கையெழுத்து போட்டதா கருதிக் கொண்டு நம் மேல் இந்த மத தத்துவத்தை திணிக்கிறார்கள்.

ஆனால், அவன் (பார்ப்பான்) வசதிக்கு அதை பின்பற்றிக் கொள்கிறான். கொலை செய்யப்பட்ட சங்கரராமனை சங்கராச்சாரி ஏன் கொலை பண்ணினான் என்றால், அவர் வெளிநாட்டுக்கு போக விரும்பினார். உள்நாடு அலுத்துப் போய் வெளிநாட்டில் போய் வித்தியாசமாய் பார்க்கலாம்னு விரும்பினார். இவன் சொன்னான் இல்லை, இந்து மதத் தத்துவம் அதை அனுமதிக்காது. கடலைத் தாண்டக் கூடாது என்றான். உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டான். இந்து மதத் தத்துவம் கடலைத் தாண்டக் கூடாது என்கிறது, சங்கராச்சாரி தாண்டுவது தப்பு என்றான்.

நம் தமிழன் தத்துவம் அப்படிச் சொல்லவில்லை. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்றது. கடல் பயணத்திற்காக நெய்தல், திணை என்று தனியாக வைத்தான். போருக்கு, கல்விக்கு, தூதுக்கு கடல் தாண்டி பயணம் போகலாம். கடல் தாண்டி போவது இயல்பு நமக்கு. அவன் போகக் கூடாதுனு சொன்னான். இவன் மீறி போகலாம்னான். சங்கர் ராமன் எதிர்த்தார். ஆளை முடிச்சிட்டான். ஆனால், அந்த சிறிய செய்தியில் சாஸ்திரத்தை மீறக் கூடாது என்று கருதிய சங்கரராமன் மனைவி, முதலமைச்சர் கிட்ட பணம் வாங்க போனாங்க. பார்ப்பன பெண் மொட்டை பாப்பாத்தி காவி கட்டீட்டு அல்லவா போக வேண்டும். இந்தம்மா முழு சடையோடு பழைய உடையோடு போய் பணத்தை வாங்குவதை பத்திரிகையில் பார்த்தோம். அவன் சாஸ்திரத்தை மீறாதே என்று நம்மைப் பார்த்து சொல்வான். சங்கரராமன் மனைவி சாஸ்த்திரப்படி மொட்டை அடித்துக் கொண்டு காவி கட்டிக் கொண்டு முக்காடு போட்டு போய்தான் காசு வாங்கியிருக்கனும்.

அவங்களுக்கு வசதின்னா மீறுவார்கள். கடல் தாண்டி போகக் கூடாதுனு சாஸ்திரம் வெச்சிருக்கிற அவன், அமெரிக்காவில போய் அர்ச்சனை பண்ணினா போச்சுல. அவன் அய்யரே இல்லையே மதத்தை விட்டு போயிட்டானுல. ஆனாலும் இங்கிருந்து அங்க போயி பூஜை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவன் வேதம் பாலை விற்கக் கூடாது, உணவை விற்கக் கூடாது. விற்றால் அடுத்த ஜென்மத்தில் விற்றவன் பன்றியாக பிறப்பான் என சொல்கிறது. ஆனால் பிராமணாள் ஹோட்டல் நடந்து கொண்டிருக்கிறது. அப்ப ஒன்று அவன் அடுத்த பிறவியில் பன்றியாப் பிறக்கனும். இல்ல இப்ப திரிகிற பன்றிகள் போன பிறவியில் ஹோட்டல் நடத்தின அய்யராய் இருக்கனும். அவன் வசதிக்கு அவன் மீறிக் கொள்வான். கலப்புத் திருமணத்தை மறுப்பான். ஆனால், காந்தி வீட்டில் ராஜாஜி பெண் கொடுப்பார். அது காந்தி என்றால் கொடுக்கலாம். நம்மூரில் கொடுக்கக் கூடாது. அய்யர் போய் சுப்புலட்சுமியை கல்யாணம் பண்ணிக்கலாம். இசை வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணாக இருந்தாலும் சதாசிவ அய்யர் கல்யாணம் பண்ணிக்குவார். இவள் பாப்பாத்தி ஆகிவிடுவாள். அல்லது சௌந்தத்தரம்மாள் ராமச்சந்திரனை கல்யாணம் பண்ணினாலும் பாப்பாத்தியா இருப்பா. ருக்மணி, அருண்டேல் என்ற ஆங்கிலேயனை திருமணம் செய்தாலும் பாப்பாத்தியா இருப்பா. அப்பெல்லாம் பார்ப்பன தன்மை போகாது.

இப்ப இன்போசிஸ் நாராயணமூர்த்தி குடியரசு தலைவராக வரலாம்னு சொன்ன மாதிரி, அன்னைக்கு ருக்மணி அருண்டேல் குடியரசு தலைவராக வருவாங்கன்னு சொன்னாங்க. அந்த அம்மாவுக்கு ‘டான்ஸ்’ ஆடுவது மட்டும்தான் தெரியும்; வேறென்ன தெரியும் அந்தம்மாவிற்கு.

அவன் வெள்ளையன், அவன் ஆரியன். நிறத்தால் பிரித்தான் வர்ணபேதம் என்று சொன்னான். வெள்ளையாக இருப்பவன் பிராமணன். மஞ்சளாக இருப்பவன் சத்திரியன். பழுப்பாக இருப்பவன் வைசியன். கருப்பாய் இருப்பவன் நம்மாள் சூத்திரன். நிறத்தால் பிரித்தான். அப்புறம் எப்படீடா உன் கடவுள் ராமனும் கிருஷ்ணனும் கருப்பாய் இருக்காங்க. இட ஒதுக்கீட்டில் வந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியை பாப்பாத்தி கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி வெல்ல முடியாத நம் தலைவர்களை அவன் கடவுள் ஆக்கி விட்டான். எதிர்ப்பான்; இல்லையென்றால் நம்மாளா மாறிவிடு என்பான். அவன் வசதிக்கு பலவற்றை செய்து கொண்டிருக்கிறான். நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அத்தனையையும் கடவுள் பெயரால் நம்மை நம்ப வைத்தான் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

பெரியார் கடவுள் இல்லையென்று சாதாரணமாக சொல்லவில்லை. இப்படி சொல்கிறார்:

“மனிதனுக்கு மனிதன் தொடக் கூடாது. கண்ணில் படக் கூடாது. தெருவில் நடக்கக் கூடாது. கோவிலுக்குப் போகக் கூடாது. குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்கிறதுபோல கொள்கை தாண்டவம் ஆடும் ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ, சமுத்திரம் பொங்கி மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ, சண்டமாருதத்தால் துகள் ஆக்காமலோ விட்டிருப்பதை பார்த்த பிறகும் கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் நீதிமான் என்றும், அவர் சர்வதயாபதர் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவுசெய்து கொள்ளுங்கள்.”

இதெல்லாம் பார்ப்பதற்கு அப்புறமும் கடவுள் இருக்கிறார் என்பதை நீ ஒத்துக் கொள்கிறாயா ? ஆக பெரியாரின் கடவுள் மறுப்பு சாவர்க்கரின் கடவுள் மறுப்பு அல்ல. கமலகாசனின் கடவுள் மறுப்பு அல்ல. இவர் கடவுள் மறுப்பு மக்களை ஒன்றாக்க வேண்டும் என்ற சிந்தனையோடு உழைப்பை மதிக்க வேண்டுமென்ற சிந்தனையோடு உழைப்பவனை அவமானப்படுத்துபவனை எதிர்க்க வேண்டுமென்ற சிந்தனையோடு முன் வைக்கப்பட்ட கடவுள் மறுப்பு அதுதான், பெரியாரின் கடவுள் மறுப்பு. அவர் கடவுளை மறுப்பதற்குக்கூட பல காரணங்களை சொல்கிறார். இன்னொரு இடத்தில் சொல்கிறார். ஏனென்றால் பெரியார் திராவிடர் கழகம் ஏன் நாத்திகர் விழா எடுக்கிறது வெறும் கடவுள் இல்லையென்று சொல்லி விட்டால் எங்களுக்கு ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. என்ன நமக்கு கொஞ்சம் செலவு மிச்சமாகும். அதற்கு மேல் ஒன்றும் ஆகிவிடாது. சாதி வேறுபாடுகளைப் பார்த்து பெரியாருக்கு கோபம் வந்தது. பொதுவாக நாம் சிந்திப்பதற்கு மாறுபட்டு சிந்தித்தவர் பெரியார்.

நாத்திகம் என்பது நம் காலத்தில் தான் கடவுள் மறுப்பாக பொருள் கொள்கிறோம். புராண காலத்தில் வேத மறுப்பை தான் நாஸ்திகம் என்றார்கள். நாஸ்திகோ வேத நிந்தக என்பது வேத சுலோகம். கடவுளைமறுத்தாலும் கவலை இல்லை. பார்ப்பானுக்கு உயர்வும், உழைக்கும் நமக்கெல்லாம் இழிவும் கற்பித்து, நியாயப்படுத்தும் வேதத்தை மட்டும் மறுத்துக்கொள்ள மாட்டோம் என்று கூறும் சுயநல பார்ப்பன மனோநிலைதான் அது. அந்த பார்ப்பன சிந்தனைக்கு எதிர்நிலை தான் பெரியாரின் நிலை. நாத்திகம் என்பது சாதி ஒழிப்புக்கு, இழிவு ஒழிப்புக்காக என்பதே பெரியாரின் நிலைப்பாடு.

சைமன் கமிஷனை எல்லோரும் எதிர்த்தார்கள். நேற்று பிறந்த நாள் வந்தது புரட்சியாளர் அம்பேத்கருக்கு. இரண்டே பேர் தான் இந்தியாவில் சைமன் கமிஷனை வரவேற்றார்கள், பெரியாரும் அம்பேத்கரும். எதிர்த்தவர்கள் சொன்ன காரணம் அந்த குழுவில் இந்தியர்கள் யாரும் இல்லை என்று எதிர்த்தார்கள். பெரியாரும் அம்பேத்கரும் சொன்னார்கள், இந்தியர்கள் இல்லையென்பதால் தான் நாங்கள் வரவேற்கிறாம். ஒருவேளை இந்தியன் இருந்தால் பார்ப்பானாக இருப்பான். அவன் எனக்கு தொல்லைதான் கொடுப்பான். எங்களுக்கு எதிராக செயல்படுவான். ஆக, இந்தியன் இல்லை என்பதால் வரவேற்கிறோம். ஏன்னா ஆங்கிலேயன் நடுநிலையாக இருப்பான் என்ற எதிர்பார்ப்போடு.

இவர்களெல்லாம் பெரியாரைப் பார்த்து கேட்டார்கள், அந்நிய ஆட்சிக்கு எதிராக இருக்கிறீர்களா ? அம்பேத்கரை கேட்டார்கள், விடுதலை பற்றி உங்கள் கருத்து என்ன ? அம்பேத்கர் சொன்னார் விடுதலை பற்றி அப்புறம் சொல்கிறேன். விடுதலை பெற்ற இந்தியா யார் கைக்குப் போகும் என்று முதலில் சொல். அப்புறம் விடுதலை வேண்டுமா ? வேண்டாமா ? என்று நான் சொல்கிறேன். விடுதலைபெற்ற இந்தியா மீண்டும் ஓர் அந்நியன் கைக்கு நமக்கு தொடர்பில்லாதவன் கைக்கு போய் நமக்கு தொடர்ந்து தாழ்ந்த நிலையே இருக்குமானால் எனக்கு எதற்கு விடுதலை அவனே இருந்துட்டுப் போறான். அதைத்தான் பெரியாரும் சொன்னார். யார் அந்நியர் ? என்னைத் தொடாதே, கிட்ட வராதே, பார்த்தால் தீட்டு என்று சொல்கிற நீ எனக்கு அந்நியனா ? ஹலோ பிரதர் என்கிறான். கை குலுக்குகிறான். நான் சமைத்ததை சாப்பிடுகிறான். அவன் எனக்கு அந்நியனா ?

இங்குதான் மற்றவர்கள் பார்த்த பார்வைக்கும் புரட்சியாளர் அம்பேத்கரும்,பெரியாரும் பார்த்த பார்வைக்குமான வேறுபாடுதெரிகிறது. அம்பேத்கர் ஒரு முறை சொன்னார் உன்னுடைய நலம் பெரிதா ? நாட்டின் நலம் பெரிதா ? என்று கேட்டால் நான் நாட்டின் நலம்தான் பெரிது என்று சொல்வேன். நாட்டின் நலம் பெரிதா ? ஒடுக்கப்பட்ட மக்களின் நலம் பெரிதா ? எனக் கேட்டால் எனக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் நலம்தான்பெரிது. நாட்டின் நலம் பற்றி எனக்கு அக்கறை இல்லை என்று சொன்னார். எதற்கு நாடு, எதற்கு ஆட்சி, எதற்கு விடுதலை எல்லாம் கேட்கிறோம். இந்த நாட்டு மக்கள் எப்போதும் போல இருப்பார்கள் என்றால் அப்புறம் எதற்கு மாற்று அரசு, அது தமிழ்நாடாக வருவதாக இருந்தாலும் சரி, விடுதலை பெற்ற தமிழ்நாடு யார் கைக்கு வர வேண்டும் என்ற கேள்வியோடு தான் தமிழ்நாடு விடுதலையும் பேசப்பட வேண்டும். இல்லையென்றால் அதற்கு பொருள் இல்லை. யாரோ எழுதி வைத்த தத்துவம் என்பதற்காக நாடு பிரிய வேண்டும் என்று கருதினால் அது பொருளில்லாத பிரிவினை, பொருளில்லா நாட்டுக் கொள்கை, அது பொருளோடு இருக்க வேண்டுமென்றவர்கள் பெரியாரும் அம்பேத்கரும் அதை நினைவு கூர்ந்துதான் இந்த நாத்திகத்தை பேசிக்கொண்டிருக்கிறோம்.

பெரியார் சொன்னார், “முதலில் சாதி வித்தியாசம் என்கிற கொடுமைத் தன்மை என்பது இந்த நாட்டை விட்டு ஒழிய வேண்டும். ஒழிய வேண்டுமா வேண்டாமா என முடிவு தெரிந்துவிட வேண்டும். இரண்டாவதாக ஒரு மனிதனுக்கு கீழாக மேலாக சாதி என்று ஒன்றும் இல்லை என்ற முடிவுக்கு வந்தாக வேண்டும். அதற்கு மேல் சாதி வித்தியாசத்திற்கு ஆதரவாய் இருப்பவைகளை அடியோடு ஒழிக்க முயல வேண்டும். அப்படி செய்யாமல் உயர்வு தாழ்வை போக்கி விடலாம் என்று கருதினால் அது நுனிமரத்தில் உட்கார்ந்துகொண்டு அடிமரத்தை வெட்டுகிற மனிதனின் முட்டாள்தனமான செய்கைக்கு ஒப்பாகும்.”

**(தொடரும்)**

**கழக நாட்காட்டி வேண்டுவோர்**
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
கா.சு. நாகராசன், 107/1, ஆரோக்கியநாதர் வீதி, பொள்ளாச்சி-1. பேசி: 9443933669

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# காவல் நிலைய ஆயுத பூசைகளுக்கு எதிராக போர்க்கொடி

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் பகுதியில் தீண்டாமையை செயல்படுத்தும் தேனீர்க் கடைகள், முடித்திருத்தகங்கள், சுடுகாடுகள் பட்டியலை கழகம் வெளியிட்டது. (ஜூலை 15)

கோவையில் தனியார் நடத்தும் மோட்டார் சைக்கிள் போட்டியில் சிங்களர்கள் பங்கேற்க விருந்ததை அறிந்த கழகம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கோவை இராமகிருட்டிணன் தலைமையில் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தது. அதன் காரணமாக சிங்களர்கள் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். (ஜூலை 10) கழகம் வெளியிட்ட "தீண்டாமை"ப் பட்டியல்களைத் தொடர்ந்து ஒட்டன்சத்திரம் வெரியப்பூர் கிளை அஞ்சலகத்தில் பணிபுரிந்த தாழ்த்தப்பட்ட ஊழியரை தரையில் அமரவைத்த கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அவருக்கு மேசை நாற்காலியைப் பயன்படுத்தும் உரிமை கிடைத்தது.

**ஆகஸ்டு:** திருச்சியில் கழகத்தின் மாநில செயற்குழு கூடியது (ஆக.1). அக். 2 ஆம் தேதி திருச்சியில் காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவை இழுத்துப் பூட்டும் போராட்டத்தை அறிவித்தது. ஈரோட்டில் மக்கள் வசதிக்காக கட்டப்படும் மேம்பாலத்தை எதிர்த்து, இந்து முன்னணி உண்ணா விரதம் நடத்தியது. இதை எதிர்த்து 'உண்ணும்விரதம்' போராட்டம் நடத்தச் சென்ற மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் உள்ளிட்ட 23 தோழர்கள் கைது செய்யப் பட்டு, கோவை சிறையில் அடைக்கப்பட்டனர். 7 நாட்கள் சிறைவாசத்துக்குப் பின் பிணையில் விடுதலையானார்கள்.

## தமிழகம் முழுதும் 'குடிஅரசு' அறிமுக பொதுக் கூட்டங்கள்

*'குடிஅரசு' தொகுப்புகளை அறிமுகப்படுத்தும் பொதுக் கூட்ட நிகழ்ச்சிகள் தமிழகம் முழுதும் சிறப்புடன் நடந்தன. கோவை (ஆக.8), திண்டுக்கல் (ஆக.15), பொள்ளாச்சி (ஜூலை 14), சென்னை (ஜூலை 28), ஈரோடு (ஆக.9) மற்றும் திருச்சியில் 'குடிஅரசு' அறிமுக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சென்னையில் நடந்த அறிமுக விழா கூட்டத்தில் எஸ். துரைசாமி, இளங்கோ, குமாரதேவன் உள்ளிட்ட வழக்கறிஞர்களுக்கு கழக சார்பில் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.*

கேரள மருத்துவமனை கழிவுகளை பொள்ளாச்சி பகுதியில் கொண்டு வந்து கொட்டுவதை எதிர்த்து, பொள்ளாச்சியில் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. (ஆக.13) காஷ்மீர் மாநில மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் ராணுவ தாக்குதல்களைக் கண்டித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சென்னையில் நடக்கவிருந்த கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு காவல்துறை தடை விதித்தது. உள்நாட்டு அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு தோழர்களும், கழகத்தினரும் 55 பேர் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். 18 ஆம் தேதி பிணையில் விடுதலையானார்கள்.

அக். 2 ஆம் தேதி போராட்டத்துக்கு தோழர்களை தயார்படுத்த மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்களில் கழகத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர்கள் பங்கேற்றனர். சென்னை (ஆக.5), கரூர் (ஆக.14), திண்டுக்கல், மதுரை (ஆக.15), திருச்சி (ஆக14), மயிலாடுதுறை (ஆக.22), புதுவை (ஆக.23), கிருட்டிணகிரி (ஆக.27) ஆகிய ஊர்களில் கலந்துரையாடல் கூட்டங்கள் நடந்தன. புதுவைக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் பிராந்திய ஒதுக்கீட்டை பறிக்கக் கூடாது என்று வலியுறுத்தி, புதுவையில் அனைத்துக் கட்சியினர் பங்கேற்ற மாபெரும் ஆர்ப்பாட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. (ஆக.23) கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் விநாயகர் சிலை அமைக்கப்பட்டதை நீக்கக் கோரி, கோவை மாவட்டக் கழகம் முற்றுகைப் போராட்டத்தை அறிவித்தது. உடனே சிலையை அகற்றிவிட்டனர்.

## கழக வழக்கறிஞர்களின் மதிப்பு மிக்க சேவை

*குடிஅரசு வழக்கு; உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு; மீண்டும் உயர்நீதிமன்றத்தில் மறு முறையீடு; கழக கூட்டங்களுக்கு அனுமதி மறுப்பு; பிரபாகரன் படம் போட்ட காலண்டர் விற்பனையில் கழகத் தோழர் மீது வழக்கு; மேட்டூர் காவல்நிலைய ஆயுத பூசையை நிறுத்த முயன்ற கழகத் தோழர்கள் மீதான வழக்கு; விடுதலை புலிகளுக்கு ஆயுதம் தயாரித்து தந்ததாக கோவை தோழர்கள் மீதான வழக்கு; கி.வீரமணியின் கார் கண்ணாடி உடைத்ததாக தொடரப்பட்ட வழக்கு; புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் மீது தொடரப்பட்ட தேசிய பாது காப்பு சட்ட வழக்கு என்று கடந்த ஆண்டு கழகம் சந்தித்த அடுக்கடுக் கான வழக்குகளில் கழகத் தோழர்கள் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வாதாடிய பெருமை மூத்த வழக்கறிஞர் எஸ்.துரை சாமி, வழக்கறிஞர் வி. இளங்கோவன் மற்றும் குமார தேவன் ஆகியோரையே சேரும்.*

**செப்டம்பர் :** திருச்சி கத்தோலிக்க கல்லறையில் உள்ள தீண்டாமை சுவரை நீக்கக் கோரி கத்தோலிக்க பாதிரியார்களுக்கு கழக சார்பில் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அக்டோபர் 2 ஆம் தேதி போராட்டத்துக்கு தோழர்கள் தீவிரமான களப்பணியில் இறங்கினார்கள். சென்னை, மேட்டூர், கோபி, சேலம், மயிலாடுதுறை, சீர்காழி, நாகை உள்ளிட்ட ஊர்களில் போராட்டத்தை விளக்கும் சுவரெழுத்துகள் எழுதப்பட்டன. செப்டம்பர் 6 ஆம் தேதி தொடங்கி 19 ஆம் தேதி வரை சென்னை மாவட்டம் முழுதும் நாள்தோறும் தோழர்கள் மக்களை சந்தித்து, போராட்ட துண்டறிக்கைகளை வழங்கி நன்கொடை திரட்டினர். திருச்சி நகரிலும் தோழர்கள் இதேபோல் மக்கள் சந்திப்பு இயக்கத்தை நடத்தினர். கீற்று இணையதளம் சார்பில் குடிஅரசு 1925-1938 வரையிலான தொகுதிகளை ஆய்வுசெய்யும் கருத்தரங்கை சென்னையில் நடத்தியது. (செப்.18)

**அக்டோபர்:** ஆயுதபூசை போடும் காவல்நிலையங்களில் நேரடி தடுப்பு நடவடிக்கைகளில் இறங்குவதென திருச்சியில் நடந்த மாநில செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு செயல் வடிவம் தர தோழர்கள் தயாரானார்கள். சென்னை மாவட்ட காவல் நிலையங்களுக்கு மாவட்ட கழகம் வேண்டுகோள் கடிதங்களை அனுப்பியது. பல காவல் நிலையங்களில் பூசைகள் நிறுத்தப்பட்டன. பேசின்பிரிட்ஜ் காவல் நிலையத்தில் பூசை நடக்கவிருப்பதை அறிந்து தோழர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தி நிறுத்தினர். சில நாட்கள் கழித்து வடசென்னை மாவட்டக் கழகத் தலைவர் கேசவன்மீது காவல்துறை வழக்கு தொடர்ந்து கைது செய்தது. மேட்டூர் காவல் நிலையத்தில் ஆயுத பூசையன்று அரசு ஆணைக்கு எதிராக பூசை போட முயன்ற காவல் நிலையத்துக்குள் கழகத்தினர் நுழைந்து பூசைப் பொருட்களை பறிமுதல் செய்தனர். கழகத் தோழர்கள் சேலம் சிறையில் அடைக்கப்பட்டு 15 நாள் காவலுக்குப் பிறகு பிணையில் விடுதலையானார்கள். மாவட்டத் தலைவர் மார்ட்டின் ஒரு மாத சிறைவாசத்துக்குப் பிறகு, பிணையில் விடுதலையானார். கோவையில் காவல் நிலையங்களில் ஆயுத பூசை போடுவதை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. (அக்.13)

புதுடில்லியில் நடந்த காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் விருந்தினராகப் பங்கேற்க ராஜபக்சே அழைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோவையில் ராசபக்சே உருவ பொம்மையை எரித்து தோழர்கள் கைதானார்கள். (அக்.14) கழகம் வெளியிட்ட பெரியார் பிரபாகரன் படம் போட்ட நாட்காட்டியை விற்றதற்காக பல்லடம் தோழர் பாளையம் சுப்ரமணியம் மீது காவல்துறை வழக்கு தொடர்ந்தது. கழக மூத்த வழக்கறிஞர் துரைசாமி, வழக்கறிஞர் இளங்கோ இதை எதிர்த்து கழகத் தோழர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வாதாடி, வெற்றி பெற்றனர்.

சேலத்தில் நடந்த 'செஸ்' விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க சிங்களர்கள் வந்தனர். இதையறிந்த சேலம் கழகத் தோழர்கள் சிங்களர்களை வெளியேற்றக் கோரி விளையாட்டுப் போட்டி நடந்த மண்டபத்தின் முன் முற்றுகைப் போராட்டம் நடத்தி டேவிட், கோகுல கண்ணன் உள்ளிட்ட 25 தோழர்கள் கைதானார்கள்.

தமிழ் ஈழ அகதிகள் வெளிநாடு செல்ல உதவியதாக புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் கைது செய்யப்பட்டார். (அக்.11) இரண்டு வார சிறைவாசத்துக்குப் பிறகு பிணையில் விடுதலையானார். 25 நாட்கள் இடைவெளியில் மீண்டும் நவம்பர் 17 இல் இதே வழக்கில் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் லோகு அய்யப்பன் கைது செய்யப்பட்டார். சக்திவேல் (தி.மு.க.), தேவமணி (பா.ம.க.) ஆகியோரும் கைதானார்கள். கைது நடவடிக்கையை எதிர்த்து கழக மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி, மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு லோகு. அய்யப்பன் தந்தையின் பெயரில் கடிதம் எழுதினார். உள்துறை அமைச்சகம் தேசியப் பாதுகாப்பு சட்டத்தைப் பயன்படுத்தியது தவறு என்று, ஆணையை ரத்து செய்தது (டிசம்பர் 13). லோகு அய்யப்பன் விடுதலையானார். பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் 'ஹோமம்' வளர்த்து பூசை நடத்தப்படுவதை நிறுத்தக் கோரி, பல்லடம் கழகத் தோழர்கள் உரிய அதிகாரியிடம் கோக்கை மனு அளித்தனர். ஹோமம் நிறுத்தப்பட்டது.

**நவம்பர் :** தூத்துக்குடியில் சாதி தீண்டாமைக்கு எதிராக ஒரு நாள் பரப்புரைப் பயணத்தை கழகத் தோழர்கள் நடத்தினர் (நவ.20), திருப்பூரில் ஒரு நாள் பெரியாரியல் பயிலரங்கம் (நவ.21) நடைபெற்றது. நவம்பர் 6 ஆம் தேதி தொடங்கி 13 ஆம் தேதி வரை கழகத்தில் முழு நேரத் தொண்டாற்றும் தோழர்களுக்கு திண்டுக்கல்லில் 8 நாட்கள் சிறப்பு பயிற்சி முகாம் நடந்தது.

கழக சார்பில் இவை தவிர பொதுக் கூட்டங்கள் தெருமுனை கூட்டங்கள் தமிழகம் முழுதும் பரவலாக நடந்தன.

## 'குடிஅரசு' வழக்கு: கி.வீரமணியின் மறு முறையீட்டு மனுவும் – தள்ளுபடி

சென்னை உயர்நீதிமன்றத்தின் அமர்வு 'குடிஅரசு' வழக்கில் வழங்கிய தீர்ப்புக்குப் பிறகு கி.வீரமணி, மற்றொரு வழக்கை மூன்றாவது முறையாக உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்தார். ஏற்கனவே தாங்கள் தாக்கல் செய்த வழக்கு மனுவில் குறிப்பிடாமல் விடுபட்டவற்றின் அடிப்படையில் இந்த வழக்கு மனுவை தாக்கல் செய்வதாக கி.வீரமணியின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கூறினார். கழக வழக்கறிஞர் எஸ். துரைசாமி, இந்த மனுவை விசாரணைக்கு ஏற்கக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால் மனுவை நீதிபதி டி. மதிவாணன் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டார்.

கி. வீரமணி தாக்கல் செய்த புதிய மனுவுக்கு எழுத்துப்பூர்வமான பதிலை வழக்கறிஞர் எஸ். துரைசாமி தாக்கல் செய்தார். வீரமணி தாக்கல் செய்த புதிய மனுவில் புதிதாக 12 பத்திகள் சேர்க்கப்பட்டிருந்தன. புதிதாக ஏதும் இல்லை. ஏற்கனவே கூறிய வாதங்களையே முன் வைத்திருந்தார்கள். உயர்நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்த நிலையிலேயே கி.வீரமணி உச்சநீதிமன்றத்துக்கும் சென்றார். உச்சநீதிமன்ற நீதிபதிகள் - இது மேல்முறையீட்டுக்கு தகுதியற்றது. உயர்நீதிமன்றத்தில் நடக்கும் பிரதான வழக்கிலேயே இதை முடித்துக் கொள்ளலாம் என்று கூறி வீரமணியின் மனுவை விசாரணைக்கு ஏற்காமலே தள்ளுபடி செய்து விட்டனர். இந்த நிலையில் கி. வீரமணியின் மறு முறையீட்டு மனுவையும் உயர்நீதிமன்ற நீதிபதி டி. மதிவாணன் ஏற்கவியலாது என்று கூறி கடந்த டிசம்பர் 23 ஆம் தேதி தள்ளுபடி செய்து விட்டார்.

'குடிஅரசு' தொகுதிகளை வெளியிட்ட "குற்றத்துக்காக" பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமக்கு ரூ.15 லட்சம் இழப்பீடு தர வேண்டும் என்று கோரும் பிரதான வழக்கு மட்டும் உயர்நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 30th December 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.